
கட்டுரைக் களஞ்சியம்



“[illegible] கனிந்து...”

கட்டுரைக் களஞ்சியம்

'கம்பன் அடிப்பொடி'
சா. கணேசன்

கம்பன் கழகம்
கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002.

விற்பனை உரிமை :

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

விலை : ரூ. 12-00

கிடைக்குமிடம்
மணிவாசகர் நூலகம்
12-B, மேல சன்னதி சிதம்பரம்-608 001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600 001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625 001
3/4 ராஜ வீதி கோயமுத்தூர்-641 001
சென்னை போன்: 512996, சிதம்பரம் போன்: 2799

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

பதிப்புரை

'களஞ்சியம்' என்ற சொல்லுக்கும் 'கற்பகம்' என்ற சொல்லுக்கும் பொருள் வேறுபாடு இருந்தாலும் பயன் சுரப்பதிலே மாறுபாடு கிடையாது. வேண்டியதையெல் லாம் வேண்டியாங்கு வேண்டியவர்க்கு வாரி வழங்கும் கற்பகத் தருவைப்போல அள்ள அள்ளக் குறையாது பெரு நிதியம் வழங்கும் 'களஞ்சியம்' என்று ஆன்றோர் கூறுவர். கற்பகம் என்ற சொல்லோடு மிக நெருங்கிய சம்பந்தம் உடையவர் அமரர் கம்பன் அடிப்பொடி அவர்கள். அவர்கள் இல்லத்திற்குப் பெயர் கற்பக நிலையம். அவர்கள் ஆரம்பித்த பள்ளிக்குப் பெயர் கம்பன் கற்பகம். எல்லா வற்றிற்கும் மேலாக அவர்கள் குலமுதல் பிள்ளையார்பட்டி விநாயகர் பெயர் கற்பகப் பிள்ளையார் என்பதே. அந்த வகையில் அவர்களுடைய எழுத்துக்களை முதன் முதலாகத் தொகுத்து வழங்கும்போது 'களஞ்சியம்' என்ற பெயரோடு வழங்க அவன் அருளால் நாங்களும் முடிவு செய்தோம்.

அவன் அருள் சித்திக்கும்போது சாதிக்க முடியாத அற்புதங்கள்தான் எதுவும் உண்டா? அப்படிச் சாதித்ததே, அவர்கள் பெயரால் வெளிவரும் முதல் நூலாகிய இந்நூல். இதை வெளிக்கொணரத் தாமாகவே முன் வந்து, உடன் யோசனையும் நல்கி, அச்சிட்டும் உதவிய, நல்லவற்றிற்கு உதவிக் கரம் நீட்டுகின்ற கருணை நெஞ்சமும் உடைய ஏவி. எம் நிறுவனத்தினர் ஆவார். அவர்களுடைய ஆகிவந்த கைராசியால் இந்நூல் வெளிவருவதோடல்லா மல் மீதமிருக்கிற கம்பன் அடிப்பொடி அவர்களுடைய எழுத்துக்களையெல்லாம் தொடர்ந்து நூல் வரிசை கொள்ளச் செய்யும் அது என்பதில் சந்தேகமும் உண்டோ?

'தோயாத் துறையிலான்' என்று எந்த வார்த்தை களால் தன்னுடைய தெய்வமாகிய கம்பனை, கணேசனார்

போற்றிப் பாராட்டினார்களோ, அந்த வார்த்தைகளைத் தவிர வேறு வார்த்தையை 'சொல்லினால் சொலக் கற்றிலம்'யாம். தொட்ட தொட்ட துறையெல்லாம் தம் நுண்ணறிவும், கூர்த்த மதியும் வெளிப்படும் வண்ணம் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் உழைத்தவர்கள். அவர்களுடைய பல துறை அறிவும் பலரும் அறியும்வண்ணம், பல்வேறு நேரங்களில் பல்வேறு துறைகள் பற்றி எழுதப் பெற்ற அவர்களுடைய கட்டுரைகளை இந்த முதல் நூலினில் தொகுத்துக் கொடுத்துள்ளோம்.

கம்பன் அடிப்பொடி என்று கம்பன்பால் மாறாத காதலால் அவர்கள் தன் பெயரை மாற்றிக் கொண்டதை வைத்து, கணேசனாரை நினைப்பவர்கள் எல்லாம் அவரை ஒரு கம்பன் இலக்கிய வல்லுநர் என்று மட்டுமே கணித்திருந்தால் அது போன்ற பெருந்தவறு இருக்க முடியாது. இந்தக் கட்டுரைகளைப் படிப்பவர்கள், அவர்களுடைய ஆன்மீக, அரசியல், சமய, கல்வெட்டு, தொல் பொருள் ஆய்வு, வைதிக நெறி போன்றவற்றிலுள்ள மதிக் கூர்மையையும், தெளிந்த நல்லறிவையும் வியந்து மகிழ்ந்திடுவார்கள். ஏனென்றால் அவர்கள் எதைச் செய்தாலும், அவர்கள் அடிக்கடி சொல்வார்களே அந்த 'அந்தரங்க சுத்தி' என்ற வார்த்தை, அதே அந்தரங்க சுத்தியோடு செய்தவர்கள். எவ்வளவு செய்கிறோம் என்பதைவிட செய்வதை நறுவிசாகவும், சிறப்பாகவும் செய்யவேண்டும் என்பதிலே கவனம் செலுத்தியவர்கள்.

இந்த எழுத்துக்கள் பல்வேறு காலங்களில், பல்வேறு காரணங்களுக்காக எழுதப் பெற்றவை. அவர்கள் இவைகளைப் பத்திரமாக வைத்திருந்ததாலேயே இன்று நம்மால் இப்படித் தொகுக்க எளிதாய் முடிந்தது. அவர்களுடைய மணிமணியான கையெழுத்து எத்தனை வருடங்களானாலும் அப்படியே அச்சாக அழகாக, இருக்கின்றன. அவை சொற்பொழிவிற்காக அவசரமாகத் தயாரிக்கப் பெற்றவை என்பதும் தெரிய வருகின்றது. உதாரணத்திற்கு

மஹாகவி பாரதியைப் பற்றிய கட்டுரையில், பாரதி வந்த தேதி குறிப்பிடாது விடுபட்டுப் போயிருக்கிறது. இப்போது இந்து மதாபிமான சங்கத்தில் கேட்டறிந்ததில் அந்நாள் எது என்று அறிய நேர்ந்தது. கம்பன் அடிப்பொடி அவர்கள் தம் வாழ்நாளில் தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக எழுதிய ராஜராஜன் என்ற சிறு நூலும், பிள்ளையார்பட்டி நகரக் கோயிலுக்காக எழுதிய பிள்ளையார்பட்டித் தல வரலாறு என்ற சிறு நூலும் வெளிவந்தன. ஆக இவை இரண்டும் குறிப்பிட்ட காரணத்திற்காக எழுதப் பெற்றன. ராஜராஜன் நூலுக்கு கம்பன் அடிப்பொடி அவர்கள் எந்த முகவுரையும் எழுதவில்லை. பிள்ளையார்பட்டித் தல வரலாறு நூல் முதற்பதிப்பு 1955-ல் வெளிவந்தாலும், அதனுடைய இரண்டாம் பதிப்பு அவர்கள் அமரரான பிறகு 1983-ல் வெளிவந்தது. அவர்கள் அமரர் ஆவதற்கு முன் அதற்கு எழுதிய முகவுரையில் இப்படி எழுதியிருக்கிறார்கள்:

"ஏதோ தலபுராண அடிப்படையில் எழுதி வெளியிடுவ தானால் எளிதாகவும் இருந்திருக்கும்; நானும் இசைந் திருப்பேன். வரலாற்று அடிப்படையில் நூல் அமையவேண்டு மாயின் பாடுபெரிது. அன்றியும் வரலாற்று நூலறிவு, கல்வெட்டு ஆராய்ச்சி, இலக்கியப் புலமை, சாத்திரத் தேர்ச்சி, சமய ஒழுக்கம், முதலான தகுதிகளை உடையவர் களே மேற்கொள்ள வேண்டிய அருமைப்பணி இது.

20-9-1955-ல் வெளிவந்த இதன் முதற் பதிப்புத் தீர்ந்து பல ஆண்டுகள் ஆகியும், பல அன்பர்கள் தூண்டிக் கொண்டே இருந்தும், இந்த இரண்டாம் பதிப்பு இன்றுதான் வெளிவருகிறது. காரணம் எளியேன் தன் ஆற்றமாட்டாக் குறையே. ஒன்றுக்கும் பற்றாத சிற்றறிவுடையேனை இப் பணியில் புகுவித்துப் பெரும் பேறருளிய எங்கள் குலமுதலாம் தேசிவிநாயகப் பிள்ளையார் திருவடி மலரினைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகிறேன்.''

அவையடக்கமாக அவர்கள் தம்மை இப்படிக் கூறிக் கொண்டார்கள். அவர்களுடைய வழிபடு தெய்வமாகிய

கம்பன்கூட பாற்கடலை முழுதும் துய்க்கப் பார்க்கிற பூனை யாகத்தானே தன்னைச் சொல்லிக் கொண்டான்! பாற்கடலையே இராமாயண வடிவில் இலக்கிய அமுதமாக ஈந்தவன் அவன். அந்த இலக்கிய அமுதத்தின் சாரத்தை கம்பன் திருநாள் என்ற பேரால் நமக்கு வாரி வழங்கிய களஞ்சிய கர்த்தா கம்பன் அடிப்பொடி அவர்கள். தூய்மை, வாய்மை, எளிமை இவற்றின் கொள்கலமாக அமைந்த அவர்கள் தொண்டாற்றுவதிலே பெரு வீரர். அதனாலேயே இவர்களுடைய தொண்டையும், திறமையான தலைமையை யும் இளையாத்தக்குடியில் நடந்த வித்வத்சதஸில் கணித் தறிந்த காஞ்சிப் பெரியவர்கள் இவரைத் 'தொண்டர் குல சேகரன்' என்றே பாராட்டி மகிழ்ந்தார்கள்.

உழைப்பில் காட்டிய உண்மையே அவர்களுடைய வெற்றியின் ரகசியம். இல்லாவிட்டால் ஒரு தனி மனிதனாய் 1939-லே அடிமை நாட்டில் அவர்கள் ஊன்றிய கம்பராமா யணப் பணி என்ற விதை இன்றைக்குப் பல்கிப் பெருகி, தழைத்து நாட்டின் மூலை முடுக்கிலெல்லாம் ஒலிக்குமா? பட்டிமண்டபம், கவியரங்கம், செயலாளன் என்ற சொற்க ளெல்லாம் அவர்கள் தந்த களஞ்சியச் செல்வங்கள் ஆகும்.

அவர்கள் ஆரம்பித்த கம்பன் திருநாளின் பொன் விழா ஆண்டுத் தொடக்கத்தில் அவர்களுடைய எழுத்துக்களை வெளிக் கொணருவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியும், ஆத்ம திருப்தியும் அடைகிறோம். இதைப் படிக்கும் நீங்களும் நிச்சயம் அங்ஙனமே உணர்வீர்கள்.

30-3-1988
கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி—*623002*

—கம்பன் கழகத்தார்



உ
முருகா.
"வேலை வணங்குவதே வேலை"

தொலைபேசி
846666

கிருபானந்தவாரி
107, சிங்கண்ணசெட்டித்தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை - 600 002

நாள் 19. 1. 88

சாற்றுக்கவி

காரைக் குழகன் கனகசபை யாருரைக்கும்
வாரத் தெய்வம் வழங்கினான் - ஆரமுதம்
இந்திரன் போல இனிது பருகுவோர்
சந்ததம் வாழ்வார் தழைத்து

அன்பன்
கிருபானந்தவாரி

உள்ளுறை

1. பிள்ளையார்பட்டி

பிள்ளையார்பட்டி எனப் பெயர்கொண்டு விளங்கும் இவ்வூர் சென்னை மாநிலத்தில்[1] இராமநாதபுரம்[2] மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் செல்லும் பஸ் வழியில் குன்றக்குடிக்கு அடுத்து இருக்கிறது இது.

பிள்ளையார்பட்டி என்னும் பெயரே, இது விநாயகப் பெருமான் கோவில் கொண்டருளும் ஒரு சிற்றூர் என்பதை நன்கு விளங்கவைத்துக் கொண்டிருக்கிறது, இல்லையா?

இந்த ஊருக்குப் பிள்ளையார்பட்டி என்பதே இன்று நாடறிந்த பெயராயினும் ஈக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச்வரம், இராசநாராயண புரம் என்று வேறு ஐந்து பழம்பெயர்கள் உண்டு. மருதங்கூர், தென்மருதூர், கணேசபுரம், கணேச மாநகரம், பிள்ளை நகர் போன்ற பெயர்கள் பிற்காலப் பாடல்களில் காணப்பெறுகின்றன.

இங்கு ராஜகோபுரங்களுடன் கூடிய பெரிய திருக் கோவில் மிக்க பொலிவுடன் விளங்குகிறது. ஆகம நெறிப்படி அருமையாகப் பூசனைகள் நடைபெறும் இக்கோவிலின் திருப்பணியைக் கூர்ந்து நோக்குவோ மானால், நான்கு முறையாகத் திருப்பணி நடந்திருக் கின்றமை நன்கு புலனாகும்.

முதன் முதலாக நடந்த திருப்பணி, இன்று காணப் பெறும் திருக்கோவிலின் தெற்குப்புறத்தில் கீழ்மேலாக நீண்டு கிடக்கும் குன்றில் வடமுகமாக மலையைக் குடைந்து சமைக்கப்பெற்ற குடைவரைக்கோவில்[3] (Rock-cut Temple) ஆகும்.

இந்தக் குடைவரைக் கோயிலுக்குள் நாம் நுழைந்தால் முதலில் உள்ள கீழ்மேல் ஓடிய பத்தி காணப் பெறும். அதற்கு அடுத்து நான்கு தூண்கள் இடைநிற்கத் தென்வடல் ஓடிய இரட்டைப்பத்தி மண்டபம் காணப் பெறும். அம்மண்டபத்தின் கீழ்ப்புறப் பத்தியின் தென்பால் மலைநெற்றியில் ஆறு அடி உயரம் உள்ள பிள்ளையாரின் காம்பீர்ய நிலையில் அமைந்த, இருந்த திருக்கோலம், அர்த்த சித்திரம் (Bas-relief) ஆக வடக்கு நோக்கி விளங்கக் காண்போம். இந்த மூர்த்திதான் பிள்ளையார்பட்டிப் பெருந்தெய்வம்; கற்பகப் பிள்ளையார் ஆன தேசிவிநாயகப் பிள்ளையார்.

அதற்கு மேற்கே அதே மலைநெற்றியில் தெற்கு நோக்கிய பல்லவ மன்னனின் உருநாட்டு நம்முடைய பாராட்டையும் நன்றியறிதலுடன் கூடிய வணக்கத்தையும், ஏற்றுக் கொள்ளச் சித்தமாக விளங்குவதைக் காண்போம்.

அந்த மேல்புறப் பத்தியின் நடுவே கிழக்குப் பார்த்த திருவாயிலுடன் கூடிய கருவறை (கர்ப்பக் கிருஹம்) தூங்கானை மாட[4] அமைதியிற் குடையப் பெற்றுளது. அதன் நடுவிலே குடைந்தமைத்த பெரியதொரு மகாலிங்கம் பொலிந்தினிது துலங்கக் காண்போம். இந்த மூர்த்திதான் திருவீசர் என்று வழங்கும் திருவீங்கைக்குடி மகாதேவர்.

அங்கிருந்து சிறிது வடக்கே வந்து, மேற்கே சென்று தெற்குப் புறமாகப் பார்த்தோமானால் கருவறையின் வடபுற வெளிச்சுவரில் வடக்குப் பார்த்த நிறைவுறாத அர்த்த சித்திரமாக அமைந்த மற்றொரு உருநாட்டை யும் காண்போம். இதுவும் முன்னே கண்ட பல்லவ மன்னனையே ஒத்திருப்பதை உணர்வோம்.

இவை யாவும் அந்த மலையைக் குடைந்து அங்கங்கே அமையச் செய்திருக்கின்றார்களே யன்றி, எவையும் செய்துகொண்டுவந்து பொருத்தப்பெற்றவை அல்ல என்பதை வெகு எளிதில் தெரிந்துகொள்வோம். இந்த அளவில் உள்ள குடைவரைக் கோவில்தான் முதல் திருப்பணியாகும்.

கீழும் மேலும் நான்முகச் சதுரமாகவும் இடையில் எண்முகப் பட்டகமாகவும், சதுரங்களில் மலர்ந்த தாமரை விளங்க அமைந்திருக்கும் தூண்களையும், அவற்றின் மேல் இலங்கும் போதிகைகளையும் நோக்கும் போது, இது ஒரு பல்லவர் காலப் படைப்பே என்பது நன்கு புலனாகும்.

மேலும் கருவறையுள் விளங்கும் மகாலிங்கம் யாண்டும் பட்டை வடிவம் பெறாமல் முழுதும் உருண்டை வடிவமே பெற்று விளங்குவதும் பல்லவர் காலப் படைப்பே என்பதை வலியுறுத்தும். அது அன்றி யும், பிள்ளையார் நான்கு கரங்களுடன் அல்லாமல் இரு கரங்களுடன் வீற்றிருந்தருள்வது பல்லவர் காலத் திருப் பணியே என்பதை ஐயத்திற்கு இடமின்றி வெளிப் படுத்தும். இவையல்லாமல் அர்த்த சித்திர அமைப்பாக இலங்கும் உருநாட்டு இரண்டும் பல்லவர் காலத்தையே உணர்த்திக் கொண்டிருப்பதுடன் 11வது எண்ணுள்ள கல்வெட்டான ஈக்காட்டூர் என்ற எழுத்துக்கள் 1200

ஆண்டுகட்கு முற்பட்ட, அதாவது பல்லவர் கால எழுத்துக்களாகவே விளங்குகின்றன. இக்காரணங்களால் இந்தக் குடைவரைக் கோவிலைச் சமைத்தவன் ஒரு பல்லவ மன்னனே என்பது உறுதி. ஆனால் அவன் யார் என்பது தான் கேள்வி.

மாமல்லை, வல்லம், பல்லாவரம், மகேந்திரவாடி மாமண்டூர், மண்டபப்பட்டு, சீயமங்கலம், நாமக்கல் திருச்சிராப்பள்ளி, நார்த்தாமலை (நகரத்தார்மலை) குடுமியான்மலை, திருக்கோகர்ணம், திருமெய்யம் பேரையூர், மலையடிப்பட்டி, திருக்கோளக்குடி, குன்றக் குடி, முதலான கோவில்களைச் சென்று பார்த்துவந்தால் பிள்ளையார்பட்டி முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி. 615—630) அல்லது முதலாம் நரசிம்மவர்மன் (கி. பி. 630—668) ஆகிய இருவருள் ஒருவர் காலத்தில் அமைந்த தாய்க் கூறிவிடலாம்.

விழுப்புரம்—புதுச்சேரி ரயில் வழியில் சின்னபாபு சமுத்திரத்திற்குத் தெற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள மண்டபப்பட்டு என்ற ஊரில் அமைந்த குடை வரைக் கோவிலின் வாயிலில் காணப்பெறும்,

கல். மரம், சுதை, உலோகம் இல்லாமலே
பல்லவன் கோவில் சமைத்தான்

என்ற கல்வெட்டைக் கொண்டு மகேந்திரவர்மனால் சமைக்கப்பட்ட முதற் குடைவரைக் கோவில் அதுதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அங்கு பிரமன், திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் கோவில்கொண்டிருக்கின்றனர். இம்முறையில் அவன் கண்ட வெற்றி, தக்க மலை கண்ட இடங்களில் எல்லாம் குடைவரைக் கோவிலை அமைக்கத் தூண்டியிருக்க வேண்டும். அப்படி அவன் அமைத்த கோவில்களுள்

பிள்ளையார்பட்டியும் ஒன்றாக இருக்கலாம் என்று சிலர் கருதக்கூடும். ஆனால் அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவன் மகனான முதலாம் நரசிம்மவர்மனே இதைச் சமைத்தவன் என்று கொள்ளுவதே பொருந்துவதாயிருக் கிறது.

முதலாம் நரசிம்மவர்மன் பேராற்றலும் பெரும் பக்தியும் உடையவன். அறுபத்து மூன்று நாயன்மார் களுள் ஒருவரும், சிறுத்தொண்டர் என்ற பெயர்பெற்றுப் பெரும்புகழ் கொண்டவருமான பரஞ்சோதியார் இவன் சேனைத் தலைவராவார். இரண்டாம் புலிகேசி என்னும் சாளுக்கிய மன்னனை எதிர்த்து வாதாபிக்குச் சேனை நடத்திச் சென்று புலிகேசியும் புறங்காட்டி ஓடுமாறு வெற்றிகொண்டு வாதாபியை அடிப்படுத்தி அங்குள்ள பல வளங்களையும் கொணர்ந்து நரசிம்மவர்மன் முன் வைத்தவர் பரஞ்சோதியாரே. இவ்வெற்றி கிட்டியது கி.பி. 642-ல் என்பர் வரலாற்றாராய்ச்சியாளர்.

படைவலியும், மனவலியும் நிறைந்த மாவீரனாகிய புலிகேசியை அவன் பதியிலேயே வெற்றிகொண்டு,

> பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
> இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்த[5]

பரஞ்சோதியாரின் பேராற்றல் 'இரணஜயன்' ஆன நரசிம்மவர்மனுக்கே வியப்பூட்டியதாம். அப்பொழுது உடனிருந்த அமைச்சர்கள்,

> மதிஅணிந்தார் திருத்தொண்டு
> வாய்த்தவலி உடைமையினால்
> எதிர்இவர்க்கு இவ்வுலகில்
> இல்லைஎன எடுத்துரைத்தார்[6]

அதைக் கேட்ட நரசிம்மவர்மன் பதைபதைத்து "அந்தோ கெட்டேன்! என்ன அபசாரம் செய்து விட்டேன்! தங்கள் பெருமையை நானும் அறிய முடியாதவாறு அத்துணை அடக்கமாகப் பணியாற்றிக் கொண்டிருந்திருக்கிறீர்கள். இனியும் தங்களை என் கீழ் சேவகம் செய்ய அனுமதிப்பனேல் அது எம்பெருமானுக்கே இழைக்கும் ஒரு பெரும் பிழையாகும். இந்நாள்வரைத் தங்கள் தகைமையை உணராமல் பணி கொண்ட என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று பணிந்திறைஞ்சி அவர்க்கு நிறைநிதியும், பெருநிலமும் அளித்துச்

'செம்மைநெறித் திருத்தொண்டு
செய்யும்' என விடைகொடுத்தான்.'

மன்னவனிடம் விடைபெற்றுத் திருச்செங்காட்டங்குடி என்னும் தமது ஊருக்குச் சென்று அங்கு ஒரு திருக்கோவில் எடுத்தார். அதற்குக் கணபதீச்சுரம் என்று பெயர் கொடுத்தார். வாதாபிப் போரினால் இவர்க்குக் கிட்டியது புகழ் நிறைந்த வெற்றி மட்டுமில்லை. ஆங்குப் பெருவழக்கில் இருந்த பிள்ளையார் வழிபாடு இவர் மனத்தை ஈர்க்க, ஓங்கார உருவினன் பால் நீங்காத பெரும் பக்திச் செல்வத்தையும் இவர் பெற்றிருக்கிறார். போர் நடந்த நாள் எல்லாம் அப்பெருமானை வழிபட்டு வந்திருக்கிறார். வெற்றியும் இவர்க்கே உரிமையாயிற்று. அங்ஙனம் தமக்கு வெற்றி அருளிய கணபதிப் பெருமானை நினைந்தே நன்றிப் பெருக்குடன் 'கணபதீச்சுரம்' எனப் பெயர் தந்தார் என்பர் ஆராய்ச்சியாளர்.

பொடிநுகரும் சிறுத்தொண்டர்க்கு
அருள்செய்யும் பொருட்டாகக்

கடிநகராய் வீற்றிருந்தான்
கணபதீச் சுரத்தானே[8]

செங்காட்டங் குடிமேய
சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனல்ஏந்தி
விளையாடும் பெருமானே![9]

என்றெல்லாம் அவர் காலத்தவரான சம்பந்தப்பெருமான் சிறுத்தொண்டரின் வேண்டுகோளின்படி ஆங்குப் போந்தருளி இரு பதிகங்கள் அருளிச் செய்திருக்கிறார்.

கயமுகாசுரனைக் கொன்ற பழி விலகச் சிவபிரானை விநாயகப் பெருமான் பூசித்ததான ஐதிகத்தை இத்தலம் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது. சிறுத்தொண்ட நாயனாருக்குச் சிவபெருமானிடத்தும், பிள்ளையாரப் பனிடத்தும் முற்றி இருந்த பெரும் பக்தியைப் புலப்படுத்துவதே இக் கோவிலின் தோற்றம் என்பதை கொண்ட பெயராலும் குறிக்கும் ஐதிகத்தாலும் நன்குணரலாம்.

இந்தக் கோவில் திருப்பணி நடைபெறும் காலத்தும் திருப்பணி நிறைவேறிக் கடவுண் மங்கலம், (தெய்வப் பிரதிஷ்டை) நிகழ்ந்த காலத்தும் நரசிம்மவர்மன் திருச்செங்காட்டங்குடிக்குப் போய்வந்திருக்கக் கூடும். அதனாலும், சிறுத்தொண்டர் உரையாலும் இவனுக்கும் பிள்ளையாரிடம் பேரன்பு சுரந்திருக்க வேண்டும்.

வாதாபி வெற்றிக்குப் பின் பல்லவர் ஆட்சி மிக்க அமைதியுடன் நடைபெற்றிருக்கிறது. அந்தக் காலத்தே தான் நரசிம்மவர்மன் தன் தந்தை நிறைவேற்றாது விட்ட கோவில் திருப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந் திருக்கின்றான். வாதாபி வெற்றியும், சிறுத்

தொண்டரும் திருச்செங்காட்டங்குடியும் இவனுள்ளத்தே பதிந்து விட்டமையால் அந்த ஐதிகத்துடன் குடைவரைக் கோவில்கள் சமைக்கத் தொடங்கியிருக்கக் கூடும் என்று கொள்ளுவதே ஏற்புடைத்தாகும்.

அங்ஙனம் அமைக்கப்பெற்ற குடைவரைக் கோவில்களுள் பிள்ளையார் பட்டியும் ஒன்றாதல் வேண்டும். சிற்ப அமைதி, எழுத்துக்களின் தோற்றம், உருநாட்டு முதலிய காரணங்களால் நரசிம்மவர்மன் காலத்தில் உண்டானது இக்குடைவரைக் கோவில் என்று கொள்ளுவதே சரி.

எனவே, பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோவில் நரசிம்மவர்மனின் ஆட்சிக் காலத்தில் வாதாபி வெற்றிக்குப் பின்னர், அதாவது கி.பி. 642-க்கு மேல் 668-ஆம் ஆண்டுக்குள் சமைக்கப் பெற்றிருக்க வேண்டும். எனவே இந்த முதல் திருப்பணி சுமார் 1300 ஆண்டுகட்கு முற்பட்டதென்பதில் சிறிதும் ஐயமில்லை.[10]

□ □ □

அடிக்குறிப்புகள்

1. தமிழ்நாடு.
2. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
3. குடைவரைக் கோவில் என்பதே 'குடை கோவில்' ஆகிப் பின்னர் 'குகைக் கோவில்' என்று மருவி வழங்குகிறது.
4. கஜப்பிருஷ்டம் என்பர் வடநூலோர். அதாவது யானையின் பின்பாகம்போல் அமைந்த கருவறை.

5. பெரிய புராணம் - சிறுத்தொண்டர் புராணம்
6. ” ”
7. ” ”
8. திருமுறை—1 (ப.285-பா. 10)
9. ” —3 (ப.260-பா. 1)
10. பின்னர் கிடைத்த சான்றுகளால், பிள்ளையார் பட்டிக் குடைவரைக் கோயில் கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதன்று என்பது புலனாகிறது.

□

2. தியான ஸ்லோகங்கள்

உலகிலேயே தெய்வத் திருக்கோயில்கள் மண்டிப் பொலியும் நாடு இந்திய நாடு. அதிலும் தென்னகமான தமிழ்நாட்டில்தான் சாலவும் ஆலயங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. அதனாலேதான் மணிவாசகரும்,

தென்நாடு உடைய சிவனே போற்றி!
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி![1]

என்று வியந்து, மகிழ்ந்து, பாடிப் பரவினார் போலும்!

இத்தனை இத்தனை ஆலயங்கள் ஏன் தோன்றின? தோன்றிக்கொண்டே யிருக்கின்றன? "வழிபாட்டிற் காகவே!" என்பது தக்க விடையாகுமா? அங்ஙனமாயின் கோயில் என்ற சொல் பொருளற்றதாக அன்றோ போய்விடும்? இறை உறை இடம் என்பதன்றோ கோயில் என்பதன் பொருள்?

திருவுருவைக் கடவுண் மங்கலம் (பிரதிஷ்டை) செய்து அதை வழிபடுவதே நம்மவர் மரபு. அந்தத் திருவுருவை எழுந்தருளுவித்து அதைப் பாதுகாத்தற் பொருட்டே கோயிலும் முழுக்காட்டல் (அபிஷேகமும்) போன்றவையும் ஏற்படலாயின.

மாடக்குச் சித்திரமும்
மாநகர்க்குக் கோபுரமும்[2]

(கோயிலுக்குத் திருவுருவமும், பெருங்கோயிலுக்குக் கோபுரமும்) என்ற நன்னூலார், கருத்து இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

பாடல்பெற்ற சிவாலயங்களும், மங்களாசாசனம் பெற்ற விண்ணகரங்களும் மிக மிகச் சிலவே. அவையல்லாமல் ஆயிரம் ஆயிரம் கோயில்கள் தமிழகத்திலே காட்சி தருகின்றன. அவற்றுள் பாடல் பெற்றவை எத்தனையோ? அது நமக்குத் தெரிய வழி இல்லை இன்று. பல கோயில்களின் அமைப்பையும் சிற்பச் சிறப்பையும், திருவுருவப் பொலிவையும் நோக்கும்போது வியப்பும் மலைப்புமே ஏற்படுகின்றன நமக்கு.

கல், செம்பு, மரம், சுதை, சுடுமண் ஆகியவற்றால் பொலியும் திருவுருவங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. பல அவ்வத் தலத்தின் தத்துவத்திற்கும், வரலாற்றுக்கும், அல்லது நிர்மாணித்தவர்களின் ஈடுபாட்டிற்கும் ஏற்ப உருக்கொண்டு மிளிர்கின்றன. அன்றியும் ஆங்காங்கு காணப்படுகிற திருமேனிகட்கு ஏற்பத் தல புராணங்கள் எழுதப்பட்டுள்ள செய்தியும் நமக்குத் தெரியும்.

அப்படியே பாடல் பெற்ற பல தலங்களில் பாடல்களில் கண்ட வண்ணம் திருவுருவங்களை அடித்தோ வடித்தோ, எழுந்தருளுவித்து வழிபாடு செய்துவந்த—வருகிற—செய்திகளும் நமக்குக் கிடைக்கின்றன. இந்த வழியில், தஞ்சைத் தளிக் குளத்தைப் பெருவுடையார் கோயிலாகச் சமைத்து, தெட்சிணமேரு என்று ஓங்கி நிற்கும் விமானத்தை எடுப்பித்த முதலாம் இராசராசனே முன்னோடியாகத் திகழ்கிறான்.

அவனுக்குப் பின்வந்த சோழர் குலத்தோன்றல்கள் சிலர், அவனைப் பின்பற்றி, பல திருமேனிகளை வடித்தெடுத்து எழுந்தருளுவித் திருக்கிறார்கள். அங்ஙனம் எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகட்குப்

பாடல்களில் வரும் சொல்லாலேயே திருப்பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நமக்கு அந்தந்தக் கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள் தெளிவாகப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இனி எடுத்துக்கொண்ட பொருளுக்கு வருமுன் ஒரு சிறிது படிமக்கலை பற்றியவற்றைப் பார்ப்போம்.

இறைவன் திருவுருச் சமைப்பதில் உலகிலேயே முதன்மை பெற்று விளங்குவது தமிழகமே! ஆம்; புத்தரும், கிறிஸ்துவும் தோன்றுவதற்குப் பலகாலம் முன்னரேயே படிமக்கலை தமிழகத்தில் வளம்பெற்று விட்டது. மிகப் பழங்காலத்திய பலவகைத் திருவுருவங் களை இன்றும் நாம் காணலாம். அவை எல்லாம் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்கள் அகக்கண் கொண்டு கண்டவையே. அதாவது அவர்கள் தியானத்தில் தரிசித்தவையாம். அவர்கள் கண்ட அந்த உருவங்கட்குச் சொல்லால் வடிவு தந்தனர். அவற்றைத் தியான ஸ்லோகம் என்பர். நமது ஆகம, சிற்ப, நூல்களில் அவைகளை நாம் காணலாம். அவை யாவும் முன்னாளில் தேசிய மொழியாகவும், கலைமொழியாகவும் இருந்த சம்ஸ்கிருதத்தில் ஆக்கப்பட்டவை.

அந்தத் தியான ஸ்லோகங்களே நம் நாட்டில் காணப்படும் மூர்த்தங்கள் (இறையுருவங்கள்) அனைத் திற்கும் அடிப்படை என்பது பல்லோரும் பகரும் ஒன்று. ஆனால், நான் அவர்களிலிருந்து சிறிது மாறுபடுகிறேன். தியான ஸ்லோகங்களின் அடிப்படையிலேயே மிகப் பல படிமங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் ''எல்லாமும்'' என்பதை ஏற்க முடியவில்லை. சைவ, வைணவ சமய குரவர்கள் அழகழகான பாசுரங்கள் பலவற்றை அற்புதமாகத் தந்தருளியுள்ளார்கள் அவற்றில் எத்தனை

எத்தனையோ திருவுருவ அமைதிகள் புலப்படுத்தப் படுகின்றன. அவற்றில் சிலவற்றை அடிப்படையாக—ஆம்; தியான ஸ்லோகமாக—ஏற்றுத் தமிழகத்தில் தெய்வத் திருமேனிகள் பல சமைக்கப்பட்டிருக்கின்றன.

இனி அப்பர் பெருமான் அருளிய பாசுரங்கட்கேற்ப, ஓர் ஊரில் உள்ள இரு கோயில்களில், இரு வேறுபட்டு அமைந்துள்ள ஒரு மூர்த்தத்தைக் காண்போம்.

காவிரிப்பூம்பட்டினம் என்னும் புகார் நகரம் ஒரு பெரிய துறைமுகப்பட்டினம். இன்று சிறுசிறு கிராமப் பகுதிகளாகக் காணப்படும் பல ஊர்களும் இணைந்து ஒன்றாய் விளங்கிய காலம் அது. அப்பொழுது அப்பர் பெருமான் அங்கே சிவத்தல வழிபாட்டிற்காக வந்திருக்கிறார். அந்நாளில் அவ்வூர் எல்லையுள் உள்ள பல சிவத்தலங்கட்கும் சென்று வழிபட்டிருக்கிறார். அவற்றை யெல்லாம் இங்கே நாம் விவரிக்க வேண்டா.

அன்று காலையில் திருவெண்காட்டில் வழிபாடு இயற்றியிருக்கிறார். சிவன்றன் கோலங்களிலே பிக்ஷாடனத் திருக்கோலத்தில் அன்று உள்ளம்பற்றி நின்றது போலும்! ஆம்; ஆணவத் திமிரையும், அறிவுச் செருக்கையுமே பறிக்க வந்த திருக்கோலமல்லவா? அதில், அப்பர் பெருமான் சிந்தை பறிகொடுத்து, அதே நினைவாய் இருந்திருப்பின் வியப்பேதும் உண்டோ?

அங்கே இறைவனைப் பாடுகிறார் தாண்டக வேந்தர். பாடல்களில் பிக்ஷாடனரே காட்சி தருகிறார்.

நெடுந்தெருவே வந்து எனது நெஞ்சம் கொண்டார்.[3]

வெண்தலை ஓர் ஓடு ஏந்தி பிச்சைக்கு என்று வந்தார்
அந்நிலையே நிற்கின்றார் ஐயம் கொள்ளார்.[4]

போகம் பல உடைத்தாய்ப் பூதம் சூழ
புலித்தோல் உடையாய் புகுந்து நின்றார்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கி
பரிசு அழித்து என்வளை கவர்ந்தார்.[5]

பட்டி வெள்ளேறு ஏறி பலியும் கொள்ளார்;
பார்ப்பாரை பரிசு அழிப்பார் ஒக்கின்றார்...
கட்டிலங்கு வெண் நீற்றர் கனலப் பேசி
கருத்து அழித்து வளை கவர்ந்தார்.[6]

பெண்பால் ஒரு பாகம் பேணா வாழ்க்கை...
பண்பால் விரி சடையர்; பற்றி நோக்கிப்
பாலை பரிசு அழியப் பேசுகின்றார்.[7]

என்றெல்லாம் சிவபிரானின் பிக்ஷாடனக் கோலத்தைத் திருவெண்காட்டுப் பதியத்தில் கண்டுரைக்கிறார்.

அந்த அமைதி தோன்ற வடித்தெடுத்த பிக்ஷாடனர் இன்றும் திருவெண்காட்டில் இருப்பதைக் காணலாம். அதை அங்கே முதலாம் ராஜாதிராஜன் காலத்தில் (கி.பி. 1045) எழுந்தருளச் செய்த செய்தி அவ்வூர்க் கல்வெட்டால் தெரிய வருகிறது. இதன் பெயர் பிச்சா தேவர் என்றும் அக்கல்வெட்டால் அறிந்து கொள்ளுகிறோம்.

இனி அங்கிருந்து திருவலம்புரம் கோயிலுக்குச் செல்வோம். தற்காலத்தில் மேலப்பெரும் பள்ளம் என்றாலேதான் எவருக்கும் தெரியும். கோயில் மிகத் தொன்மையானது. வெண்காட்டைப் போலவே வலம்புரத்தையும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர்களும் பாடியுள்ளார்கள்.

என்னுடைய அனுமானப்படி அப்பரடிகள் வெண் காட்டிலிருந்து அன்றே (மாலையாக இருக்கலாம்)

திருவலம்புரம் வந்திருக்க வேண்டும். அன்று முழுவதும் பிட்சாடனப் பெருங்கோலத்தவனாகவே சிவன் அப்பர் பெருமானின் உளக்கோயிலில் எழுந்தருளி வீற்றிருந் திருக்கிறான். வெண்காட்டில் பிட்சாடனன் கோயிலி லிருந்து தெரு வழியே வெளிப்பட்ட செய்தியே பரக்கப் பேசப்படுகிறது. திருவெண்காட்டுத் திருத்தாண்டகத் தில்.

வலம்புரப் பதியத்தில் வீதியினின்றும் கோயில் புக்க செய்தியே பாசுரந்தோறும் கூறப்படுகிறது. இரு தலத் திற்கும் ஒருவகை யாப்பாகவே பாடல்கள் அமைந்திருப் பதையும் இந்த சந்தர்ப்பத்தில் மனம் கொள்ளல் பயனுடையதாகும்.

வலம்புரப் பதியத்தில், அப்பர் பெருமான். பிட்சாட னக் கோலத்தைப் பற்றிக் கூறுவனவற்றைப் பார்க்கலாம்.

பண் மலிந்த மொழியவரும், யானும், எல்லாம்
பணிந்து, இறைஞ்சித் தம்முடைய பின்பின் செல்ல[8]

போவாரைக் கண்டு, அடியேன், பின்பின் செல்ல,
புறக்கணித்துத் தம்முடைய பூதம் சூழ
வா வா என உரைத்து மாயம் பேசி[9]

மனம் உருக, வளை கழல, மாயம் பேசி[10] ,

என்றெல்லாம் தம்மை (ஆன்மாக்களை) பரிசழித்த பிட்சாடனக் கோலத்தைப் பாடிப் பரவும் அப்பர்,

வலம்புரமே புக்கு அங்கே மன்னினாரே!

என்று அடிதோறும் மகுடம் சூட்டி வலியுறுத்துகிறார்.

வெண்காட்டில், ஆன்மாக்களின் ஆணவத்தை இரந்து வெற்றி கொள்வான், வெளிப்பட்டான் இறைவன். இங்கே "ஆன்மாக்கள் அனைத்தும்,

'எல்லாம் பணிந்து' (முழுவதும் அடங்கி) வணங்கித்தன் பின்னே பின்னே நடக்க, வெற்றிகொண்டு 'வலம்புரமே' புகுந்து அங்கேயே நிலைபெற்று விடுகிறான்'' என்கிறார் அப்பர். அப்படிச் சென்றிருந்த திருமேனியைச் சொல்லால் வடிக்கும் இரு பாசுரங்களைப் பார்ப்போம்.

கறுத்தது ஒரு கண்டத்தர்; காலன் வீழக்
காலினால் காய்ந்து உகந்த காபாலியார்;
முறித்தது ஒரு தோல் உடுத்தி, முண்டம் சாத்தி,
முனி கணங்கள் புடை சூழ, முற்றம் தோறும்
தெறித்தது ஒரு வீணையராய் செல்வார்தம் வாய்ச்
சிறுமுறுவல் வந்து எனது சிந்தை வெளவ,
மறித்து ஒரு கால் நோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கு அங்கே மன்னினாரே![11]

பட்டு உடுத்து, பவளம்போல் மேனி எல்லாம்
பசும் சாந்தம் கொண்டு அணிந்து, பாதம் நோவ,
இட்டு எடுத்து நடம் ஆடி, இங்கே வந்தார்க்கு
எவ்வூரீர்? எம்பெருமான்? என்றேன்; ஆவி
விட்டிடுமாறு அதுசெய்து, விரைந்து நோக்கி,
வேறு ஓர் பதி புகப் போவார் போல,
வட்டணைகள் பட நடந்து, மாயம் பேசி,
வலம்புரமே புக்கு அங்கே மன்னினாரே![12]

(முறித்தது : உரித்தது; முண்டம் : தலை; சாத்தி: அணிந்து; முற்றம்: வாயில்; தெறித்தல்: விரலால் மீட்டுதல்; வெளவ: கௌவ; மறித்து: மீண்டும்; பசும் சாந்தம் மஞ்சள்: திறச் சந்தனம்; விரைந்து: மிடுக்குடன்; வட்டணை: அங்கு மிங்கும் மறுகிப் போக்குக் காட்டல்)

இந்த இரு பாசுரங்களும் பிச்சா தேவர் அதாவது பிட்சாடன மூர்த்தி யைத்தான் சொல்லோவியமாய்த்

தருகின்றன. ஆனால் "முற்றம் தோறும் தெறித்ததொரு வீணையராய், பட்டு உடுத்து, பவளம் போல் மேனி எல்லாம் பசும் சாந்தம் கொண்டு அணிந்து சென்ற" பிட்சாடனரை அப்பர் பெருமானையன்றி எந்த ஒரு தியான ஸ்லோகமும் கூறுவதாக யான் அறியேன். எவராவது ஒரு ஸ்தபதியாரோ அல்லது சிவாசாரி யாரோ இப்படி ஒன்று இருப்பதாகக் கூறவும் யான் கேட்டிலேன்.

இந்த மூர்த்திக்கு, சம்ஸ்கிருதத்தில் கூறுவதானால், வீணாதர பிக்ஷாடனர் என்றே சொல்ல வேண்டும். சிவ மூர்த்தங்களாகக் கூறப்படும் சிற்ப நூல்களுள் அஷ்டாஷ்ட மூர்த்தங்களில் (அறுபத்து நான்கு திருவுருவங்களில்) வீணாதர தக்ஷிணாமூர்த்தி காணப் படுகின்றதே அன்றி வீணாதர பிக்ஷாடான மூர்த்தி இடம் பெறவில்லை.

எனவே பதிஞானமும், கலைஞானமும் நிரம்பிய அப்பர் பெருமானின் அருள் வாக்கையே (தியான ஸ்லோகம் போல) சொல்லோவியமாகக்கொண்டு இவ்விரு செப்புத் திருமேனிகளும் வடிக்கப்பட்டிருக் கின்றன.

வலம்புரத்திலேயுள்ள திருமேனிக்கு வட்டணை காட்டவந்த நாயகர் என்ற பெயர் சூட்டப்பட்டிருக் கிறது. அற்புதமான, தன்னேரில்லாத்தனிப் பெரும் செப்புப் படிமம் அது. இரண்டாம் இராசாதிராசனின் எட்டாவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1171) அது எழுந்தருளுவிக்கப்பட்டது. இச்செய்திகள் யாவும் அக் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டால் நமக்குத் தெரிய வருகிறது.

அப்படியும், அங்நிறமும் அவ்வண்ணமும்,
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இங்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட ஒணாதே![13]

என்று "காணலாம்; காட்ட முடியாது" என்ற பேருண்மையைச் சொல்லாலே காட்டிவிட்ட, அந்தக் கலைமாச் செல்வர் இப்படி எத்தனை எத்தனையோ திருமேனிகளைத் தம் தூய திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதி எழுதிப் பார்த்து அனுபவித்திருக்கிறார். அவை அனைத்திற்கும் சிலைகளோ செப்புத் திருமேனிகளோ இல்லைதான். ஆனாலும் சிலவற்றிற்குத் திருவுருவம் சமைக்கப்பட்டிருக்கின்றன. "அவற்றை எல்லாம் தேடிக் கண்டு காட்டி யனுபவிக்கச்செய்யத் திருவருள் துணை புரிக!" என்று அவனருளாலே அவன் தாள் வணங்கி நிற்போமாக.

□ □ □

அடிக்குறிப்புகள்

1. திருவாசகம்-போற்றித் திரு அகவல் 165, 166
2. நன்னூல்—சூ. 55
3. திருமுறை—6 350
4. " 352
5. " 353
6. " 355
7. " 356
8. " 581
9. " 584
10. " 585

11.	திருமுறை—6	586
12.	,,	587
13.	,,	959

* அப்பர் அருளிய அப்பன் என்ற தலைப்பில், கலைக் காவலர் திரு க. வை. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார் அவர்களது மணிவிழா மலரில் வெளியான கட்டுரை.

□

3. அட்ட பந்தனம்

திருக்கோயில்களில் கடவுள் மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப்பெறும் கல்லால் ஆன தெய்வப் படிமங்கள் ஆடாமல் நிலைபெற, இருப்பிடம் (பீடம்), படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்திப் படியச் செய்யும் ஒரு கூட்டுக் கட்டுப் பொருளை அட்ட பந்தனம் என்பர். இப்பொருள் ஓர் அருமையான படைப்பு. அற்புதமான கண்டுபிடிப்பு. எட்டுப் பண்டங்களின் கலவையானதாலும், இருப்பிடத்தையும், தெய்வப் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதாலும் இது அட்டபந்தனம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

அட்டபந்தன மருந்தில் கலக்கும் பொருள்கள்:-

1. கொம்பரக்கு
2. சுக்கான் தூள்
3. குங்கிலியம்
4. கற்காவி
5. செம்பஞ்சு
6. சாதிலிங்கம்
7. தேன்மெழுகு
8. எருமை வெண்ணெய்

ஆகிய எட்டுமே. இவற்றை எல்லாம் கலந்து செய்முறை இருவகையாகும். ஒன்று இடிமுறை; மற்றது காய்ச்சு முறை. காய்ச்சுமுறை மிக விரைவாக ஆகிவிடும். ஆனால் காய்ச்சு மருந்து சார்த்தியதை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் அகற்றல் கிட்டத்தட்ட இயலாது. வலிந்து செயற்படும்பொழுது சிலையுருவிற்குச் சேதம் விளையவும் கூடும். அதலால், மிகப் பெரும்பாலும் இடிமுறையை மேற்கொள்ளலே நன்று.

மேலே சொன்ன பண்டங்களை நன்கு சோதித்து வாங்கவேண்டும். பின்னர், தூசு, துப்பட்டை முதலிய

களைந்து தூய்மை செய்யவேண்டும். அதன் பின்னர் அளவுப்படி கலக்கவேண்டும். கலந்தபின் இடிக்க வேண்டும்.

1. கொம்பரக்கு:

இது அவலரக்கு அன்று. மரப்பட்டையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். இதுதான் தூய்மையானது; இயற்கை யானது; கலப்பற்றது. இதை வாங்கிப் பொடித்து மரப்பட்டை முதலியவற்றை நீக்கிச் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

2. சுக்கான் தூள்:

சுக்கானில் பல நிறமும் இருவகையுமுண்டு. வெள்ளை நிறம் நன்று; கபில நிறம் கொள்ளலாம்; கருமை நிறம் கூடாது. இதைக் கொண்டுவந்ததும் முதலில் சிறிது சுக்கானைத் தூளாக்கி, அடுப்பில் காயும் இருப்புச் சட்டியி லிட்டு வறுத்துப் பார்க்கவேண்டும். படபட என்று (உப்பைப் போல) வெடித்தால், அவ்வகைச் சுக்கான் கூடவே கூடாது. ரவை, மணல்போல வெடிக்காமல் இருந்தால் அவ்வகைச் சுக்கான்தான் உகந்தது.

3. குங்கிலியம்:

துண்டுத்துகள், தூசி இல்லாமல் பொறுக்கி எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

4. கற்காவி:

இது அழுக்குச் சிவப்பு நிறமாகக் கட்டியாய் இருக்கும். பூங்காவி என்பதன்று இது. கடைகளில் காவித் தூள் என்று பலவகைக் கலப்படங்கள் உண்டு. அவற்றை வாங்கப்படாது. கட்டிகட்டியாய் இருக்கும் கற்

காவியையே வாங்கி, மேலே படிந்துள்ள தூசிகளைப் புடைத்துப் போக்கிவிட்டு, இடித்துப் பொடியாக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

5. செம்பஞ்சு:

இது இயற்கையாகவே வாதாங்கொட்டை நிற முடையது. பீகார் பக்கத்திலிருந்து வருவது. கோக்தி என்று பெயர். இதுதான் உகந்தது. சிவப்புச் சாயம் ஏற்றி அடை அடையாய்த் தட்டி வைத்துக் கொண்டு அது தான் செம்பஞ்சு என்று ஏமாற்றுவோர் (ஏமாறுவோர் மிக அதிகம். கோக்தி பஞ்சு கதர்க்கடைகளில் சொல்லி வரவழைக்கச் செய்யலாம். இதையும் சருகு, செற்றை காம்பு முதலியான இல்லாமல் பழுது நீக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

6. சாதிலிங்கம்:

இதில் பலவகையுண்டு. உலாந்தாலிலிருந்து வருவது தான் தரத்தால் உயர்ந்தது. கலவைப் பண்டம் எட்டி னும் விலைமிக்கது சாதிலிங்கமே. அட்டபந்தனத்தின் முக்கியமான பொருள் இது. விலை மிகுதியை எண்ணி அளவைக் குறைப்பதும், தரமற்ற மலிவுச் சரக்கை வாங்குவதும் இன்று மலிந்து காணப்படுகிறது. அப்படிச் செய்வது முறைகேடாகும். இது இரும்பைப் போல கன மிக்க பண்டமாகும். இதைப் பொடி செய்தல் எளிது. இதையும் நன்கு பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

7. தேன்மெழுகு:

இதில் இருவகையுண்டு. ஒன்று மஞ்சள் நிறமுள்ளது. அதை மஞ்சள் மெழுகு என்பர். மற்றொன்று வெண்மை

நிறமாக இருக்கும். மஞ்சள் மெழுகில் தேன் கலந்திருக்கும். வெண் மெழுகில் தேன் இல்லை. இதுதான் உகந்தது. வெண் மெழுகு என்று சில இடங்களில் மெழுகுவர்த்திக் குழம்பை ஆறவைத்து ஏமாற்றுவர். வாயில் சிறிது கிள்ளிப் போட்டுச் சுவைத்துப் பார்த்தால் உண்மை புலப்பட்டுவிடும்.

8. எருமை வெண்ணெய்:

பசுவின் வெண்ணெயில் கொழுப்புச் சத்துக் குறைவு. ஆகவே அது கூடாது. எருமை வெண்ணெய்தான் உகந்தது. இதிலும் சிறிதும் நீர்ச்சத்தின்றி முழுதும் அகற்றப்பட வேண்டும். நெருப்பு, வெயில், வேறுவகை வெம்மை பயன்படுத்தப்பட முடியாதவை. அவற்றால் வெண்ணெய் உருகிவிடும். ஆனதால் புதிய மண் பானையை எடுத்துப் பானைக்கு ஒரு வீசை வெண்ணெயை புறத்தில் கால் அங்குலக் கனமாக அப்பி வெம்மை தாக்காத குளிர்ந்த, இருண்ட அறையில் இரண்டல்லது மூன்று நாட்கள் வாய் கீழாகப் பானையைக் கவிழ்த்து வைத்திருக்கவேண்டும். பானை வெண்ணெயில் உள்ள நீர்ச்சத்து முழுவதையும் உறிஞ்சிக்கொள்ள, வெண்ணெய் பக்குவமாய் ஆகிவிடும். தேவைக்கேற்பப் பானைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ளவேண்டும்.

எல்லாப் பண்டங்களும் ஆயத்தமான பிறகு மர உரலில் இடிக்கவேண்டும். கல்லுரல் கூடாது. ஒவ்வொரு உருண்டைக்கும் குறிப்பிட்ட அளவாக ஏழு பண்டங்களையும் உரலில் இட்டு தேவைக்கு ஏற்ப வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒவ்வொரு உருண்டையையும் சுமார் அரை மணி நேரம் இடித்துப் பின்னர் உரலிலிருந்தெடுத்து உருட்டித் தலையில் ஆணிக் கொண்

டையால் ஒரு குத்துக் குத்தி வைத்துக்கொள்ள வேண்டும். முதல் இடி முடிந்ததும் ஒரு குத்து. இரண்டாம் முறை இடித்தபின் இரண்டு குத்து. இப்படி எட்டுமுறை இடிக்கவேண்டும். ஒரு இடிக்கும் அடுத்த இடிக்கும் இடையில் குறைந்தது இரண்டு நாள் இடைவெளி இருக்கவேண்டும்.

இனி அளவைப் பார்ப்போம். ஒவ்வொரு

உருண்டைக்கும்

சுக்கான் தூள்..................	25½	தோலா
குங்கிலியம்....................	9	,,
கற்காவி........................	7½	,,
இலிங்கம்.......................	7½	,,
அரக்கு.........................	3¾	,,
மெழுகு.........................	3¾	,,
செம்பஞ்சு......................	1	,,
எருமை வெண்ணெய்......	7½	,,

தேவை.

(இது எட்டு இடிக்கும் சேர்த்துள்ள உத்தேச அளவு. சிறிது கூடவும் ஆகலாம்.)

இவற்றை எல்லாம் மர உரலில் ஒவ்வொரு சரக்காக இட்டு ஒன்றோடு ஒன்று சலந்து ஒன்று சேரும்படி இடிக்கவேண்டும். முதல் ஆறு பொருள்களும் செமண்டு சுண்ணாம்பு, மணல் போன்றவை. ஏழாவதாக உள்ள பஞ்சு கம்பி-வலை போன்றது. வெண்ணெய்தான் இந்தக் காங்க்ரீட்டிற்கு நீர் போன்றது.

இந்த மருந்து கலந்து இடிப்பதில் பண்டத்தூய்மை பண்டங்களின் சேர்மான அளவு, இடிக்கும் சால அளவு மூன்றும் மிக முக்கியம். அத்துடன் இடிக்கின்றவர்கள்

உடல் தூய்மை, மனத்தூய்மை முதலியன மிக மிக முக்கியம். இடிக்கும்பொழுது இடிக்கும் ஆட்கள் ஆலயத்திற்கு ஏற்ப, ''சிவ சிவ'' அல்லது ''நாராயணா'' அல்லது ''வேல் வேல் முருகா'' என்பன போன்ற இறைவன் திருப்பேர்களை உச்சரித்துக் கொண்டே இடிக்கவேண்டும். இப்படிச் செய்த அட்டபந்தன மருந்து சார்த்திக் குடநீராட்டுச் செய்த திருக் கோயில் களில் அம்மருந்து எவ்விதக் குறைபாடும் நேராது, மிக நீண்ட நாட்களாய் இலங்கி வருதலைக் கண்கூடாகக் காண முடிகிறது.

எனவே, இடிக்கப் புகுமுன் இடிப்போர்களை குளிக்கச் செய்து திருநீறு முதலானவற்றை அணிந்து கொண்டு விநாயகர் வணக்கம் செய்துகொண்டபின் ஒவ்வொரு குத்துக்கும் ''சிவ சிவ'' என்று சொல்லிக் கொண்டே இடிக்கவேண்டும் என்பது எளியேன் ஏற்பாடு. இதில் பெரும்பாலோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. வாணவேடிக்கை, பந்தல் அலங்காரம் யாகசாலைச் சோடனை, போன்றவற்றில் ஆயிரம் ஆயிரமாகப் பொருள் விரயம் செய்பவர்கள் இன்றியமை யாத அட்டபந்தன மருந்தைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை. யார் யாரோ செய்யும் செங்கல்தூள் உருண்டை களை ரூ.3 அல்லது 4 கொடுத்து வாங்கிவந்து எப்படியோ வெண்ணெய் பலத்தால் குழைத்து அப்பிவிட்டுக் ''கும்பாபிஷேகம்'' என்ற பெயரில் பல்லாயிரம் ரூபாய் களை விரயம் செய்வதை எண்ணி வருந்தாதிருக்க முடிய வில்லை. இதற்குக் காரணம் குடநீராட்டு விழாவின் உண்மைத் தத்துவத்தையும், அதன் இன்றியமையாத துறைகளையும் அறியாமையே என்னலாம்.

என்னைக் கேட்டால் அஷ்டபந்தன மருந்துதான் அனைத்திலும் தலையானது என்பேன். இதில் சிக்கனம்

அல்லது அலட்சியம் காட்டுபவர்களை ஆத்திகர் என்று எங்ஙனம் கூறமுடியும்?

மேலே கூறியமுறை இருப்பிடத்தையும் படிமத்தையும் இணைத்துப்பிடிப்பதற்குச் செய்வதாகும். இருப்பிடத்தையும், துணையிருப்பிடத்தையும் (பீடத்தையும், உப பீடத்தையும்) இசைப்பதற்குத் திரிபந்தனம் என்னும் முக்கூட்டுப் பொருளே உகந்தது. இதற்கு வேண்டியவை: சுக்கான் தூள், கருப்பட்டிக் கசிவு, முற்றி கனிந்த பேயன்பழம் ஆகிய மூன்றுமே. சுக்கானைச் சோதித்து வெடிசுக்கான் அல்லாத நற்சுக்கான் கற்களை நன்கு பொடித்துப் பெருஞ்சல்லடையால் சலித்து அதில் வேண்டிய அளவை எடுத்து வாயகன்ற மண் அல்லது களிம்பேறாத ஒரு பாத்திரத்தில் இட்டுச் சிறிது சிறிதாகச் சர்க்கரையையும், தோல் கருத்துக் கிட்டத்தட்ட அழுகியதுபோலத் தோன்றும் பேயன் வாழைக் கனியையும் சேர்த்துப் பிசைந்துகொண்டே வரும்பொழுது கைதாங்காத அளவு சூடு வந்ததும் கையை எடுத்துவிட்டு மத்து முதலிய மரக்கருவியால் நன்கு குழப்பி மத்திக்கவும். கூழ்போல ஆனதும் எடுத்து இருகற்களுக்கும் இடையில் கால் அங்குல அளவு வைத்துக் கற்களை முறைப்படி ஒன்றின் மேல் ஒன்றாய்ப் படியவைத்துவிடவேண்டும். கூட்டுமுறை செம்மையாக அமைந்துவிட்டால் பிடிமானம் உறுதியாக இருக்கும்.

மெய்யான ஈடுபாடும் தெய்வ பக்தியும் உள்ளவர்களை எல்லாம் தொழுது வேண்டுகிறேன், நல்ல முறையில் மேலே கண்ட வண்ணம் ஆக்கித் தெய்வத் திருப்படிமத்திற்கு மருந்து சார்த்த வேண்டுமென்று. அன்றேல் கண்டவற்றை 'அட்ட பந்தனம்' என்ற பெயரால் சார்த்துவதைவிட "டால்மியா பந்தனம்"

செய்துவிடுவது மேலாகும். "டால்மியா பந்தனம்" என்றால் என்ன என்றா கேட்கிறீர்கள். செமெண்டுக் கலவையைத்தான் இப்படிப்பெயரிட்டுக் கூறுகிறேன்— சரிதானே?

> கொம்பரக்குச் சுக்கான்தூள், குங்கிலியம், கற்காவி,
> செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு—தம்பழுது
> நீக்கி எருமை வெண் ணெய்கூட்டி, நன்கிடித்து
> ஆக்கல் அட்ட பந்தனம் ஆம்.

> சுக்கான்தூள், சர்க்கரை, தொல்பேயன் நற்கனியும்
> ஒக்கக் கலந்தமைத்தல் உற்றதிரி பந்தனம் ஆம்.

□

4. கல்வெட்டுகள் தரும் செய்திகள்

தமிழ் நாட்டில் கோயிலில்லா ஊர் இல்லை. பண்டை நாளில் கோயில்கள் சிறந்து விளங்கின. ஊர் நிர்வாகங்கள் முழுவதும் கோயில்களிலேயே நடந்தன. எனவே, பலவகைச் செய்திகளையும் தருகிற கல்வெட்டு கள் கோயில் சுவர்களிலேயே அமைக்கப்பட்டன. அன்றி யும் அவ்வக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட பலவகை மானியங்களைப் பற்றியும் அவற்றில் காணலாம்.

தமிழகத்தில் கல்வெட்டுகள் தமிழிலும் ஸம்ஸ்கிருதத் திலும் பொறிக்கப்பட்டன. தமிழ் மொழியைத் தமிழ் எழுத்திலும், ஸம்ஸ்கிருதத்தைக் கிரந்த எழுத்திலும் பொறித்தனர்.

கல்வெட்டுகளில் பெரும்பாலும் முதலில் 'ஸ்வஸ்தி 'ஸ்ரீ' என்ற இருசொற்கள் காணப்படும். அதற்கு அடுத்து மெய்க் கீர்த்தி; அதன் பின் மன்னன் பெயரும் அவன் ஆட்சியாண்டும் காணப்படும்............க்கு யாண்டு, பத்தாவது என்றால் அம்மன்னன் பட்டத்திற்கு வந்து ஒன்பதாண்டுகள் முடிந்து பத்தாவது ஆண்டு நடக்கிறது என்று பொருள். எனவே, ஒரு மன்னனுடைய முப்பதா வது ஆண்டுக் கல்வெட்டுக் கிடைத்தால் அம்மன்னன் முப்பது ஆண்டுகளுக்குக் குறையாத காலம் ஆட்சிசெய் தான் என்பது புலப்படும். இங்ஙனமே அரசர்கள் ஆண்ட கால அளவை ஓரளவு செம்மையாகக் கணக்கிட முடியும்.

மெய்க் கீர்த்திகளிலிருந்து அம்மன்னனின் அருஞ் செயல்கள், போர்வெற்றிகள், அறக்கொடைகள், விருதுப்

பெயர்கள் போன்ற பல வரலாற்றுக் குறிப்புகளை அறிய முடியும்.

கல்வெட்டுகளில் நாட்டுப் பிரிவு மிகத் தெளிவாகக் குறிக்கப்படும். எடுத்துக்காட்டாக, ''பாண்டியகுலாசனி வளநாட்டு, தஞ்சாவூர்க் கூற்றத்து, தஞ்சாவூர்'' என இராஜராஜனின் தஞ்சாவூர்க் கல்வெட்டில் காணலாம் வளநாடு என்பது தற்காலத்திய மாவட்டம் (District) என்றும் கூற்றம் என்றால் வட்டம் (Taluk) என்றும் கொள்ள வேண்டும். இங்ஙனமே வளநாட்டைக் கோட்டம் என்றும், கூற்றத்தை நாடு என்றும் குறிப்பிடுவர்.

கல்வெட்டுகளில் பலவகை அறக்கொடைகளும் காணப்படும். அவற்றிற்கு உடலாக (மூலதனமாக) நிலம் ஆடு மாடுகள் அல்லது பொன் (Cash) கொடுத்ததும் புலப்படுத்தப்படும். அறக்கொடைகளில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக என்றும் பூசை படித்தரத்திற்காக என்றும் நாள்தோறும் மலர், மாலை, வழங்குவதற்காக என்றும் திருப்பதியம் ஓதுவதற்காக என்றும், இசைக் கருவிகள் ஒலிப்பதற்காக என்றும், நாட்டியம் ஆடுவதற்காக என்றும், திருவிழா எடுப்பதற்காக என்றும், கோயில்—திருப்பணி செய்வதற்காக என்றும் இன்னபிற பணிகளுக்காக என்றும் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அன்றியும் திருமேனிகள் எழுந்தருளுவித்த செய்தியும், ஆபரணங்கள் கொடுத்த செய்தியும் கல்வெட்டுகளால் புலப்படுத்தப்படும்.

பல்வேறு பகுதிகளிலும் வழக்கிலிருந்த வேலி, மா குழி, குறுக்கம், செய், தடி போன்ற பலவகை நில அளவைகளைக் கல்வெட்டுகளில் காணலாம். பொதி கலம், மரக்கால், நாழி, குறுணி, உழக்கு போன்ற

பெய்தல், முகத்தல் அளவைகளையும் பலம், கழஞ்சு, வராக னெடை, கழஞ்சு, குன்றி போன்ற பொன் நிறுவை அளவைகளையும், பாரம், துலாம், வீசை, பலம் போன்ற பண்ட நிறுவை அளவைகளையும், பாகம், முழம், சாண், விரல் போன்ற நீட்டல் அளவைகளையும் கல்வெட்டுகள் உணர்த்தும்.

முதலீட்டுக்குப் பொலிசைப் பலியூட்டு (வட்டி) விவரமும், பல்வேறு துறைமக்களின் ஊதிய விவரமும் பல்வேறு மக்கள் செலுத்தும் பல்வகை வரியும், வரி விதிப்புக்குரியவை எவை எவை என்பதும், குற்றத்திற் குரிய தண்டனை விவரமும், பல்வேறு பணிக்குரியவர் களுடைய தகுதியும், இன்னும் இவை போன்ற பொருளா தார, சமுதாய, ஒழுங்குமுறை விதிகளும் கல்வெட்டுக் களால் அறியக் கிடக்கின்றன.

கல்விமுறை பற்றிய விவரங்களும் கூடக் கல்வெட்டுக் களிலிருந்து கிடைக்கின்றன. அடிப்படைக் கல்வியே யன்றி, பல்கலைபயிலும் கல்லூரிகளும் இருந்தன. அவை பெருங்கோயில்களிலேயே அமைந்திருந்தன. எனவே அவற்றைத் "திருச்சுற்றாலைக் கல்லூரி" எனக் கல்வெட்டுகள் கூறும். அங்கு என்னென்ன கலைகள் கற்பிக்கப்பட்டன; ஆசிரியன்மார் தகுதி என்ன; அவருக்கு அளித்த ஊதியம் அல்லது நிலக் கொடை விவரம்; ஒவ்வொரு துறையிலும் எத்தனை மாணாக்கர் பயின்றனர்; ஊராட்சி முதலியவற்றில் மாணாக்கர் பங்கு பெறலாமா, கூடாதா? என்பன போன்ற செய்திகளும், விளக்கங்களும் கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கின்றன.

சிறந்த பெருங்கோயில்களில் ஆதுரசாலைகள் (ஆஸ்பத்திரி) ஆதுலர் சாலைகள் (ஆற்ற மாட்டார்

புகலிடம்) ஆகியவை இருந்தன. ஆதுர சாலைகளில் மருத்துவப் பணிபுரிந்தவர்களுக்கு விட்ட மானியம் அதாவது "வைத்தியக் காணி" அல்லது "வைத்திய விருத்தி" நிலம் பற்றிய குறிப்புக்களுடன், எத்தனை பேருக்கு அங்கு வைத்திய வசதியுண்டு; அறுவை வைத்தியம் செய்பவர் தொகை எவ்வளவு; நோயாளருக்குக் கொடுத்த பத்திய உணவு யாவை; என்பனவும் மருந்து வகைகள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கணக்கு போன்றவையும் கல்வெட்டுகளிலிருந்து காணமுடிகின்றன.

ஒரு நாட்டின் செம்மையான வரலாற்றை அந் நாட்டில் வழங்கிய எழுத்துக்களின் மூலம் எப்பொழுது கணிக்கப்படமுடிகிறதோ அது தொடங்கியே வரலாற்றுக் காலமும் தொடங்குகிறது. சிந்துவெளிப் பண்பாடுதான் இந்தியாவின் கணித்தறியக் கூடிய பண்பாட்டுக் காலம் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. அக்காலத்தை ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முந்தியது என்பர் புலவோர். அகழ்வாராய்ச்சியின் மூலம் அங்குக் கிடைத்தவற்றில் பலமுத்திரைகள் காணப்படுகின்றன; அவற்றில் ஓவிய எழுத்துக்கள் (Rictograph) உள்ளன. அவ்வெழுத்துக்கள் உணர்த்தும் பொருள் என்ன என்பது இன்னும் புலப்படுத்தப்படவில்லை. எழுத்துக்கள் ,காணப்பட்ட போதிலும் பொருள் புலப்படாத நிலையில் அதை வரலாற்றுக்கு முந்திய காலம் என்பர். அதற்குப் பின்னர் அசோகன், பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகள் பொருள் புலப்படக் கிடைத்துள்ளன. எனவே, அக்காலத்தையே—அதாவது சுமார் 2500 ஆண்டுக்காலத்தை—வரலாற்றுக்காலம் என நம்மைப் பொறுத்த வரையில் கணிக்கலாம்.

அசோகர் காலத்து எழுத்துக்கள் இருவகைப்படும். ஒன்று 'பிராமி' அது இடமிருந்து வலமாக எழுதப்படுவது......மற்றொன்று 'கரோஷ்டி'. இது வலமிருந்து இடமாக (உருது எழுதுவதைப் போல) எழுதப்படுவது. இந்தியாவின் பல பகுதிகளிலும் 'பிராமி' காணப்படுகிறது. கரோஷ்டியோ இந்திய வடமேற்குப்பகுதியில் மட்டும் பொறிக்கப்பட்டது. தமிழகத்திலும் அதையொட்டிய பகுதிகளிலும் காணப்படும் எழுத்து "தாமிழி" எனப்படும். தாமிழிக்கும் பிராமிக்கும் பொது எழுக்களில் பெருமளவு ஒற்றுமை காணப்படுகிறது. ஆகவே தாமிழியைப் பிராமி என்று முன்னாளில் மயங்கினர். ஆனால் முதுபெரும் அறிஞர், கே. வி. சுப்பிரமணிய ஐயர் செய்த சிறந்த ஆராய்ச்சியின் மூலம் இவை பிராமி அல்ல என்பதும் தாமிழியே என்பதும் நிலைநாட்டப்பட்டன. அதைத்தொடர்ந்து நடந்து வரும் பல்வேறு அறிஞர்களின் ஆராய்ச்சியும், தமிழ் அல்லது பிறமொழிகளில் உள்ள பழம் நூல்களும், இம்முடிவுக்கு அரணும் வலிவும் ஊட்டுகின்றன.*

□ □ □

---

* கையேடு—நூல் *(1967)*—ப. *164-167*

5. திருப் பணிகள்

1. திருமுறை கண்டது

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகளால் பாடப்பெற்ற தேவாரத் திருமுறைகள் தில்லையம் பதியில் அடைபட்டுக்கிடந்தவற்றை நம்பியாண்டார் நம்பியின் பேருதவியால் கண்டு வெளிப் படுத்தியவன் நம் இராஜராஜனே. அப்பணியால் பண் சுமந்த பாடல்களும், தமிழும், சிவநெறியும், பக்தித் துறையும் பெற்றபேறு அளப்பரிதாம். கொற்றவன்குடி உமாபதி சிவாச் சாரியார் அருளிய திருமுறை கண்ட புராணம் ஓரளவு அப்பெரும்பணியைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதில் இராஜராஜன்,

''உலகம் மகிழ்தரு 'சையம்'மீது தோன்றி
ஓவாது வரு பொன்னி சூழ் சோணாட்டின்
தியாகேசர்பதம் பணிந்து செங்கோல் ஓச்சி
அலகுஇல் புகழ்பெறு ராசராச மன்னன்......
அபய குல சேகரன்''

என்று அருமையாகக் குறிக்கப்பெறுகிறான். கதை இது தான்: சிவபெருமான் மீது எல்லையில்லா பக்தி பூண்டொழுகியவன் இராஜராஜன். ஒருநாள் தேவாரப் பாசுரங்களில் சிலவற்றை ஓதக்கேட்டான். செவிக்குத் தேனென இனித்த அப்பாக்கள் அவன் உள்ளத்தில் தோய, மெய்புளகிக்க, விழி நீர் அருவிபாய, ஒப்பரிய ஓர் உணர்ச்சியை விளைத்தது. பாடியோரைக் கேட்டான் எவர் அருளிய பாடல் இவை என்று. அவர் கள் மூவரைப்பற்றியும், அவர்கள் அருளிய தெய்வப்

பாசுரங்களைப்பற்றியும் அறிந்தவாறு எடுத்து உரைத்தார்கள். ஏனைய பல்லாயிரம் பாசுரங்கள் இருக்குமிடமெது எனக் கேட்க, பிறவற்றின் இருப்பிடம் யாதெனப் புலப்படுத்த அவர்களால் இயலவில்லை.

மிக்க ஆர்வத்தனாய் நாடெலாம் தேட ஆணையிடுகிறான். அப்படியும் அவை கிடைத்தபாடில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் திருநாரையூரில் ஆதிசைவ மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் அவ்வூர்ப் பொல்லாப்பிள்ளையாரை அமுது படையலை உண்ணச் செய்யும் அற்புதம் நிகழ்த்தியும், அவர்பால் தமருடன் வளர்தருசதுர் மறைகளைக்கேட்டு உணர்ந்தும் வருதலை இராஜராஜன் கேள்விப்படுகிறான். முக்கனிகளும், பால், தேன் முதலிய பற்பல உண்டிகளும் எடுத்துக்கொண்டு திருநாரையூருக்கு மல்லல் மிகுசேனையுடன் இராஜராஜ மன்னவனும் வந்து சேர்ந்தான்.

வந்தமக்களையும், பண்டங்களையும், கொள்ள அந்நகரமே போதவில்லை. இராஜராஜன் நம்பியை அடிபணிந்து வேழமுகத்தோனுக்குக் கொணர்ந்த பல பண்டங்களையும் எடுத்துரைத்து அனைத்தையும் இப்பொழுதே அவனுக்குப்படைத்தருள்க என வேண்டி நின்றான். நம்பி வினாயகனை அடிபணிந்து அனைத்தையும் உண்டருள வேண்ட, ஒன்றுவிடாமல் உண்டருளினார் பொல்லாப்பிள்ளையார். இந்த அற்புதத்தைக் கண்டு மெய் அரும்பி, உளம் நெகிழ்ந்து, விழிநீர் சோர வியந்து மகிழ்ந்து நின்ற மன்னர் மன்னன், இவர் உதவியால்தான் திருமுறைகளின் இருப்பிடத்தை அறிய முடியும் என்ற முடிவிற்கு வந்தான். மூவர் அருளிய திருமுறைகளை உலகில் விளக்கம் பெற நீர் அருள வேண்டும் என நம்பிகளை வேண்டி நின்றான்.

நம்பிகளோ கண்ணீர் மல்கி, உள்ளம் கசிந்துருகி, பிள்ளையார் அடிபணிந்து மூவர் தமிழ் இருந்தவிடம் தெரித்தருள்க என, பொல்லாப்பிள்ளையார், தில்லைச் சிற்றம்பலத்தின் புறக்கடையின் பக்கம் கைமுத்திரை யிட்ட அறையினுள்ளே அவை உள என உரைத்தார். கேட்ட மன்னன் கிளர்ந்தெழு மனத்தினனாகி, திருச் சிற்றம்பலத்தை அடைந்து, காத்து பணிபுரியும் மறையோர்கள் பலருக்கும் "கணபதி கூறியது இது" என்று நிகழ்ந்ததை எடுத்துரைத்தான். தில்லைவாழ் அந்தணர்களோ அவற்றைச் செய்துவைத்த மூவர் வந்தாலன்றி அறையைத் திறக்க முடியாது எனக் கூறினர்.

நுண்ணறிவு மிக்க இராஜராஜன் கூத்த வல்லானுக் குரிய ஆதிரைத்திருநாள் அன்று பெருவிழாவை எடுத்துத் தமிழ் விரகர் மூவர் திருமேனிகளையும் எழுந்தருளுவித்து மூவர் தமிழ் இருக்கும் அறையின் முன் கொணர்ந்தான். "மூவரும் வந்தாயிற்று. இனி அறை திறக்கப்படலாம்" என ஆணையாக வெளிப்பட்டது இராஜராஜன் குரல். வேறுவழியின்றி அறைக்கதவு அந்தணர்களால் திறக்கப் பட்டது. ஏடு இருந்த இடத்தில் எழும்பியிருந்தது கறையான் புற்று. மன்னன் மாதுயரம் உற்றான். மண் செறிவை எல்லாம் நீக்கித் தைலக்குடங்கள் பலவற்றைச் சொரிந்து, செல் மடியச்செய்து திரு ஏடுகளை எடுக்க, அளவற்ற ஏடுகள் அழிந்து பயனற்றனவாய் விளங்கக் கண்டு உள்ளம் நைந்து அழுதுபுலம்பி அயர்ந்து நின்றான். அப்பொழுது "சைவநெறித்தலைவரெனும் மூவர் பாடல் வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என்று ஓர் அசரீரி ஒலித்தது. அதைக்கேட்ட மன்னன் மண்டிய துயரம் மாற மகிழ்ச்சியுற்று நம்பியாண்டார் நம்பிஅடிகளில்

முடிசேர்த்து நன்றிப்பெருக்கைப் புலப்படுத்தினான். சிவனடியார்க்கெலாம் உதவுக என்று தனது பண்டாரத்தைத் திறந்துவிட்டான்.

அத்தெய்வப் பாடல்களுக்குப் பண்டிருந்த வகையில் இசைஅமைப்புச் செய்ய எண்ணினான். அந்த நோக்கத்தோடு திரு எருக்கத்தம் புலியூர் திருக்கோயில் சென்று சிவனை வணங்கி, பண்ணமைக்கும் பணி சிறக்க உதவ வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். இசையும் யாழும்வல்ல பாணர்குடியில் தோன்றிய நங்கை ஒருத்திக்குப் பண்ணியல்பு முழுவதும் பொருந்த அருள் புரிந்துள்ளோம் என்று இறைவன் எதிர் மொழிந்தான். அதைக்கேட்டு உளம் மகிழ்ந்த இராஜராஜன் அவளை அழைத்து வந்து அவளைக்கொண்டு பண்ணமைக்கும் வழிஎன்ன என்று சிந்தித்தான். அப்பொழுது, அவளை அழைத்து வந்து திருச்சிற்றம் பலத்தின் உள்ளே கூத்தப்பிரான் திருமுன்பு சகல மரியாதைகளுடனும் அமரச் செய்து அவள் பணித்தவாறு அப்பாடல்களுக்கு இசை அமைப்பது பொருந்தும், என ஒரு ஒலி கேட்டது. அந்த ஒலியை மன்னன், நம்பி, மறையவர்கள், மற்ற பல சிவனடியார் முதலியோர் கேட்டார்கள். எனவே அதற்கேற்ப ஏழு திருமுறைகளாக மூவர் தமிழை வகுத்துப் பண் அமைத்து ஒப்பரிய மெய்ப்பணியைச் செய்து உயர்ந்தான்.

சொல்லொணாப் பெருமுயற்சியின் காரணமாக வெளிப்படுத்தப்பட்ட உண்மையும், இயல்பாகவே அப்பாசுரங்களின் தத்துவச் செறிவிலும் இலக்கிய நயத்திலும் பக்திச் சுவையிலும் ஈடுபட்டு மகிழும் ஆர்வமும், இராஜராஜனைத் திருமுறைச்செல்வனாகவே ஆக்கிவிட்டன. பல்லாயிரம் பாடல்கள் அநியாயமாக அழிந்தவைபோக எஞ்சியுள்ள இச் சில்லாயிரம் பாடல்

களாவது பொன்றாது பொலியவேண்டும் என்ற பெருங் காதலால் இதற்கென ஒரு பெரும் அறக்கொடை நிறுவியிருக்கிறான். நாள் முழுதும் இடையீடின்றித் தேவாரத் திருப்பதிகங்களை ஓதிக்கொண்டே இருப்பதற் காக நாற்பத்தெட்டு ஓதுவார்களையும் இரண்டு உடுக்கை, மத்தளக் கலைஞர்களையும் நியமித்திருக் கிறான். இவர்கள் ஐம்பது பேருக்கும் நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் முக்குறுணி (இருபத்துநான்கு பட்டணம்படி) நெல் சம்பளமாகக் கொடுத்து வந்திருக் கிறான். இனியும் எக்காரணத்தினாலும் உள்ள பாடல் களுக்கும் ஊறுவந்து விடப்படாது என்ற அக்கறையும், ஆர்வமுமே இதைச்செய்ய இராஜராஜனைத் தூண்டி யிருக்க வேண்டும்.

2. பெரியகோயில் எடுத்தது

இராஜராஜன் பெருநெறிபிடித்து ஒழுகியவன். சிறியன சிந்தியாதான் என்ற கம்பன் வாக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவன். சிவனடி மறவாச் சிந்தையன். அருங்கலை வினோதன். பல்துறை அறிவும் நிரம்பிய நல்அறச்செல்வன். அருஞ்சமர் பல கண்ட பெரும் புகழாளன். வெற்றி பலகொண்டு, பொன்னும், புகழும் பெருக்கியவன். மாற்றலர் பண்டாரங்களின் பொன்னை எல்லாம் திருப்பணிக்கும் அறப்பணிக்குமே அர்ப்பணித்தவன். அவன் காலத்தில் அவனாலும் அவனைச் சார்ந்தோராலும் எடுப்பித்த கற்றளிகள் பலவற்றுள்ளும் சிறந்த ஒன்றாய்த் திகழ்வது, இராஜராஜேச்வரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலாகும். விண்ணளவுயர்ந்தவிமானம், தக்ஷிணமேரு எனப் புகழ்கொண்டு திகழ்கிறது. திருவுண்ணாழி

(கர்ப்பகிரஹம்) மிகப்பெரியது. இலிங்கம், ஆவுடையார் அப்படியே.

இலிங்கத் திருமேனியைத் திருநீராட்ட, மேனிலை ஆளோடிகள் அமைய, மேனிலையிலே தென்பால் சுவரிலே, நீர்த்தொட்டி அமைந்திருக்கும் அருமையையும் இங்குதான் காணமுடியும். அங்ஙனமே நந்தியும் பெரிது. மன்னன் உள்ளத்தைப் போலவே மன்னுபவை அனைத்தும் பெரிதாக அமைந்தன. தோற்றத்தால் மட்டும் அன்றி, சூட்டிய பெயர்களும் பெரிய. பெரிய கோயில், பெருவுடையார், பெருநந்தி, பெருவிமானம், பெரும் சுற்று, மொத்தத்தில் பெரிய கோயில். பின்னே அமைத்த அம்மனையும்கூட அவன் வழிவந்தவர்கள் பெரியநாயகியாக, பெயரும் உருவும் கண்டிருக்கிறார்கள். அவன் காலத்திற்கு முன்வரை இருந்த கட்டடக்கலையில் அற்புத மாற்றமொன்றை ஆக்கிய முதல்வன் இராஜராஜன். ஆகம வழிபாட்டின் ஒரு கூறாகிற, வலம் வரும்பொழுது, கோயில் ஸ்தூபி, விழுநீர்ப்போக்கு ஆகியவற்றைத் தாண்டியோ, மிதித்தோ செல்லவேண்டாத ஒரு அமைப்பை இவன் ஆக்கியிருக்கிறான். விமானக் கலசத்தின் நிழல், திருச்சுற்றில் விழாதவாறு அமைத்ததும், விழுநீர்ப் போக்கு ஒரு ஆள் உயரத்தின் மேல் ஒடிவந்துவிழுமாறு அமைத்ததும், இவன் செய்த சிறந்த மாற்றங்களாகும். எனவே இந்த ஆலயத்து வழிபடுவோர் சோமசூத்ர பிரதக்ஷிணாம் என்று சொல்லுகின்ற நெறியை விடுத்து முழு பிரதக்ஷிணம் செய்யும் வசதியை உண்டாக்கித் தந்திருக்கிறான். ஆகமரீதியாக அமைக்கப் பெற்ற இடைகழி (அந்தராளம்) வண்ணப்பட ஓவியங்கள் கலைப்பொலிவும், வரலாற்றுச் செய்திகளும் நிரம்பியதாக அமைக்கப்பட்ட அருமையை எவ்வளவு

பாராட்டினாலும் தகும். அவற்றுள் தம்பிரான் தோழனான சுந்தரமூர்த்தியும், தடுத்தாட்கொண்ட சிவபெருமானும், காட்சிதந்தருளும் உன்னத ஓவியம், பெரிதும் குறிப்பிடத்தக்கது. அதில் காணப்படுகிற ஆவணமும், அவ்வாவணத்தில் உள்ள எழுத்துக்களும், வரலாற்றுத் துறைக்குக் கிடைத்த மணியான சான்று களாகும். மற்றொன்று: சுந்தரரும், சேரமானும் திருக்கயிலை செல்வதைச் சித்திரிப்பதாகும். முறையே பரிமேலும், கரிமேலும் அமர்ந்து கயிலை செல்லும் சேரமானும், சுந்தரரும் சிந்தைக்கு இனியவராய்த் திகழ்கின்றனர். இருவர் முகத்திலும், வளர்ந்துபொலியும் தாடியும் மீசையும், இவர்களின் யாத்திரைக்கால நீட்டத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம். திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் திகழ்தரும் ஓவியம், தெய்வக் கலையோடு மிளிர்கிறது. உடலின் அமைப்பும், சினம் காலும் திருமுகச்செவ்வியும், ஓவியக்கலையும் உயிராகத் திகழ்கின்றன. இங்ஙனமே, மற்றும்பல புனை ஓவியங்கள் அழகும், கருத்தும் அமைந்து அக்காலச் சிற்பங்களின் கைவண்ணத்தைக் காட்டுகின்ற வரலாற்று ஏடுகளாகும்.

இவன் வாரி வழங்கிய பொன்னும், பொருளும், போன இடம் காணமுடியாவிட்டாலும், ஆடலுக்கும், பாடலுக்கும் அருங்கலைக்கும், வழிபாட்டிற்கும், வழி மாறிப் போனாலும் இவன் எழுந்தருளுவித்த படிமங் களும், செப்புத் திருமேனிகளும், இன்றும் நின்று இவன் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. இத்திருக் கோயிலுக்கு ஆண்டுக்கு 1,20,000க்கு மேற்பட்ட கலநெல் வரக்கூடிய நிலங்களும், 4,000க்கும் மேற்பட்ட கறவைப் பசுக்களும், 4,000க்கும், மேற்பட்ட சாவாமூவா ஆடு களும், 100க்கும் மேற்பட்ட கார் எருமைகளும் இவன் வழங்கியிருக்கிறான். எல்லாத் திருமேனிகளுக்கும்,

இவனும் இவன் திருத் தமக்கையும், இவன் பெண்டுகளும், இவன் அரசியல் கரணத்தாரும், கொடுத்த அணிகலன் களும், பரிகலன்களும் அளப்பரியன. ஆகம நெறியில் வழி பாட்டிற்குரிய பல்வேறு இசை வாணர்களும், ஆடல் மகளிரும், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். நாளும் பொழுதும் விழாமலிந்து விளங்கியது, இராஜராஜேச்சுரம். ஸ்ரீகார்யம் என்றும், திருக்கோயில் நிர்வாகம் என்றும் பல துறையாகப் பிரிக்கப் பட்டிருந்திருக்கிறது. மாஹேஸ்வரக் கண்காணிகளின் தலைவராக, அரச குருவாகிய ஈசான சிவன் அரும் பணியாற்றியிருக்கிறார். திருக்கோயில் உள்பட சமயத் துறை முழுவதும், இவன் நம்பிக்கைக்கு உகந்த இவன் குடியில் தோன்றிய, பேரறிஞனான, ஆதித்தன் என்னும் பெயருடைய, மூவேந்த வேளான் பொறுப்பில் இருந்து வந்திருக்கிறது.

அரசியலுக்கு அமைந்த சிறந்த விதி முறை களைப் போன்று ஆலய நிர்வாகங்களுக்கும், அருமை யான விதிமுறைகள் வகுத்து நடைமுறையில் செயல் படுத்திய அறங்காத்த திறலுடையோனாக இராஜ ராஜன் திகழ்கிறான். வழிவழிவந்த மரபினருக்கு உரிமை உண்டென விதிவகுத்த அவன், அவரவர்க்கும் உரிய அறிவையும், ஆற்றலையும், திறமையையும், ஒழுக்கத்தையும், பெரிதும் வற்புறுத்தி உள்ளான். ஒவ்வொரு குடிக்கும், காணியாட்சியைக் கொடுத்துக் கடமையை நிறைவேற்றச் செய்த அவன் அக்குடியில், தகுதி உடையவன் இல்லாதபோது, அக்குடியினரே தகுதி உடையார் ஒருவரைத் தமக்காகக் கடனாற்றச் செய்யும் உரிமையை வழங்கினான். அக்குடியில் எவரும் இல்லாது ஒழியின் குறிப்பிட்ட அப்பணிக்குத் தக்காரை நியமிக்கும் அதிகாரத்தை அறம் ஆயும் குழுவுக்கு வழங்கி

யுள்ளான். அங்ஙனம் நிகழாதபோது, இறுதிக் கட்டத்தில் அரசு தலையிட்டு ஆவன செய்ய வழி வகுத்துள்ளான்.

இவன் காலத்துக் கல்வெட்டு போன்ற பிடிபாடுகள், சீரான எழுத்தில் செம்மையாக அமையப்பட்டுள்ளன. அவற்றுள் காணப்படும் எவையும், மிகத் துல்லியமாகக் கணித்து உணர்த்தப்படுகின்றன. சிறிய பொன் அணிக்குத் தருகிற விளக்கத்தைப் போலவே, பெரிய செப்புப் படிமங்களுக்கும் அளவைகள் உள்பட, தோற்ற வேறுபாடுகள் புலப்பட, அழகிய திருப்பேரும் சூட்டிப் புலப்படுத்தப் படுகின்றன. இவனுக்கு முன்னும் பின்னும் எந்த மண்டலத்து எம்மன்னனும் இங்ஙனம் எண்ணி, அளந்து நிறுத்து, சாற்றி, கணித்து விளக்கம் தந்ததிலன் என்று துணிந்து கூறலாம். இவற்றை எல்லாம் நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, எக்காலத்தும் எவ்விதக் குழப்பத்திற்கும் இடமின்றி எதையும் தெள்ளிதின் உணர்த்தவேண்டும் என்ற அக்கறையும் இவனுடைய ஆழ்ந்தகன்ற கூரிய நுண்ணறிவும் எவருக்கும் நன்கு புலப்படும்.

தன்னாட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு முழுவதையும், வளநாடு (District), கூற்றம் அல்லது நாடு (Taluk) என்று வரையறுத்தும், நிலங்களை அளவெடுத்தும், அடங்கல் ஏடுகளையும் அமைத்தான். மேலும் மேலும், அவற்றை நெறிப்படுத்திக் காத்துப் புரப்பதற்குக் கூறு செய்வார்களையும் நியமித்துள்ளான்.

தமிழகத்து வரலாற்றுத் துறைக்கு ஒரு சிறந்த சான்றாகத் திகழ்கிற மெய்க்கீர்த்திக்குச் செவ்விய முறையில் அடிகோலியவன் இராஜராஜனே. இவனுடைய மொழிப் பற்றும், கலைப் பற்றும், சமயப் பற்றும் ஒப்புயர்வற்றவை. எத்துறையையும் பொது மக்களுக்

கென்றும் அறிஞர்கட்கென்றும் இருவேறாக வகுத்து எழில் பெருக்கியவன் இவனே. தமிழ்க் கூத்து, ஆரியக் கூத்து என்றெல்லாம் நெறிப்படுத்திய அறிஞன் இவனே. எக்கலையும் இறைவன் திருமுன்றிலில் எழில் சுரக்க வழிகோலியதுடன், அவ்வவற்றைத் தக்கார்க்கெல்லாம் கற்பித்து அக்கலைகளை விளக்க ஆசிரியன்மார்களை யும், அவற்றைக் கண்காணிப்பவர்களையும் நியமித்த அறவோன். ஆகையினாலேதான் பண்டித சோழன் என்று பாராட்டப் பெற்றான். சோழ மன்னர்களுக் குள்ளே பல்துறை அறிவும் நிரம்பியவன் என்பதை உணர்த்தவே அக்காலத்துப் புலவர் பெருமக்களே இவனைப் பண்டித சோழன் என்று பரவி மகிழ்ந்தனர் போலும்.*

□ □ □

* இராஜராஜன்—நூலின் ஒரு பகுதி—1968.

6. முதல் சந்திப்பு

ஹிந்து மதாபிமான சங்கம்: காரைக்குடியின் திலகம் அது. செட்டிமார் நாட்டின் இளைஞர்கட்கு உயிரூட்டி உணர்வூட்டியதும் அச்சங்கமே! பல நூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர்களைக் கொண்டு பிரசங்கம் பண்ணுவித்தும், நலமுடைய கலாசாலை, புத்தகசாலை நாட்டியும், தம் குலமுயர நகருயர, நாடுயர உழைப்பதும் அச்சங்கப் பணிகள்.

இராமகிருஷ்ண கலாசாலை என்னும் ஒருபகுதி மூலம் இளைஞர்கட்குத் தமிழ்க்கல்வியைத் தக்க புலவர்களைக் கொண்டு கற்பித்து வந்தது. அதில் கற்ற பலருள் நானும் ஒருவன்.

அவரவர் பாடங்கள் முடிந்து விட்டாலும் யாரும் உடனே வீடு திரும்புவதில்லை. ஏனெனில் எப்பொழுதும் அறிஞர்கள் வந்து இருந்த வண்ணமாகவே இருப்பர். அப்படி யாரும் வாராவிடினும் பெரியவர்கள் யாராவது வரவிருப்பதற்கு வேண்டிய முன்வேலைகளைக் கவனித்தற் பொருட்டு இருக்க நேரிடும். இன்னும் கொல்லாமைப் பிரசாரம், சமூக சீர்திருத்தப் பிரசாரம் ஆகியவற்றினுக்கு வேண்டிய வேலைகள் செய்து கொண்டே இருப்பார்கள். அந்தக் காலத்தை நினைத்தாலே இன்றும் உள்ளம் இனிக்கின்றது.

யாராவது பெரியவர்கள் வருகின்றார்கள் என்றால் எங்கட்கு இன்னதெனக் கூறமுடியாத ஒரு உள்ளக் கிளர்ச்சி ஏற்படும்; அந்நாளை எதிர் பார்த்துக் கொண்டேயிருப்போம்;........வருடம்...மாதம்

ஸ்ரீமான் சி.சுப்பிரமண்ய பாரதியார் அவர்கள் வரப் போகின்றார் என்று சங்கத் தலைவர் கூறினார். அப்பொழுது பாரதியாரைப்பற்றி அவ்வளவாகத் தெரியாது. ஆனதால் நாங்கள் எல்லாம் அவர் யார்? எப்படியிருப்பார்? என்று ஒன்றுமே தெரிந்துகொள்ளா திருந்தது ஒரு வியப்பன்று.

பாரதியார் வந்துவிட்டார். செ.அ.ரா.க. பங்களா விலிருக்கின்றார் என்று ஒரு ஆள் வந்து சொன்னான். ஒருவருக்குமுன் ஒருவராக அவர் ஜாகை சென்றடைந் தோம். ஆளைப்பற்றி ஒன்றும் தெரியாவிட்டாலும் அவரைக் காணவேண்டுமென்ற ஆசைக்கு மட்டும் கங்கு கரைகிடையாது. பங்களாவுக்குள் சென்றோம். தாடியும் மீசையுமாய் ஒரு ஆளையும், குண்டாகாரமாய் இருந்த ஒரு ஆளையும் நாங்கள் கண்டோம். அழைத்து வந்தவரிடம் கேட்டுத் தாடிவாலாவே பாரதியார் என்று தெரிந்துகொண்டு அவரிடம் சென்று, நமஸ்காரம் செய்து அமர்ந்தோம். எங்களை அவர் கண்கள் சோதனை போட்டன. விபூதியும், சந்தனப் பொட்டும் பொலிந்த எங்கள் நெற்றிகளையும், ருத்ராட்சக் கெவுடு கள் அணிந்திருந்த எங்களுள் சிலரின் கழுத்துகளையும் அவர் கண்கள் கண்டன.

''சரி; சரி. இது வைதிக நாடு; திருப்பணி செய்வோரின் இருப்பிடம். நான் இப்படி இருத்தல் கூடாது. அம்பட்டன் வரவேண்டும். அவன் பின்னே எனக்கொரு பூணூலும் வரவேண்டும் என்ன தெரிந்ததா?'' என்றார் பாரதியார். அம்பட்டன் அழைக்கப்பட்டான். பாரதியார் தமது தாடியை மட்டும் க்ஷவரம் செய்யச் சொன்னார். மீசை இருக்க வேண்டுமென்று கூறிவிட்டார். ஸ்நானத்தை முடித்துக்

கொண்டு பூணூலைக் கேட்டார். கையிலிருந்து வாங்கிவந்த நாற்பதாம் நம்பர் நூல் சுருளைக் கொடுத்தார்கள். அதைவாங்கி முடியிட்டு உபவீத மாக்கித் தரித்துக் கொண்டு, சந்தனத்தால் ஒரு பெரிய கோபியை நெற்றிக்கிட்டுக் கொண்டு, "சபாஷ்! இப்பொழுதுதான் நான் சரியான ஹிந்து" என்று கூறிக் கொண்டார். அப்புறம் உணவு கொள்ளச் சென்றுவிட்டார்கள்.

காரைக்குடிக்குப் பாரதியார் வந்த பொழுது பகவத்கீதையைத் தமிழில் எழுதிக் கொண்டிருந்தார். ஏழு அத்யாயங்கள் வரை எழுதி அதைத் தம்முடன் கூடவே கொண்டு வந்திருந்தார். அது பாரதியாரின் மூட்டையிலிருந்தது. பாரதியாருடன் கூட வந்திருந்த குண்டுச் சாமியார் அந்த எழுத்துப்பிரதியை எடுத்துப் பறபறவென்று கிழிக்கத் தொடங்கிவிட்டார். எங்கட்கு ஒன்றுமே புரியவில்லை. பாரதியார் சாவதானமாக அவரைப்பார்த்து "என்ன ஸ்வாமி; என்ன இது?" என்று கேட்டார். "ஆதிநாராயணன் அளித்தான்; அழிக்கின்றான்" என்று அலட்சியமாய்ப் பதில் கூறி விட்டு இருந்தார். இந்த நிகழ்ச்சி எங்கட்கு அந்தக் குண்டுச் சாமியின்பால் அளவில்லாத அருவறுப்பை உண்டாக்கிற்று.

மற்றொரு நாள் பாரதியார் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். குண்டுச் சாமி அவரைத் தட்டி எழுப்பிவிட்டு "அடாடா! என்ன, உறக்கமோ? சரி. அப்படியானால் உறங்கு, உறங்கு" என்று குறும்பு செய்தார். நல்ல உறக்கத்தில் விழித்தவர் மீண்டும் கண் பொருந்தினாரோ இல்லையோ, குண்டுச் சாமி பக்கத்தில் கிடந்த ஒரு எலுமிச்சம் பழத்தை அறுத்து அவர்

கண்களில் பிழிந்துவிட்டார். பாரதியார் பதறித் துடித்து எழுந்துவிட்டார்.

இதன் பிறகு எப்படியாவது குண்டுச் சாமியை இவரை விட்டு பிரித்துவிடவேண்டுமென்று அன்பர்கள் பெருமுயற்சி செய்து அவருக்கு டிக்கட்டு எடுத்துக் கொடுத்துக் கையிலும் சிறிது பொருள் கொடுத்து மதுரையைப் பார்க்க அனுப்பிவிட்டார்கள்.

அதன் பிறகு, பாரதியார் ஒருநாள் குறிப்பிட்டு அன்று தன் பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறினார். காலம் போதாமையால் மற்றொரு தினம் ஏற்பாடு செய்வதாய்ச் சங்க நிர்வாகிகள் கூறினார்கள். "சரி. உங்களால் முடியாதென்றால் போங்கள்; நான் போடுகின்றேன் கூட்டத்தை" என்று பாடம் நடக்கும் இடத்தில் சென்று உபாத்தியாயர் மேசைக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு ஹிந்துமதம் என்பதைப்பற்றிப் பேசத் துவங்கிவிட்டார். அங்கிருந்த சிலர் மட்டும் அதைக் கேட்டு மகிழ்ந்தனர். அதன் சுருக்கம் புத்தக ரூபமாக சங்கத்தால் வெளியிடப் பட்டதென்று நினைக்கின்றேன்.

மற்றொரு நாள் "கரும்புத் தோட்டத்திலே" என்ற பாட்டைப் பாடச் சொன்னார்கள் சிலர். "அடே! நான் என்ன நாயா?" என்றார். எல்லோரும் ஏன் இப்படிச் சொல்லுகின்றார் என்று புரிந்துகொள்ள முடியாமல் விழித்தார்கள். "நாய் தானடா கக்கியதை மறுபடியும் உண்ணும்" என்றார். அப்படியானால் "புதுப்பாட்டு ஒன்று கூறுங்கள்" என்றார்கள். "அல்பாகா கோட்டு ஒன்று தந்தால் அதை அணிந்துகொள்வேன். பாட்டுத் தானாய் வரும்" என்றார் பாரதியார். இவருக்குச் சேரக்கூடிய கோட்டை எந்தக் கடையில் சென்று

வாங்கிவருவது? அப்பொழுது காரைக்குடி இப்பொழுதிருப்பதைப் போல இவ்வளவு வியாபாரப் பெருக்கம் உடையதன்று அங்கிருந்த அன்பர்கள் எல்லாம் தத்தம் வீடு சென்று தங்கள் தங்கள் கோட்டுகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அவற்றில் ஒன்று இவருக்குப் பொருந்திய அளவுள்ள தாயிருந்தது. அதை எடுத்துப் பாரதியார் அணிந்துகொண்டார். கோட்டை ஒரு தரம் பார்த்துக் கொண்டார். ''எனக்கென்றே அளவெடுத்துத் தைத்தது போலவிருக்கின்றதே. இது எனக்குத்தானே. நானே வைத்துக்கொண்டு விடலாமல்லவா?'' என்றும் கேட்டார். கோட்டுக்குரியவர் மனமிசைந்தார். அப்படியும் இப்படியுமாக சங்கத்தின் சுவரை நோக்கினார். கிருஷ்ணன் படங்கள் இரண்டு மூன்று, வெவ்வேறு நிலையிலிருந்தன. அவற்றுள் அவர் கண்கள் சென்று பாய்ந்தன. உடனே,

> காக்கைச் சிறகினிலே நந்த லாலா
> உன் கரிய முகம் தோன்றுதடா நந்த லாலா

என்ற பாட்டைப் பாடினார்.

எங்கள் உள்ளத்தை அது அள்ளிக் கொண்டு விட்டது. இன்னும் சில பாடல்களும் பாடினர். கொட்டா ஜெய பேரிகை முதலாய சில பாடல்களும் பாடினார். வில்லினை ஒத்தபுருவம் முதலியவை என்று ஞாபகம் கொட்டடா ஜெயபேரிகை பாடிக் கொண்டிருக்கும் பொழுது என் உடன் ஒத்த பருவத்தினரும் உயிர்த் தோழருமான ஸ்ரீ சித. இராமநாதன் அவருக்கு நேரே உட்கார்ந்திருந்தார். எப்படி இருந்தார்? முகவாய்க்கட்டையில் கையை முட்டித் தாங்கிக் கொண்டு, உடலைக் கூனியவாறு. பாரதியாரை பார்த்த கண் வாங்காமலிருந்தார். இவருடைய கூனிக் குறுகிய

உடம்பு பாரதியார் கண்களை உறுத்திற்று, "நிமிர்ந்திரடா! கூனற் பாண்டியா" என்று முதுகில் ஒரு போடு போட்டார். சுற்றியிருந்த எல்லோருடைய உடம்புகளுமே விரைத்து நின்றன என்றால் அடிபட்டவரை பற்றிக் கேட்கவா வேண்டும்!*

□ □ □

*முற்றுப் பெறா நிலையில் உள்ள இக் கட்டுரை அச்சில் வந்ததா என்று அறியவும் கூடுவதில்லை.

7. கட்டுப்பாடு

கட்டுப்பாடானது கலைக்கு முட்டுக்கட்டையா என்பதே நமது பிரச்னை. கட்டுப்பாட்டை முட்டுக் கட்டையாக மதிப்பது மனித இயல்பு. அதற்கு உட்படுவதென்றால்சிறிது சங்கடமாகத்தான் இருக்கும். அவ்வாறு சங்கடமாக இருப்பதனாலேயே அதனை முட்டுக்கட்டையாகப் பலரும் பாவிக்கிறார்கள். அதனுடைய ரகஸ்யத்தைச் சிறிதளவு ஊன்றி உணர்ந் தால் தெளிவு ஏற்படக்கூடும்.

முதலாவதாக, மனித வாழ்க்கையையே எடுத்துக் கொள்வோம். 'கண்டதெல்லாம் காட்சி கொண்ட தெல்லாம் கோலம்' என்பது போன்ற கதம்ப சித்தாந்தத் தையே சதுரான சித்தாந்தமாக மதித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்தினால் வாழ்கக்யையானது வடி வழிந்த குப்பையாக அமைந்துவிடும். ஆனால் அறம் என்ன கூறுகிறது? ஆன்றோர்கள் என்ன உரைக்கிறார் கள்? வாழ்வதென்பது எளிதான காரியம் இல்லை. அது ஒரு கலை. வாழும் வாழ்க்கையானது கலை நலம் மலிந்த, கண்ணிய வாழ்க்கையாக இருக்க வேண்டு மானால் ஒழுக்கம்வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் —திருக்குறள் 181

என்பது தமிழ் மறை. வாஸ்தவம். கட்டுப்பாடுதான் ஒழுக்கம். ஒழுக்கம்தான் கட்டுப்பாடு. கட்டுப்பாடு சார்ந்த வாழ்க்கையே கலை—அருமை செறிந்த வாழ்க்கை. தீயவைகளைத் தவிர்க்கவேண்டும். நல்லவை

களை நாடவேண்டும். துன்பத்திற்குத் துணை செய்யும் இனங்களைத் தள்ள வேண்டும். இன்பத்திற்குத் துணை செய்யும் இனங்களைக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதெல்லாம் மிகத்திறமையுடைய செயலே தவிர வேறில்லை. ஆரம்பத்தில் கட்டுப்பாடானது துன்பம் தரும் ஒரு சுமையாகத்தோன்றும். பழகப்பழக இன்பம் சுரக்கும் எழிலாக மிளிரும்.

அந்தக் காலத்தில் ஒரு வழக்கம் உண்டு. பரத நாட்டியம் ஆடுகின்ற அரங்கத்தில் மலர் பரப்பப் பட்டிருக்கும். நாட்டியம் ஆடுகின்ற பெண்ணானவள் சிறிதும் இலக்கண வழுவோ, தாளச்சிதைவோ இல்லாத படி ஆடிவருவாள். ஆடிமுடிந்தபின் பார்த்தால் பூவின் மீது யானையின் வடிவமோ அல்லது யாளியின் வடிவமோ ஏதாவது ஒன்று படிந்திருக்கும். சிறிது தாளம் பிசகினாலும் வடிவம் சிதைந்துவிடும். அத்தனை கட்டுப்பாடு.

பரதநாட்டியத்திற்குரிய கட்டுப்பாட்டைப் போன்றதுதான் வாழ்க்கைக்குரிய கட்டுப்பாடும். மனித வாழ்வும், வடிவமேம்பாடு பெற்ற வாழ்க்கையாக அதாவது, கலைநலம் செறிந்த வாழ்க்கையாக உருவெடுக்க வேண்டுமென்றால் முட்டுக்கட்டையாகத் தோற்றமளிக்கும் கட்டுப்பாட்டைத் தழுவினால்தான் முடியும்.

இனிமேல் வாழ்வோடு தொடர்புடைய, மற்றும் வாழ்வின் நலத்திற்கு இன்றியமையாததாகவும் இருக்கின்ற—கலைக்குக் கட்டுப்பாடென்பது மூக்கியமானது தானா, அல்லது முட்டுக்கட்டை போன்றதா,என்பதைச் சிறிது பார்க்கலாம்.

ஒவ்வொரு கலைக்கும் அதன் அதன் இயல்பினுக்கு ஏற்றவாறு கட்டுப்பாடு அமையவே செய்கின்றது. கவிதை செவிவழி சென்று சிந்தையை வசப்படுத்துவதால், அதற்குக் காலக்கட்டுப்பாடு இன்றியமையாததாகின்றது.

காலமானது ஓசை வடிவில் அமைந்து ஆதிக்கம் செலுத்துகின்றது. உரிய அளவிலிருந்து கூடினாலும் குற்றம்; குறைந்தாலும் குற்றம். ஏன் அதனைக் குற்றம் என்கிறோம் என்றால், செவியினால். அதனைக் ஏற்றுக் கொள்ள முடியாது. சிற்பக் கலையை எடுத்துக் கொள்ளு வோம். நீளம், அகலம், ஆழம் ஆகிய மூன்றனையும் தன்னகத்தே கொண்டு அது உருவாகிறது. என்றாலும் இயக்கத்தைக் காட்டத் தவிக்கிறது. நாடகக்கலையை எடுத்துக் கொள்ளுவோம். பாத்திரத்தோடு பாத்திரம் பேசும்பொழுது ஏதாவது ஒரு பாத்திரத்தின் மனக் கருத்து இன்னதென்பதை மற்றவர் உணர்ந்துகொள்ள வேண்டுமாயின், அதனைப் பாத்திரமே வாய்விட்டுச் சொன்னாலொழிய வேறுபடியாய் அறிந்துகொள்ள முடியாது. ஒரு பாத்திரத்தின் மனக்கருத்தானது எதிரே உள்ள பாத்திரத்துக்குத் தெரியக்கூடாதுதான். இருந்தா லும் நாடகம் பார்க்கின்றவர்களுக்குக் கண்டிப்பாகத் தெரிந்தே தீரவேண்டும். இல்லையா? அதற்கு என்ன செய்வது? தனித்தனியே அதை அச்சடித்து வழங்கி விடலாமா? புற உரையாகக் கூட்டத்தை நோக்கிப் பேசித்தீர்க்க வேண்டியதுதான். பேசுவது அடுத்த பாத்திரத்தின் காதில் நன்றாகப் படத்தான் செய்யும். ஆயினும்—அப்பாத்திரத்தின் கடமை என்னவென்றால், கேட்டும் கேளாத பாவனையில் மேற்செல்ல வேண்டியதைத் தவிர வேறு வழி கிடையாது. இவ்வாறு ஒவ்வொரு கலைக்கும் அதனதனுடைய இயற்கைக்கு ஏற்ப ஏதாவது ஒரு கட்டுப்பாடு அமையத்தான் செய்கிறது.

கவிதைக்கென்றால் காலக்கட்டுப்பாடு, சிற்பத்திற் கென்றால் இயக்கத்தை உணர்த்துவதற்கு ஏங்கும் ஏக்கக் கட்டுப்பாடு, நாடகத்திற்கென்றால் சிற்சில இடங்களில் கேட்டும் கேளாததாக நடிக்கும் நடிப்புக் கட்டுப்பாடு. இவ்வாறு ஒவ்வொரு கலைக்கும் ஏதாவது ஒரு விதமான கட்டுப்பாடு உருவாகவே செய்கின்றது. இக்கட்டுப்பாட்டை எந்தவிதத்திலும் உதறித் தள்ளவே முடியாது.

கலையின் இன்றியமையாத அம்சமாக இருக்கும் அதனை உதறித்தள்ள முற்பட்டால் கலை கலையாக மிளிராது. கட்டுப்பாட்டிற்குள் அடங்கினாலும் அதனையே இறக்கையாகக் கொண்டு பறக்கும் இயல்பு கலைக்கு வாய்த்திருப்பதனால் அதனை முட்டுக்கட்டை யாக மதிப்பது பொருந்தாது. இதுவரை ஒவ்வொரு கலைபற்றியும் அவ்வவற்றிற்குரிய இயற்கைக் கட்டுப் பாடுகள்—பல இருப்பினும், உதாரணத்திற்காக வேண்டி ஒவ்வொன்றையே பார்த்து வந்தோம். இவைகள் ஒரு புறம் இருக்க, இன்னும் சிலரகமான கட்டுப்பாடுகள் உண்டு. அவைகளைப்பற்றியும் சிறிது பார்ப்போம். பிரிவினை வசதிக்காக வேண்டி அவைகளை நாம் செயற்கைக் கட்டுப்பாடுகள் என்றழைக்கலாம்.

கலைஞன் எவனுக்கும் கலைஞன் என்ற முறையில் எப்பொருளையும், கலைப்பொருளாக மதிக்கும் உரிமை யுண்டு. மதிப்பதோடுகூட, அதற்கு நாமரூபாதிகளைக் கொடுக்கவும், செய்யலாம். ஆயினும் இந்த உரிமையைப் பரிபூரணமாக அனுபவிப்பதில் கட்டுப் பாட்டைப்புகுத்த வேண்டியதாகிறது. ஏனென்றால், கலைஞன் எவனுக்கும் இருவிதமான ஸ்தானங்கள் உண்டு: ஒன்று: கலைஞன் என்ற ஸ்தானம். மற்றொன்று பிரஜை என்ற ஸ்தானம். கலைஞன் என்ற ஸ்தானப்படி எப்பொருளையும் கலைப்

பொருளாக மதிக்கும் உரிமை உண்டு. மதிக்கப்படும் பொருள் மிகவும் கேவலமானதாகவும் இருக்கலாம். ஆனாலும் பிரஜை என்ற ஸ்தானமானது அந்த உரிமையை மறுக்கிறது. ஏனென்றால் ஆகத்தாழ்ந்த ஒன்றை கலைப்பொருளாக வெளியிடுவதன் மூலம், மக்களுடைய ஒழுக்கம் பாழ்படுகிறது. மக்களுடைய ஒழுக்கத்தைப் பாழ்செய்யும் ரீதியில் கலை ஆக்கமானது வெளியாகுமானால் வெளியாவதைத் தடுப்பதோடு வெளியாக்குகின்றவனுக்கும் தடைவிதிப்பது கடமையாகிறது. இல்லாவிட்டால் மக்களுடைய ஒழுக்கமல்லவா பாழாகிவிடும்? இந்த இடத்தில் கட்டுப்பாடு மிகவும் இன்றியமையாததுதான். ஆனால் இந்த உரிமையைத் தங்களுக்கு அனுகூலமானதாக வைத்துக்கொண்டு வைதிக சித்தாந்திகளும், தன்னல வர்க்கத்தினரும், கலை ஆக்கங்களைத் தடை செய்வதிலும், சிதைப்பதிலும் தீவிரமாக ஈடுபடுகின்றார்கள். அவர்களுடைய செயலைப் பார்க்கும்போது கட்டுப்பாடெல்லாம் முட்டுக்கட்டையாகத்தான் தோன்றுகிறது. அவர்களால் விதிக்கப்படுவது உண்மையான கட்டுப்பாடாக இருக்குமாயின் அதனைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் கட்டுப்பாடு என்ற பெயரால் தடையையே விதித்தால் அதனைச் சகித்துக் கொள்ள முடியுமா? மேலும் சகித்துக் கொள்ளுவதுதான் பொருந்துமா? பெரும்பாலும் கட்டுப்பாடு என்ற பெயரால் தடைகளே விதிக்கப்படுகின்றன.

சிறிதளவு சரித்திரத்தினுள்ளே புகுந்தால். இன்பக் கலை (Fine Arts)களின் வளர்ச்சிக்கு எத்தனை எத்தனை ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளன என்பது தெரியவரும். இன்னும் இன்பக்கலைகளே அன்றி, அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளிலும், அவ்வப்போது கலை ஆக்கங்

களுக்கு எத்தனை ஆபத்துக்களும், தடைகளும் தோன்றியுள்ளன? அவற்றையெல்லாம் இந்த இடத்தில் கவனிக்கப் புகுந்தால், பெரும்பாலும் தடைகளே கட்டுப் பாடு என்னும் பெயரால் புகுத்தப்பட்டிருப்பதை நாம் உணரலாம்.

இவ்வாறு செய்வது பொருந்துமா என்றால் எவ்விதத்தும் பொருந்தாது. ஒழுக்கக் கேடும் சமூகக் குழப்பமும், உண்டாக்கவல்ல முறையில் கலை ஆக்கம் அமையுமானால் அதனைத் தடை செய்வது பொருத்த மானதே. ஆனால் ஜாதி வேற்றுமை கொண்டோ, சமய வேற்றுமை கொண்டோ, அல்லது அரசியல் சம்பந்த மான கட்சி வேற்றுமை கொண்டோ, பொருள், செல் வாக்கு ஆகிய வசதிகளைத் துணைக் கொண்டோ தடை களைப் புகுத்த முற்பட்டால், அவைகளைத் தடைகள் என்று கொள்வதைத் தவிர கட்டுப்பாடுகள் என்று கொள்வது எவ்விதத்தும் பொருந்தாது.

கலை சம்பந்தப்பட்டமட்டில் கட்டுப்பாடுகள் என்று கொள்வதானால் இருவகையான கட்டுப்பாடுகளுக்கே விசேஷமான இடம் உண்டு. அவைகள் எவை என்று முன்னமேயே பார்த்துவிட்டோம். ஆயினும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்வோம். ஒன்று:ஒவ்வொரு கலைக்கும் அதன் அதன் இயல்பினுக்கு ஏற்றவாறு இன்றியமையாததாக ஏற்படும் கட்டுப்பாடு. மற்றொன்று:சமூகத்தின் ஒழுக்கநலன், சமாதானம் ஆகிய இவைகளை முன்னிட்டு எழும் கட்டுப்பாடு. இவை இரண்டும் இன்றியமையாத வைகளே.

இவைகளோடு கூட இன்னொரு விதமான தடை ஒன்று, கட்டுப்பாடென்னும் போர்வையைப் போர்த்துக் கொண்டு பேராதிக்கம் செலுத்தி வருகின்றது. ஒவ்வொரு

கலைக்கும் அதன் அதன் அமைப்புக் கேற்றதான இலக்கணக் கட்டுப்பாடு உண்டு.

உதாரணமாக இலக்கியத்தை எடுத்துக் கொள்ளுவோம். இலக்கியமானது இயற்கையின் சாயையை எடுத்துக் காட்டும் கண்ணாடி என்று வழங்கப்படுகின்றது. எப்படி என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது ஒரு கண்ணாடியை எடுத்துக் கொள்வோம். அதன் இயற்கை என்னவென்றால் அதன் எதிரே என்னபொருள் உண்டோ அதனுடைய சாயையை அக்கண்ணாடியானது எடுத்துக்காட்டும். அம்மாதிரியே இலக்கியம் என்ற கண்ணாடியானது மனித வாழ்வையும் அதன் அதன்பாலுள்ள பல்வேறு மர்மங்களையும் இன்னும் மனித வாழ்வின் பாமர வடிவம் அதனுடைய தெய்விக வடிவம், அத்தோடு மனிதன் வாழும் உலகத்தின் இயற்கை ஆகிய இவைகளின் சாயைகளையும், எடுத்துக்காட்டுகிறது. மிக நல்ல காரியந்தான். ஆயினும் இந்த இடத்தில் நாம் ஒன்றைக் கவனித்துக் கொள்ள வேண்டும். கண்ணாடிக்கு அதன் மேலுள்ள சட்டமானது, வரம்பாக அமைவது போன்று இலக்கியத்திற்கு இலக்கண விதியானது வரம்பாக அமைகின்றது இந்த வரம்பினை நாம் அவமதிக்க வேண்டா. மேலும் அவமதிக்கவும் கூடாது. ஆனாலும் ஓர் எச்சரிக்கை. ஏன் இந்த எச்சரிக்கை என்றால் இலக்கண வரம்பையொட்டி, எவ்விதத்தும், பாராட்ட முடியாததான வறட்டுச் சித்தாந்தம் ஒன்று தலை எடுத்துவிட்டது. இலக்கணவரம்பை மதிக்கின்ற ஒன்றே இலக்கிய வெற்றி என்று கருதப்படுகிறது. உண்மை அதுதானா என்றால் இல்லை. நதி ஒன்றை நாம் பாராட்டுவதாக வைத்துக் கொள்வோம். நமது பாராட்டெல்லாம் நதியில் ஓடிவரும் வெள்ளத்திற்குரியதா? அல்லது அதனை அணைத்து

நிற்கும் கரைக்குரியதா? சந்தேகமென்ன? வெள்ளத்திற்குத்தான் உரியது. இதைச் சொல்லவா வேண்டும்? அதெல்லாம் இல்லை. கரைக்குத்தான் உரியதென்றால் பொருந்துமா? பொருந்தாது. இல்லக்கணமெல்லாம் நதியின் கரைபோன்ற ஒன்றே தவிர வேறில்லை. கரையின் துணையால் வெள்ளத்திற்கு எவ்வாறு இயக்கம் சித்திக்கின்றதோ அவ்வாறே இலக்கண அமைதியினால் இலக்கியத்திற்கு நெறிதிறம்பா நீர்மை சித்திக்கின்றது.

எந்த விதத்திலும் இலக்கணமானது துணைச் சாதனமே அன்றி முதலாகிவிடாது. சில சமயங்களில் பெருகிவரும் வெள்ளமானது கரையைக் கடந்து செல்வது போல் மேதை பொங்கிவரும். இலக்கியமும் இலக்கணக் கரையை இடித்துச் செல்லுவதாக அமையும். அப்போது ரஸ-நயம் கருதி அதனைத் தழுவிக்கொள்ள வேண்டுமே தவிர, இலக்கண நந்தியை இடை புகச்செய்து கலா தரிசனத்தை மறைத்துவிடக் கூடாது. இலக்கணத்திற் கெல்லாம் இலக்கியத்தைக் காக்கும் கடமை உண்டேதவிர ஆக்கும் திறமை கிடையாது. அத்துடன் ஆட்சி உரிமையும் இல்லை.

கரையானது நதியின் கதியைக் காத்து நிற்கிறது. அதன் இயக்கத்திற்கும், வேகத்திற்கும் துணை புரிகிறது. ஆனாலும் அதே கரையானது தனது உரிமையை மீறி நதியின் குறுக்கே இடைபுகுமானால், வெள்ளம் அதனை அவமதிக்கத் தயங்காது. அதனை அழிக்கும். அல்லா விடில் அதனைத் தகர்த்தெறிந்து அப்பாலே பாய்ந் தோடும் மேதை வெள்ளமும் அத்தகையதுதான். இல்லையா?

கலைஞன் கலையை வெளியிடுகின்றான் என்பதன்றிக்கலையே கலைஞன் மூலம் வெளியாகின்றது

என்று கொள்ளும்படிக்கு அத்தனை வித்தகமான மேம்பாட்டுடன் பெருகும் மேதைவெள்ளமானது,

சேணில் பறக்கின்ற
செந்தமிழ்க் குதிரைக்குத்
திட்டேது, தட்டேது காண்

என்றபடி அடித்துக் கரைத்து அநாயாசமாய்ப் பொங்கிப் பொங்கிப் பெருகுமே தவிர, புல்லிய கட்டுப்பாடுகளைக் கண்டு பம்மிப் பதுங்கிவிடாது. கட்டுப்பாடுகள் கலையைத் தழுவுவதும், கலையானது கட்டுப்பாடுகளைத் தழுவுவதும் நண்பனை நண்பன் தழுவுவது போன்று இருக்க வேண்டுமே தவிர ஆண்டான் அடிமைரீதியில் அமையக் கூடாது அவ்வளவுதான்*

□ □ □

* வானொலிப் பேச்சு—திருச்சி—2 -8-1947

8. வகுப்பு வாதம்

வகுப்பு வாதம்-ஒரு பேய் என்று சொல்லுவார்கள். அது ஒரு பேய் மட்டுமில்லை. பிளேக், காலரா போன்ற ஒரு கொடிய பரவு நோய். அந்த நோய் இருக்கிறவரையில் எந்த நாட்டிலும் அமைதியைக் காணமுடியாது. வகுப்புவாதம் இல்லாது ஒழிந்தாலன்றி அரசியல், சமுதாயம், வாணிபம், பொருளாதாரம், கல்வி, வாழ்க்கை முதலிய எந்தத் துறையிலும் ஒழுங்கும் நேர்மையும் நிலவமாட்டா. வகுப்பு வாத நோயால் பீடிக்கப்பட்டு அவதியுற்றிருந்தமையினாலேதான் இந்தியவிடுதலையும் எட்டி எட்டிப் போய்க் கொண்டே இருந்தது. விடுதலை பெற்ற நாம் சுதந்தர மக்களாக வாழ வேண்டுமானால், வகுப்புவாதம் வேரோடு களைந்து எறியப்பட வேண்டும்.

எந்த விஷயத்தையும் சாதிப்பதற்குச் சாதனங்கள் பலவுண்டு. அப்படியே வகுப்பு வாத அரக்கனைப் பூண்டறுக்க, வழிகளும் பலவுண்டு. குறிப்பாக அவற்றுள்ளே இருவகையைக் கூறலாம். ஒன்று: சட்ட ரீதியாகப் பலாத்காரத்தைப் பிரயோகித்து வகுப்பு வாதத்தை ஒடுக்க முயல்வது. மற்றொன்று: அஹிம்ஸை முறையில் சந்தேகத்தையும், பகைமை உணர்ச்சியையும் போக்கி, உண்மையை உணர்த்தி, இதய ஒருமைப்பாடு ஏற்படுத்துவதன் மூலம் வகுப்பு வாதத்தை ஒழித்தல்.

இவ்விரண்டிலும் பலாத்காரத்தின் மூலமாகச் செய்யப்படும் முயற்சியால் வகுப்பு வாதத்தை ஓரளவு அடக்கி வைத்திருக்கலாமேயன்றி முற்றிலும் ஒழித்து

விடுவது முடியாத காரியம். ஆனால் அஹிம்ஸையின் மூலம் செய்யப்படும் முயற்சி பலன் தருவதிலே கால தாமதமானாலும், சாஸ்தவமான பலனை நிச்சயம் தரும். அதிகாரத்தாலும், சட்டத்தாலும், பலாத்காரத் தாலும் செய்யமுடியாத எத்தனையோ காரியங்கள் அன்பாலும், தர்ம உணர்ச்சியாலும், அஹிம்ஸையாலும் சாதிக்கப் பெற்றிருப்பதை நாம் நன்கு அறிவோம். இன்றேல் நெப்போலியன், தன் ராஜ்யம் சின்னா பின்னம் அடையும்பொழுது, "ஐயோ எவ்வளவு சிரமத் துடன், எண்ணற்ற படை பலத்தால், நான் ஸ்தாபித்த இந்த ராஜ்யம் இவ்வளவு சீக்கிரத்தில் தகர்ந்துவிட்டது. ஆனால் அன்பினாலே கிறிஸ்து பெருமான் ஸ்தாபித்த ராஜ்யம் எவ்வளவோ நாட்களுக்குப் பிறகும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது." என்றெல்லாம் கதறுவானா?

அஹிம்ஸை என்பது கையாலாகாதவனின் ஆயுதம் என்று எண்ணுவது வடிகட்டிய அறியாமையே யாகும். பலாத்காரத்துக்கு உடல் பலம் மட்டும் இருந்தால் போதும். ஆனால் அஹிம்ஸைக்கோ மனோபலமும் வேண்டும். ஆகவே அஹிம்ஸை கோழைகளின் ஆயுதம் அன்று என்பதும், வீரர்களின் ஆயுதமே என்பதும் தெளி வாகப் புலப்படும். அஹிம்ஸை என்பது வெறும் தார்மீக உணர்ச்சியேயன்றி காரியசித்திக்கான சரித்திரம் கண்ட முறையன்று என்று, ஒரு சாரார் வாதிக்கக்கூடும்.

அப்படிச் சொல்வது அவ்வளவு உண்மையன்று. சரித்திரம் நடந்தவற்றை, எடுத்துக் காட்டி நம்மை எல்லாம் அஹிம்ஸை நெறிக்கே இட்டுச் செல்கிறது என்பதுதான் நான் காணும் முடிவு.

ஒரு உதாரணம் பார்ப்போம் :

ஹிந்துக்கள் மஹாவிஷ்ணுவுக்குப் பத்து அவதாரம் கற்பிப்பது நமக்கெல்லாம் நன்கு தெரிந்ததே. அப்படிச் சொல்லுவது மெய்யல்ல. ஆனாலும் அதிலே உண்மை பொதிந்தே இருக்கிறது. பிறப்பு இறப்பெல்லாம் கடந்த பரம்பொருள், கேவலம் நம்மைப் போல வந்து பிறக்கிறான், இறக்கிறான் என்று சொல்லுவது அறிவுக்கே பொருந்தாத ஒன்றென்பதை நான் சொல்லித் தான் ஆகவேண்டுமா? கடவுள் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. ஆனால் எல்லாம் அவனே! எல்லாம் அவன் செயலே! என்ற உண்மையை உணர்ந்த பேரறிஞர்கள் நம்முடைய படிவளர்ச்சியைப் புலப்படுத்துவதற்கு தசாவதாரத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

உலக முழுதும் ஜல மயமாக இருந்த காலத்தில் ஜீவ ராசிகள் நீர்வாழ்வனவாகத்தான் இயங்க முடியும். இயங்கின என்பதையே நமக்கு மச்சாவதாரம் அறிவுறுத்துகிறது. ஜல மயமாக இருந்த உலகத்தில் சிறிது தரையும் கிளம்பிய பின்னர், ஜீவராசிகள் தரையிலும் இயங்கக் கூடியதாக அமைந்தன என்பதையே கூர்மாவதாரம் நமக்குப் புலப்படுத்துகிறது. போதிய அளவு நிலப்பகுதி தோன்றியதும் ஜீவராசிகள் தரையிலேயே சஞ்சரித்து வாழக்கூடிய முறையிலும் வளர்ந்தன என்பதை வராகாவதாரம் நமக்குத் தெரிவிக்கிறது. இப்படி மிருக பிராயத்திலிருந்த ஜீவராசிகள் மனிதத் தன்மையை அடையத் தொடங்கிய காலத்தை —அதாவது மிருகத் தன்மையிலிருந்து மனிதனாகும் அந்த மாறுகாலத்தை நமக்கு விளக்குவதுதான் நரசிம்மாவதாரம். இப்படியேதான் தசாவதார உண்மையை நாம் நோக்கவேண்டும்.

கடைசிப் பகுதியாகக் கற்பிக்கப்படும் இரண்டு அவதாரங்களை இப்பொழுது பார்க்கலாம். ராமனும்

கிருஷ்ணனும்தான் அவர்கள். அவர்களுடைய லட்சியம் தான் என்ன? தீமையைப் போக்கி, நன்மையை நிலைநாட்டுவதுதான் அவர்கள் லட்சியம். அதற்கு அவ் விருவரும் கைக்கொண்டமுறை என்ன? ராமன், தானே அஸ்திர சஸ்திரப் பிரயோகங்கள் செய்து தீமையாளர் களாக இருந்த மக்களைக் கொன்று வென்றான். ஆனால், கிருஷ்ணன் என்ன செய்தான்?

ராமன் காலத்திலே உள்ள மனித அறிவு கிருஷ்ணன் காலத்திலே இன்னும் சிறிது விளக்கம் பெற்றது. கிருஷ்ணன் யோசிக்கிறான்- தீமையை அழிப்பதா அல்லது தீமை செய்வோரையே அழித்துவிட்டுத் தீமையை அழித்துவிட்டோம் என்று எண்ணிக் கொண் டிருப்பதா? வேட்டியிலே இருக்கும் அழுக்கைப் போக்க வேண்டும் என்று எண்ணுகிறவன் வேட்டியையே பொசுக்கிவிட்டு, அழுக்கைப் போக்கிவிட்டேன் என்று எண்ணிக் கொள்வது சரியாகுமா? வேட்டியும் இருந்து அழுக்குப் போய்விட்டால்தானே உண்மையிலேயே அழுக்கைப் போக்கியதன் பலனை அனுபவிக்கலாம். இப்படிப்பட்ட உணர்ச்சி கண்ணன் உள்ளத்திலே அரும்புகிறது. தீமை போக வேண்டுமென்றால், தீயோன் தூயோனாகி, இருக்கவேண்டும், வழி என்ன? என்று யோசிக்கிறான் கண்ணன். கண்ணன் காலத்து மனித அறிவு இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை. ஆனால் மனிதனை மனிதன் கொல்லுவது என்பது மட்டும் தவறு என்பதை உறுதியாக நம்புகிறது அந்தக் காலத்து மனித அறிவு. ஆகவேதான் கண்ணன் பாரத யுத்தத்திலே படையெடுத்துப் போர் செய்ததாகப் பாரதம் புகலவில்லை. இந்தக் காலத்து மனித அறிவு அந்தப் பிரச்னையைத் தெளிவுபடுத்தியது மட்டுமன்று, தீர்த்து வைத்து விடுகிறது. அதைத் தீர்த்துவைக்கும்

அறிவுத் தெளிவைப் பெற்றிருப்பவர் தான் மகாத்மா காந்தியடிகள்.

அதர்மக்காரர்களோடு யுத்தம் செய்து கொலை பாவத்தைக் குவித்துக் கொள்ளாது, அதர்மத்தோடு யுத்தம் செய்து அழித்து, ஆனந்தத்தை நிலவச் செய்வதுதான் அடிகள் காட்டும் அற்புதப் பாதை. அதைத்தான் அஹிம்ஸை முறை என்று அறிஞர் உலகம் போற்றிப் பரவிப் புகழ்கிறது.

அந்த மகோன்னத முறையைக் கைக்கொண்டு வகுப்பு வாத நோயைத் தொலைப்பதற்கு உரிய வழியை பார்க்கலாம். இன்ப விடுதலை எய்திவிட்டோம் என்று எக்களித்துக் கொண்டிருக்கும் இந்தியர்களாகிய நாம் மேற்கேயும் கிழக்கேயும் வகுப்பு வாதத்தின் பேரால் நடைபெறும் அட்டூழியங்களை எண்ணிப் பார்த்தால் நமது சந்தோஷத்திற்குத் துளிகூட இடமில்லை என்பது நன்கு புலனாகும்.

வகுப்பு வாத வெறி இவ்வளவு தலை விரித்து ஆடுவதற்குக் காரணம் என்ன என்பதை முதலிலே பார்க்க வேண்டும். முதலாவது:மக்களின் அறியாமை. இரண்டாவது: மத வெறி. மூன்றாவது: பதவி மோகம். நாலாவது: செய்திகளை மூலை முடுக்கெல்லாம் பரப்ப ஏற்பட்டிருக்கும் நவீன சாதனங்கள். அறிவுத் தெளிவு இல்லாத பாமர மக்களிடையே பத்திரிகை, புத்தகம், பிரசார மேடை முதலியவற்றின் மூலம் ஜாதிமத வெறிகளை ஊட்டி, வகுப்புத் துவேஷங்களை மூட்டிவிடுகிறது. பட்டம், பதவி, பணம் ஆகியவற்றிலே மோகம் கொண்ட சில சுயநலக் கூட்டம் எவ்வளவோ நாட்களாக இந்திய மண்ணிலே, மக்கள் உள்ளத்திலே இந்த விஷத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றிவந்திருக்கிறது.

நாட்டின் நன்மையில் அக்கரையில்லாத தன்னலவாதிகள், அவர்கட்கு அனுசரணையாக அன்னிய ஆதிக்கமும் இருந்திருக்கிறது.

நாட்டிலே சாந்தியும், சமாதானமும் நிலவ வேண்டுமென்று ஹிருதய சுத்தியோடு எண்ணுகிறவர்கள் இந்த விஷத்தை துடைக்கப் பூரணமாகப் பாடுபட வேண்டும். மக்கள் உள்ளத்திலே ஒரு சாரார்மீது மற்றொரு சாரார் பகைமை கொள்ளாதபடி செய்யவேண்டும். பகைமைக்கு மூலகாரணமான சந்தேகம் ஒரு துளியும் எவர் உள்ளத்திலும் தோன்றாதபடி யாவரும் நடக்க வேண்டும். ஜாதி மத அடிப்படையிலே பகுக்கப்பட்டிருக்கும் உத்தியோகங்கள், ஸ்தானங்கள், பதவிகள் எல்லாம் தகர்த்தெறியப் படவேண்டும். ஜாதி உணர்ச்சியும் மதஉணர்ச்சியும் அரசியல் வாழ்விலே எங்கும் தலைகாட்டாமல் அடிக்க வேண்டும். பொது ஸ்தாபனங்கள் எதுவும் ஜாதி மத அடிப்படையிலே நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிராமணாள் காபி ஹோட்டல், முஸ்லீம் டீ ஹோட்டல், ஹிந்து ரெஸ்டாரண்ட், முஸ்லீம் ரெஸ்டாரண்ட் என்ற மாதிரி உள்ள போர்டுகள் தொங்கவிடுவது சட்ட விரோதம் ஆக்க வேண்டும். யாவரும் எங்கும் செல்ல அனுமதி அளிக்க வேண்டும்.

சுருதி, யுக்தி, அனுபவம் ஆகியவை வகுப்பு வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற உண்மையை நாடெங்கும் பிரசாரம் செய்யவேண்டும்.

ஒரு உதாரணம் பார்ப்போம்.

கடவுள் மனிதனை மட்டும் படைக்கவில்லை. இன்னும் எத்தனையே கோடி ஜீவராசிகளையும் ஆக்கிக் காத்து வருகிறது. மனிதனைத் தவிர மற்ற ஜீவன்களிலே ஜாதி மதப் பிரிவையோ பிளவையோ காண முடிய

வில்லை. மனிதன்தான் கடவுளுக்கு கோவில் என்றும் குளம் என்றும் அமைத்து அபிஷேக ஆராதனை,அலங்காரங்களை எல்லாம் செய்கிறான். மற்ற ஜீவன்கள் அப்படி ஒன்றும் செய்வதில்லை. இவ்வளவு பக்தி சிரத்தையோடு இருக்கும் மனிதனிடையில் மட்டும்தானா அந்தக் கடவுள் ஜாதி மத பேதங்களை எல்லாம் உண்டாக்குகிறான்? காக்கையிலே பிராமணக் காக்கை, க்ஷத்திரியக் காக்கை, வைசியக் காக்கை, பறைக் காக்கை என்றெல்லாம் பிரிக்க முடிகிறதா? ஹிந்துக் குருவி, முஸ்லீம் குருவி, கிறிஸ்தவக் குருவி, என்றெல்லாம் பாகுபாடு இருக்கிறதா என்பதை ஊன்றிக் கவனிக்கச் செய்யவேண்டும்.

மேலும் ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக இருக்கிற பகுதியிலே ஒரு தேர்தலுக்கு முஸ்லிம் ஒருவரை நிறுத்தி அவரை வெற்றியடையச் செய்யவேண்டும். முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் பகுதியிலே ஹிந்துவை நிறுத்தி வெற்றியடைச் செய்ய வேண்டும். இப்படியெல்லாம் செய்வதன் மூலம் மக்கள் உள்ளத்திலே சமரச மனோ பாவத்தை எளிதாக வளர்க்க முடியும்.

தனித்தொகுதிகள், ஸ்தானங்களையா பிரித்திருக்கின்றன. இல்லை—மக்கள் உள்ளங்களையே பிரித்துவிட்டன. ஒருவர் மீது ஒருவர்க்குச் சந்தேகமும் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட நலன்களும் இருப்பதாக ஆக்கிவிட்டன. நாகரிகமும், பண்பாடும் வேறுபட்ட, இருநாட்டார் என்ற நிலைமைக்குக்கூட அல்லவா கொண்டு போய்விட்டன.

மக்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல், பற்றற்று, எது சரி? எது தவறு? என்று நிதானித்துக் காரியங்களைச் செய்யவேண்டும். இரு சாராரிடையே அபிப்ராய பேதம் ஏற்படுகிறபொழுது பிறிதொருவர் மத்தியஸ்தத்தில்

விட்டு அதை மனப்பூர்வமாக ஏற்று நடக்கவேண்டும். உள்ளத்திலே அன்பு அரும்பி மலரத் தொடங்கிவிட்டால் சந்தேக நாற்றம் தானாகவே மறைந்துவிடும். சந்தேகம் தொலைந்தால் பகைமை பதறி அடித்துக் கொண்டு ஓடும். ஆகவே அன்பின் வழியது உயிர்நிலை என்பதைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். எந்த நல்ல காரியமும் யாரால், எப்பொழுது, எங்கே தொடங்கப்படுமென்று காத்திருக்க வேண்டியதே இல்லை. நம் உள்ளத்திலிருந்து நாமே அதைத் தொடங்கவேண்டும். சுய நலமில்லாத எந்த நன் முயற்சிக்கும் ஆண்டவனும் அன்பர்களும் என்றும் துணைபுரிவார்கள்.

இந்த ஜாதி, மத, பேத உணர்ச்சியைத் தொலைப்பதற்கு ஒரு புரட்சிகரமான மாறுதல் சமுதாயத்திலே ஏற்பட்டுத்தான் தீர வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். ஒரு ஜாதிக்குள்ளே ஒருவரை ஒருவர் கல்யாணம் செய்து கொள்ளப்படாது என்றுகூட சட்டம் செய்யவேண்டும் என்றும் நான் ஆசைப்படுகிறேன். ஒரு மதத்திலே உள்ளவர்கள் பிற மதத்திலே கல்யாணம் செய்து கொண்டு இருவரும் தத்தம் மத அனுஷ்டானத்தையும் நம்பிக்கையையும் விடாமலேயே வாழ்வதற்கு சமுதாயமும் சட்டமும் அனுமதியளிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் பரிபூரண அஹிம்ஸை முறையிலே நிறைவேற்றி வைக்கலாம்.*

□ □ □

---

* நாற்பது ஆண்டுகட்கு முன் பேசப்பெற்ற (வானொலி திருச்சி—6-10-1947) இக் கருத்து இன்றும்கூட ஏற்புடையதாக இருக்கிறது. இல்லையா?

—பதிப்பாசிரியர்

9. எது விடுதலை?

எது விடுதலை? விடுதலையைப் பற்றி மகா கவி வள்ளுவன் என்ன பேசுகிறான்; திருக்குறள் முழுவதை யும் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். விடுதலை என்ற சொல் எங்கும் காணப்படவில்லை. வள்ளுவனோ விடுதலையைப் பற்றி ஒரு வார்த்தைகூட,கூறிவில்லையே என்ன செய்வது? என்று ஆழ்ந்த யோசனையில் இருந்த நான், சற்று கண்ணயர்ந்துவிட்டேன். பெரியவர் ஒருவர் வந்து என் பக்கத்திலே அமர்ந்தார். 'என்ன தம்பி யோசனை பலமாக இருக்கிறது. நான் வந்ததைக் கூட நீ கவனிக்கவில்லையே?' என்று சொல்லி என் தோளைப் பிடித்து ஒரு உலுப்பு உலுப்பினார். திடுக் கிட்டு நான் அவரை நோக்கினேன். எனது இரு கரமும் தாமாகவே குவிந்து தலைமிசை அமர்ந்தன. வந்த பெரியவரின் தோற்றப் பொலிவு அவ்வளவு காம்பீர்ய மேதை கொண்டதாக இருந்தது. அவருடைய ஆழ்ந்து அகன்ற கூர்த்த நோக்குடைய கண்கள் அவர் உலக லட்சியவாதிகளிலே ஒப்பற்றவர் என்பதைப் பறை சாற்றிக் கொண்டிருந்தன. அறுபது ஆண்டுக்குக் குறை யாதவராகத் தோற்றிய அவருடைய உடம்பில் இருந்த உறுதிப்பாடு அவர் எவ்வளவு சிறந்த ஒழுக்க சீலர் என்பதை எடுத்துரைத்துக் கொண்டேயிருந்தது. மொத்தமாகச் சொன்னால் அவர் ஒரு பெரிய மகான். இவரை யாரென்று தெரிந்துகொண்டுவிட வேண்டு மென்று உள்ளம் மறுகியது. ஆனால் நீங்கள் யாரென்று இவ்வளவு பெரியவரைப் பார்த்துக் கேட்கும் துணிச்சல்

எனக்கு எங்கிருந்து வரும்? துணிச்சல் இருந்தாலும் நான் அப்படிக் கேட்பது நயத்தக்க நாகரிகமாகுமா?

என் உள்ளத்திலே ஏற்பட்ட இந்தக் குழப்பத்தை எல்லாம் அந்தப் பெரியவர் தெரிந்துகொண்டுவிட்டா ரென்று தெரிகிறது. இல்லாவிட்டால் என் உதடு அசை யாமல் இருந்தும் எனக்கு வேண்டியதை எல்லாம் எப்படி அவர் சொல்ல முடியும்? அவர் என்னைப் பார்த்து,

"தம்பி, நான்தான் வள்ளுவன். நான் விடுதலை யைப் பற்றி ஒன்றுமே பேசவில்லையே என்று நீ அங்கலாய்த்துக்கொண்டிருந்தாய். ஆம், அது உண்மை தான். நான் ஏன் விடுதலையைப்பற்றிப் பேச வேண்டும்? எனக்கு எப்படி விடுதலையைப் பற்றிய எண்ணம் உண்டாகும்? நன்றாக யோசித்துப் பார். என் காலத்து மக்கள் அடிமை நிலையில் இருந்தால்தானே விடுதலை யைப் பற்றி நான் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டி ருக்கும். நாங்கள் அடிமைகளாக உழன்று கொண்டிருந் தோமல்லோம். சுதந்திர மக்களாக வாழ்ந்துகொண்டி ருந்தோம். ஆகவேதான் நானும் விடுதலையைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமே இல்லாமல் போய் விட்டது. ஆனாலும் சுதந்திர மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பரக்க விளக்கியிருக்கிறேன், எனது நூலிலே. ஏன், எனது நூலே முற்றிலும் சுதந்திர மக்கள் வாழும்வகையை வகுத்துரைப்பதுதான். உண்மையான சுதந்திர மக்கள் அன்பும் அறமும் உடையவர்களாக வாழ வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை பண்பு டையதாகவும், பயனுடையதாகவும் இருக்கும். இதைத் தான்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

என்று கூறிப் போந்தேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் லட்சணம் இதுதான். உண்மையான சுதந்திரமக்கள் அற்ப இன்பங் களுக்காக, அதாவது சுயநலத்தின் பொருட்டு அதர்ம மான காரியங்களைச் செய்யமாட்டார்கள். தன்னலம் ஒன்றையே குறியாகக் கொண்டு எது எக்கேடு கெட்டாலும், எனக்கு என்ன லாபம் என்று மட்டும் பார்ப்பார்கள் சிலர். இதனை,

சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டுபவர்.

என்பதிலிருந்து நீ விளங்கிக் கொள்ளவில்லையா?

தம்பீ, நீ உண்மையான விடுதலையை விரும்பினால் ஆசையை விட்டொழிக்க வேண்டும். அந்த விடுதலை இகத்தைப் பொறுத்த தாயினும் சரி, அல்லது பரத்தைப் பொறுத்ததாயினும் சரி, ஆசையைத் துறந்தவருக்குத் தான் அது கிட்டும், இதைத்தான் நான்,

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

இந்த ஆசைக்கே அடிப்படை இன்ப உணர்ச்சி. அதாவது தான் சுகமாக வாழவேண்டுமென்பது. கேவலம் உடல் அல்லது மனச் சுகத்திற்கு ஆசைப்படுபவர் எந்த வழியிலாயினும் என்ன செய்தேனும் அதை அடைய முயல்வார்கள். ஆகவே அறநெறி, அன்பு நெறி, எல்லாம் சிதறுண்டு போகும். ஆதலால்தான் நான்,

---

திருக்குறள்—*45, 173, 361.*

இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்

என்று எழுதி வைத்திருக்கிறேன்.

தம்பீ, இப்பொழுது விடுதலை பெற்ற எனது பின் சந்ததியாரான உங்களையெல்லாம் காண நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். அன்னை கை விலங்கை அறுத்தெறிந்து உலகத்திலே உயர்ந்த நிலையை அடைந்து வாழும் நீங்கள், சுதந்திர தேவியை திரிகரண சுத்தியோடு வணங்கி வழிபட வேண்டும். அந்த வழிபாடு கேவலம் வாடி வதங்கிப் போகும் மலர் வகைகளையோ, அழுகி அழிந்து போகும் பழ வகைகளையோ கொண்டு நடத்தி விடக்கூடியது அன்று. வாழ்க்கையிலே உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலந்தான், சுதந்திர தேவிக்கு வணக்கம் செலுத்த முடியும். நீங்கள் உண்மையாகவே சுதந்திர மக்களாக இருந்தால் உங்கள் நாட்டிலே பசியும் பிணியும் பகையும் துளிகூட இருக்கப் படாது. அப்பொழுதுதான் உங்கள் நாடு சுதந்திர நாடு.

உறு பசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

தெரிந்ததா? மேலும் நீங்கள் இப்பொழுது சுதந்திர மக்கள். உங்கள் குற்றங் குறைகள் இனி உலக முற்றிலும் உடனுக்குடனே விளம்பரப்படுத்தப்படும். ஆகவே நீங்கள் உங்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் மாசு மறு அற்றதாக இருக்கும்படி கன ஜாக்கிரதையாக வாழ்ந்து வரவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உயருகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு உங்கள் குற்றம் அதிகமானவர்களுக்குப் புலப்படும். இதைத்தான்,

---

திருக்குறள்—628, 734,

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

என்று சந்திரனை உபமானமாகக் காட்டி விளக்கி இருக்கிறேன்.

விடுதலை அடைந்து விட்ட நீங்கள் உன்னத ஸ்தானத்தை வகிக்கிறீர்கள். அந்த ஸ்தானத்தை நீங்கள் மிகக் கண்ணுங்கருத்துமாக இருந்து காப்பாற்றிக் கொள்ளவேண்டும். கொஞ்சம் சிந்தித்துப் பார் தம்பீ! நமது உடம்பிலே உச்ச நிலையிலே இருப்பது நமது தலை மயிர். அதை நாம் எவ்வளவு பேணி அழகுபடுத்தி மகிழ்கிறோம். அப்படிப்பட்ட மதிப்புக்குரிய மயிரொன்று கீழே விழுந்துவிட்டால் அதை எவ்வளவு கேவலமாகக் கருதுகிறோம். தலையிலிருந்தபோது அதற்குச் செய்த பணிவிடைகள் என்ன, அது கீழே விழுந்துவிட்ட பிறகு நாம் அதைச் செய்கிற உதாசீனம் என்ன, பார்த்தாயா? அப்படித்தான் தம்பீ, மக்கள் விஷயமும்.

மனித தர்மத்தோடு நடப்பவரை உலகம் தலைமீது தாங்கிக் கொண்டு குதித்துக் கூத்தாடும். தவறிவிட்டால் காலாலே எத்தி உதைத்து கேலி நகை செய்யும். இதை நன்றாக உணர்ந்து சுதந்திர மக்களாகிய நீங்கள் அறவொழுக்கத்திலும், அன்பொழுக்கத்திலும் சிறிதும் வழுவாது வாழ வேண்டும் என்பதை எண்ணித்தான்,

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

என்று இவ்வளவு அழுத்தமாகச் சொல்லியிருக்கின்றேன்.

---

* திருக்குறள்—957, 964

தமிழ் மக்களாகிய நீங்கள் திருக்குறள் முழுவதையும் நன்கு பயின்று அதை வாழ்க்கையிலே இடைவிடாது கடைப்பிடிக்க வேண்டும்.

அதுதான் விடுதலைக்கு நல்லணி'' என்று சொல்லி மறைந்தார்.

கண்ணை விழித்தேன். கனவும் மறைந்தது. அந்தக் கனவு நிகழ்ச்சியை உங்களிடம் சொல்லிவிட்டேன்.*

□ □ □

---

* வானொலி உரை—திருச்சி—*13-4-1949*

10. வெறும் பாசந்தானா?

கணேசன் : வாங்கய்யா! நடராஜன். என்ன சங்கதி?

நடராஜன் : ஆமா! இதெல்லாம் வெறும் பாசந்தானா?

கணே : என்னய்யா, வந்ததும் வராததுமாய்ப் புதிர் போடுகிறீர்கள். எதெல்லாம்.........?

நட : ஆமா, ஸார். நமக்கு சுயராஜ்யம் வந்தாலும் வந்தது, எது மாறினாலும் மாறாது போனாலும் பெயர் மாற்றத்துக்கு மட்டும் குறைச்சலில்லை.

கணே : என்னய்யா, புதிர்மேலே புதிராக இருக்கிறது. என்ன பெயர்? என்ன மாற்றம்? அதிலே என்ன பாசம்? ஒன்றும் புரியலையே. கொஞ்சம் விபரமாக ஆர, அமர இருந்து, விஷயத்தைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

நட : சரி உட்கார்ந்தாச்சு. இனி ஆர, அமர்ந்து பேசலாம்.

கணே : பேஷா.

நட : சுயராஜ்யம் வந்ததும் வராததுமாக நம்ம கவர்ன் மென்ட் ஊர்ப்பெயர்களைத் தினந்தோறும் மாற்றிக் கொண்டே வருகிறது. ஒரு ஊர்ப்பெயர் எப்படி இருந்தாலென்ன? திருச்சியை இத்தனை காலமாக திருச்சினாப்பள்ளி என்றெல்லாம் சொல்லி வந்தோம், இல்லையா? இப்போது திடீர்னு ஒரு நாழி திருச்சிராப்பள்ளி என்று பெயர் மாற்றப் பட்டு விட்டது.

இதைவிடக் குழப்பத்தை உண்டு பண்ணக் கூடிய மாற்றம் வேறு ஏற்பட்டு விடுகின்றன.

உங்களுக்குத்தான் தெரியுமே. ஹைதராபாத்தின் மீது நமது சர்க்கார் போலீஸ் நடவடிக்கை எடுத்த தல்லவா? அப்பொழுது, ''விஜயவாடாவிலிருந்து பட்டாளம் புறப்பட்டு விட்டது'' என்ற ஒரு செய்தி பத்திரிக்கைகளிலே கொட்டை எழுத்தில் வெளி யாயிற்று. விஜயவாடா என்ற ஊர் எங்கே இருக் கிறது, நமது மாகாணத்திலே உள்ள இத்தகைய பிரதான நகரத்தைப்பற்றி நாம் இதுவரையிலே தெரிந்து கொள்ளாமலல்லவா இருக்கிறோம் என்று தேசப்படத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தால் அதில் அப்படி ஒரு இடத்தையே காண முடிவ தில்லை. கடைசியாக சிலதினங்களுக்குப் பிறகுதான் பெஜ்வாடா என்பது விஜயவாடாவாகி விட்டது என்ற செய்தி தெரிய வந்தது. இப்படிப்பட்ட மாற்றத்தால் மனத் தடுமாற்றத்தை தவிர வேறு யாருக்கு என்ன பயன்? மேலும் இதனால் பொது ஜனங்களுக்கு எவ்வளவு பணவிரயம் தெரியுமா? அரசாங்கத் திற்குத்தான் எவ்வளவு பொருள் நஷ்டம்.

கணே : இதனால் என்னய்யா பொருள் நஷ்டம்? ஏதோ நல்லாயிருந்த பெயர் நடுவிலே கெட்டுப் போயிருந்ததைத் திருத்தினால் யார் யாருக்கோ என்னென்னவோ நஷ்டம் என்று பிரமாதப்படுத்து கிறீர்களே! ஆம். நீங்களோ பொருளாதார ஆசிரியர். எந்த வகையில் கஷ்டம் என்பதைச் சொன்னாலல்லவா எங்களைப் போன்றவர்களுக்குப் புரியும்.

நட : சொல்லுகிறேன் கேளுங்கள். எத்தனையோ ஆயிரக் கணக்கானவர்கள் லெட்டர் பேப்பர், ரப்பர் ஸ்டாம்பு முத்திரைகள், போர்டுகள்—போன்ற வற்றை இப்பொழுது புதுப்பிக்க வேண்டி ஏற்பட்ட

தனால் உள்ள நஷ்டத்தை எவ்வளவு இருக்கும்-என்பதை நீங்கள் யோசித்துப்பாருங்கள்.

கணே : வாஸ்தவம் ஒப்புக்கொள்கிறேன். இந்தப் பெயர் மாற்றத்தால் பொதுமக்களுக்கும் அரசாங்கத் துக்கும் கொஞ்சம் பண நஷ்டம் ஏற்படத்தான் செய்யும் என்பது உண்மைதான். ஏதோ சில காரணங்கள் என்பதற்காக ஒரு ஊரின் பெயரைத் தவறாகவே உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டுமா என்ன?

நட : வேண்டா. திருச்சினாப்பள்ளி என்பதை, திருச்சிராப் பள்ளி என்று மாற்றியதனால் அந்த ஊருக்கு என்ன புதிய அந்தஸ்து ஏற்பட்டு விட்டது. அல்லது திருச்சினாப்பள்ளியாக இருந்த போதுதான் அதற்கு என்ன குறைவு நேர்ந்து விட்டது? ஒன்று மில்லை. இதற்கெல்லாம் காரணம் வெறும் பாசம். ஏற்பட்ட பலனோ பணத்திற்கு நாசம். இல்லையா?

கணே : பேஷ்! பொருளாதார ஆசிரியருக்கு ஏற்பட்ட ஆத்திரம் பிராசத்துடன் அல்லவா வெளிப்படு கிறது. இந்தபெயர் மாற்றத்துக்குக் காரணம் வெறும் பாசம் அன்று. தவற்றைத் திருத்த வேண்டும்; தமிழ் நாட்டில் தமிழ்ப்பெயரைத் தவறாக எழுதியும் சொல்லியும் வருவது மாற்றப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் விளைவுதான் அது. அதனால் ஏதோ பண நஷ்டம் ஏற்பட்டது என்றால் அதற்காக நாம் வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு மாறாக சந்தோஷப் படத்தான் வேண்டும்.

நட : என்ன! பண நஷ்டத்துக்காக, சந்தோஷப்பட வேண்டுமா? காரணம்?

கணே : பொருளாதார ஆசிரியருக்கு விளக்கம் தேவையில்லை. நாட்டிலே ஏற்பட்டிருக்கும் பணவீக்கத்தை தணிப்பதற்கு இதுவும் ஒரு அளவாவது உதவி செய்தால் சந்தோஷப்பட வேண்டியதுதானே?

நட : அப்படியா? ஏதோ கொஞ்சம் ஒப்புக் கொள்ளலாம் அவ்வளவுதான். இப்படிப் பட்ட பெயர் மாற்றத்துக்குக் காரணம் வெறும் பாசம் மட்டும் காரணம் அன்று என்று கூறுகிறீர்கள். ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் நீண்ட காலமா இருந்து வந்த 'விருதுப்பட்டி' என்ற ஊரை 'விருது நகர்' என்று மாற்றியிருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள். மேலும் விருதுப்பட்டி என்ற சொல் தனித் தமிழ்ச் சொல். பட்டி என்ற சொல்லை நீக்கி நகர் என்ற சொல்லைச் சேர்த்து இருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

கணே : ரொம்பச் சரியான கேள்வி பட்டி என்ற சொல் குடியிருப்பைக் குறிப்பதாகும். பேரூராக வந்து விட்ட ஒன்றைப் பட்டி என்றா அழைப்பது? இது பொருத்தமாக இல்லையே—என்ற உணர்ச்சியின் காரணமாகத்தான் அந்த ஊர்க்காரர்கள் விருதுப் பட்டியை விருதுநகராக மாற்றினார்கள். நகர் என்ற சொல்லை இனியும் நாம் ஏன் வட சொல்லாகக் கருதவேண்டும்? எத்தனையோ சொற்களை ஏற்று ஜீரணித்துக்கொண்டுவிட்டதைப் போல் இந்தச் சொல்லையும் தமிழன்னை ஜீரணித்துக் கொண்டுவிட்டாள் என்பதை ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும். ஆனால் தமிழ் மரபுக்கேற்ப நகர் என்பதை நகரம் என்று அமைத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். விருதுநகர் போன்ற பெயர் மாற்றங்கள் 'ஸெண்டிமெண்ட்' என்ற பாச

உணர்ச்சியின் காரணமாக அமைந்தவைதாம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

நட : சரி. நமது ஊரில் ஒரு பகுதியான செக்காலை இருக்கிறதே, அதை ஏன் ஜெயங்கொண்டபுரம் என்று அழைக்கிறார்கள். செக்காலை என்பது சுருக்கமாகவும் அழகாகவும் தனித் தமிழ்ப் பெயராகவும் இருக்கும்போது ஜெயங்கொண்ட புரம் என்ற நீளமான பிறமொழிச் சொற்கள் கலந்த பெயரை ஏன் இடவேண்டும். இதுவும் வெறும் பாசம் காரணமாக ஏற்பட்ட சங்கதிதான் இல்லையா?

கணே : முற்றிலும் இல்லை. எனினும் ஒரு அளவுக்கு ஆம் என்றுதான் பதில் சொல்ல வேண்டும். செக்காலையை வீதி பிரித்து மனை வகுத்தவர்கள் தங்கள் குலதெய்வமான ஜெயங் கொண்டாரின் மீது கொண்ட பக்தி காரணமாக ஜெயங்கொண்ட புரம் என்று பெயரிட்டார்கள். அதற்கு முன் ஓர் ஒழுங்கும் உருவும் பெறாமல் அந்த இடத்தில் ஒரு குடியிருப்பிருந்தது. அதற்கு செக்காலை என்று பெயர் வழங்கி வந்தது, இதுதான் செக்காலை என்ற சொல். அவர்களுடைய உள்ளத்தை எந்த அளவிலும் குறுகுறுக்கவில்லை. அவர்களின் 'ஸென்டி மென்ட்' என்ற பாச உணர்ச்சிதான் காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. இல்லையா?

நட : ரொம்ப சரி. ஆனால் இதற்கென்ன சொல்கிறீர் கள்.

கணே : எதற்கு ஸ்வாமீ? அதைச் சொல்லுங்கள். இதற் கென்ன சொல்லுகிறீர்கள் என்றால் நான் என்னத் தைச் சொல்வது.

நட : அதுதான் 'சொக்கன் ஏந்தல் என்று அழகாக உள்ள பழைய பெயர் சொக்கலிங்கம் புதூர் என்று மாற்றப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன காரணம் சொல்லுகிறீர்கள்.

கணே : இதற்குக் காரணம். தப்பெண்ணம் தான். சொக்கன் என்ருல் மரியாதைக் குறைவு என்று தவறாக எண்ணிக் கொண்டதுதான். சொக்கன் என்பது சிவனைக் குறிக்கும் ஒரு சொல். 'அன்'-என்ற ஆண்பால் ஒருமை விகுதியுடன் முடிவதால் ஐயோ! சிவபெருமானை இழிவு படுத்தியதாகிவிடுமோ என்று அஞ்சி சொக்கனேந்தல் என்பதைச் சொக்கலிங்கம் புதூர் என மாற்றியிருக்க வேண்டும். ஆனால் சொக்கனேந்தல் என்ற பெயருக்கு உள்ள இனிமையும் கவர்ச்சியும் அலாதிதான்.

நட : ஆட்சேபணை என்ன? இதிலிருந்து நீங்கள் பெயர் மாற்றத்துக்குக் காரணம் வெறும் பாசம் மட்டு மன்று என்று கருதுகிறீர்கள்.

பலவேறு காரணங்களால் உண்மைப் பெயர் தேய்ந்தும் சிதைந்தும் போயிருப்பதை செம்மை செய்யும் நோக்கத்தால் திருத்தப்படுகிறது.

ஸென்டிமென்ட் என்ற பாச உணர்ச்சியின் காரண மாக மாற்றப்படுகிறது.

தெய்வபக்தியின் காரணமாகப் பெயர் அமைக்கப் படுகிறது. தப்பெண்ணத்தின் காரணமாக நல்ல பெயர்களும் திருத்தப்படுகின்றன, என்று சொல் கிறீர்கள். இல்லையா?

கணே : கணக்காகச் சொல்லி விட்டீர்கள். இந்த நான்கும் பெயர்கள் திருத்தப்படுவதற்கு மிக முக்கிய மான காரணங்கள். இவை தவிர இன்னும் வேறு

காரணங்களும் உண்டு. அவற்றில் வேடிக்கையான, கோமாளித்தனமான காரணங்களும் கூட உண்டு.

நட : ஏதாவது ஒன்றிரண்டு உதாரணம் சொல்லுங்கள். தொந்தரவாக இருந்தால் வேண்டாம்.

கணே : பூ! பொல்லாத தொந்தரவையா. தாராளமாகச் சொல்லுகிறேன். கேளுங்கள். ஸ்நானம் செய்வதற்கு அற்புதமாக அமைந்த கடல்துறை தனிக்கோடி. அதற்கு ஒப்பான ஒருகடல்துறை வேறெங்குமே இல்லை. கடலின் உள் ஒரு தரை முனையாகவும் அது இருக்கிறது. எனவே அது தனிக்கோடி என்று பெயர் கொண்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் புராணக் காரர்கள் ராமன் தன் வில்லின் முனையால் அங்கே ஒரு கிணற்றை தோண்டினான். அதனால்தான் அந்த இடத்திற்கு 'தனுஷ்கோடி' என்றபெயர் உண்டாயிற்று என்று காரணம் காட்டத் தொடங்கி விட்டார்கள்.

"கூவல் ஒன்று அகழ்ந்தான், வில்லின் கோடியால்"

—என்பது சேது புராணச்செய்தி. அன்றியும் உங்களுக்குத் தான் நன்கு தெரியுமே, சென்னையிலுள்ள 'பார்பர்ஸ் பிரிட்ஜ்'— 'வாஷர்மென்பெட்'—சமாச்சாரமெல்லாம். ஹாமில்டன் பிரிட்ஜ், அம்பட்டன் வாராவதியாகி அது பிறகு 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்று மொழி பெயர்க்கப் பட்டதையும், வண்ணார் பேட்டையை வாஷர் மென்பெட் என்று கூறுவதும் கோமாளித்தனம் என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது?

நட : அருமை; அருமை. 'மிக நல்லாச் சொன்னீர்கள். இன்னமும் ஒன்று. எங்குபார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் இப்பொழுது எடுத்ததற்கெல்லாம்

காந்தி பெயரை வைக்க முனைகிறார்களே அதை என்ன என்று சொல்லுவது?

காந்தி நகர், காந்தி குப்பம், காந்தி கிராமம், காந்தி மாளிகை, காந்தி விலாஸ் காப்பி ஹோட்டல். காந்திதெரு, காந்தி வீதி, என்று தொட்டதற் கெல்லாம் காந்தி பெயரைச் சூட்டுவது என்றாகி விட்டது. இல்லையா?*

இதை என்ன என்று சொல்லுவது என்பதே எனக்குப் புரியவில்லை. காந்தி பாசமா? காந்தி பக்தியா? காந்திமோகமா? அல்லது வெறும் வெளிப் பகட்டுத்தானா?

கணே : நீங்கள் சொல்லியது முழுவதும் உண்மைதான். பக்திவிஸ்வாசத்துடன் தேசத் தந்தையின் பெயரை சூட்டுபவர்களும், இருக்கிறார்கள். எவ்விதசிந்தனை யுமில்லாமல் ஊரெல்லாம் உலகமெல்லாம் காந்தி, என்று பாடிப்பரவி வாழ்த்தி வணங்குவதைப் பார்த்து காந்தி நாமத்தைச் சூட்டுபவர்களும் இருக்கிறார்கள். காந்தி பெயரைக் கண்டு மயங்க மாட்டார்களா என்று விளம்பர நோக்கத்துடன் பெயர் வைப்பவர்களுமுண்டு.

பொதுவாகச் சொன்னால் தேசமுற்றிலும் ஒரு வகையான காந்தி மோகம் பரவி வருகிறது. அதை ஒரு வகையான பாச உணர்ச்சி என்று கூறலாம். ஆனால் காரணார்த்தமாக—சரித்திரத்தொடர்பு கருதிப் பெயர் சூட்டுவதும் உண்டு ஆகவே எல்லா

---

* இத்தகைய பாசம் (?), பக்தி(?) மோகம் (?) —இன்றும் மாறிவா? —இல்லையே!

—பதிப்பாசிரியர்.

வற்றையும் வெறும் பாச உணர்ச்சி அதாவது ஸெண்டிமெண்ட் என்று சொல்லிவிடப்படாது இல்லையா?

நட: ஆம் அப்படியே ஒப்புக் கொள்ளுகிறேன். இன்னுமொன்று. ராமநகர், அளகாபுரி, அமராவதி, தேவகோட்டை, தேவாரம், திருச்சிற்றம்பலம் போன்ற பெயர்கள் எல்லாம் வெறும் பாசத்தால் ஏற்பட்டவைதாம். இல்லையா? ராமநகரில் ராமன் வந்து தங்கியிருக்கவில்லை. அளகாபுரியில் குபேரன் வசிக்கவில்லை. அமராவதியில் இந்திரன் கொலுவிருக்கவில்லை. தேவகோட்டையில் நான் தேவர்களையும் காணமுடியவில்லை. கோட்டையும் கிடையாது. தேவாரம் என்ற ஊரில் தேவரையும் காணமுடியவில்லை. தேவார ஈடுபாட்டையும் காணமுடியவில்லை. திருச்சிற்றம்பலத்திற்கும் அதன் பெயருக்கும் என்ன பொருத்தமோ எனக்குத் தெரியவில்லை. இவை எல்லாம் வெறும் பாசத்தால் ஏற்பட்ட விளைவுகள்தான் என்பதற்கு என்ன சந்தேகம்?

கணே: பலர் சூழ்ந்து குடியிருப்பது ஒரு ஊர். அப்படிப் பல ஊர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துணர ஆளுக்குப் பேர் வைப்பதைப்போல ஊருக்கும் பேர் அவசியம். சில ஊருக்கு ஏதாவது காரணம் கருதிப் பேர் அமைந்து விடுகிறது. பொட்டல் காட்டைத் திருத்திப் புதிதாக ஊர் நிர்மாணிக்கும் போது ஏதாவது பெயர் கொடுக்க வேண்டும். அது அவசியம். இன்றியமையாததும் கூட. அப்பொழுது காரணமின்றிக் கொடுக்கப்படும். பெயர்கள் யாராவது மகான், அறிஞன், செல்வன், வள்ளல், ஆகியோர் பெயருடன் கூடியதாகவோ ல்லது தெய்வப் பெயர்ச் சம்பந்தமுடைய

தாகவோ அமையும் அவையெல்லாம் பாசஉணர்ச்சி யின் பாற்பட்டதே ஆயினும் பக்தி, அன்பு காரண மாகவும், நம்பிக்கை காரணமாகவும் ஏற்பட்டிருக்க லாம். ஊர்ப்பெயரை உச்சரிக்கின்ற பொழுதே கடவுள் நாமத்தை உச்சரித்த பலனும் கிட்டும் என்ற நல்லெண்ணத்துடனும் ஊர்ப்பெயர்கள் இட்டிருக்கலாம். புளியம்பட்டி என்பதை விட திருச்சிற்றம்பலம் என்று பெயர்வைப்பதும், கல்லுப் பட்டி என்பதைவிட லட்சுமிபுரம் என்று பெயர் வைப்பதும் நன்றாகவே இருக்கிறது இல்லையா?

□ □ □

---

* வானொலி—திருச்சி—28.10.1949

11. படாடோபம்

இலக்கியம் என்பது மனிதனின் சிந்தனா சக்தியை அளவிட்டுக் காட்டும் ஒரு கருவி. எனவே, இலக்கிய வளர்ச்சிக்கு இடையூறு என்றால், மனிதனின் சிந்திக்கும் தன்மைக்கு ஒரு முட்டுக்கட்டை என்றுதான் அர்த்தம். இடையூற்றை, இடையூறுதான் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், நாம் இலக்கியத்தைப்பற்றி முதலில் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். அப்படியானால் இலக்கிய விமர்சனமே செய்ய வேண்டியதுதான். இலக்கியம் இலக்கியம் என்று நாமெல்லாம் சொல்லுகிறோமே அது, வாழ்க்கையின் விமர்சனந்தான், என்று மேலைநாட்டு விமர்சனப் பேரறிஞரான மாத்யூ அர்னால்டு கூறுகிறார். பேஷ்! விமர்சனத்திற்கும் ஒரு விமர்சனமா? என்று நாம் வியப்படைகிறோம். ஏன்?—அதிலுள்ள சிரமத்தை எண்ணி நாம் திகைக்கவும் செய்கிறோம். வியப்போ திகைப்போ, என்ன ஏற்பட்டாலும் சரிதான், தேவையைப் பூர்த்தி செய்துதான் ஆகவேண்டும். இல்லையா? சரி.

விமர்சனம் செய்யப்புகுமுன், விமர்சனம் என்றால் என்ன என்பதையும் ஒரு அளவு தெரிந்துகொள்ளுவோம். விமர்சனம் என்பது, ஒன்றின் தரத்தை அளவிட்டுக் காட்டுவதுதான். காசுக்கடைக்கு, நாம் ஒரு தங்க நகையை விற்பதற்குக் கொண்டுபோகிறோம். கடைக் காரன் என்ன செய்கிறான்? வாங்கிய நகையை உரைகல்லில் உரைத்துப்பார்த்து எத்தனை மாற்று என்று கண்டுபிடிக்கிறான். அதன்பின் நகையைத் தராசில் இட்டு; எடையையும் தெரிந்துகொள்ளுகிறான்.

கண்ட மாற்றையும் எடையையும் கருத்துள் கொண்டு, நகையின் தரத்தை அதாவது விலையை நிர்ணயிக் கிறான் காசுக் கடைக்காரன். அந்த நகையைச் செய்தவன் யார்? என்று அறிய முனைவதுமில்லை; அது அவனுக்குத் தேவையுமில்லை. நகை தங்கமாயிருந் தால்த்தான் கடைக்காரன் கல்லில் உரைப்பான். பித்தளை, செம்பு, ஈயம் போன்றவற்றைக் கண்டதுமே தூக்கி எறிந்துவிடுவான். முலாம் பூசிய நகைகளும் சில சமயம் கடைக்காரனிடம் வரக்கூடும். அப்பொழுது ஜாக்ரதையுள்ள கடைக்காரன் உரைத்துப்பார்ப்பதுடன் நின்றுவிடமாட்டான். திராவகச் சோதனையும் செய்வான். அப்புறம், குட்டு வெட்ட வெளிச்சமாகி விடாதா?

விமர்சகனும் ஒரு காசுக்கடைக்காரன்தான். அச்சான புத்தகங்கள் எல்லாம் இலக்கியம் ஆகிவிட மாட்டா. அவற்றுள், வெறும் பித்தளை, செம்பு, ஈயங்களும் எத்தனை எத்தனையோ, என்பதை எல்லாம் காசுக் கடைக்காரனைப் போல விமர்சகனும் நன்கறிவான். தங்கம் என்று நம்புவதைத் தனது அறிவான உரைகல்லில் உரைத்துப் பார்த்து மாற்று கண்டுபிடிப்பான். அனுபவம் என்ற தராசில் இட்டு எடை காண்பான். இரண்டையும் கணித்து நூலின் தரத்தை நிர்ணயிப்பான். நகை செய்தவனைப்பற்றி கடைக்காரன் எப்படி அக்கறை காட்டுவதில்லையோ அப்படியே நல்ல ஒரு விமர்சகனும் நூலாசிரியனைப்பற்றித் தெரிந்துகொள்ள அக்கறை காட்டமாட்டான். தங்கமுலாம் பூசிய பண்டத்தைத் திராவகத்திலிட்டு அதன், மேல்மினுமினுப்பைப் போக்கி உண்மையை அறியக் கடைக்காரன் முயல்வதைப் போல ஜாக்ரதையுள்ள விமர்சகனும் போலி நூல்களை,

நூலாராய்ச்சி என்ற திராவகத்திலிட்டு சோதனை செய்கிறான். சொந்தச் சரக்கல்லாதவை எல்லாம் கரைந்துவிட வெறும் சொற்களும், வாக்கியக் கோவை களுமே மிஞ்சி நிற்கின்றன. பின்னர் அது கேவலம் பித்தளைதான் என் ப து வெளிச்சமாகிவிடும். இல்லையா?

இந்த அனுபவத்துடன் இலக்கிய விமரிசனத்தில் புகுவோம். உடல் வளர, ஏன் இயங்குவதற்குக் கூடத் தான், உணவு இன்றியமையாதது. அதைப்போல உள்ளத்தின் வளர்ச்சிக்கு, இலக்கியம் என்னும் உணவு மிகவும் அவசியம். உடலை வளர்க்கும் உணவு, சத்துப் பொருளைமட்டும் கொண்டிருந்தால் போதுமா? ருசி மணம் முதலியனவும் அமைந்ததாக இருக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் மணமும் ருசியும்தான் மனிதனுக்கு உணவில் ஒரு தேட்டத்தை உண்டாக்கு கின்றன. உடலை வளர்க்கும் போஷாக்கு, ருசியிலோ அல்லது மணத்திலோ இல்லை என்பதையும், அது உணவில் உள்ள சத்துப் பொருளில்தான் இருக்கிறது என்பதையும், நாமெல்லாம் நன்குஅறிவோம். உணவில் உள்ள சத்துப்பொருள், உள்ளே போய், உடலை வளர்க்கும் போஷாக்காக மாறவேண்டுமானால், அது வாயில்காப்போர்களாகிய மூக்கிற்கும், நாக்கிற்கும் மணம், ருசி என்னும் கட்டணம் செலுத்தவேண்டிய அவசியமாகிறது. கட்டணம் செலுத்தாமல் உள்ளே போவது சிரமம். உள்ளே செல்லாதவை உடலை வளர்க்கவோ, இயக்கவோ முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இன்னொன்றையும் மறந்துவிடப் படாது. மணமும், ருசியும் இயற்கையாய் அமைந்திருக்க வேண்டும். செயற்கையில் அமைந்த வெறும் கலவை யாய்ப் போய்விடப்படாது.

இதே முறையில் இலக்கியத்தையும் நோக்கவேண்டும். இலக்கியம், மானிட வாழ்க்கையைச் சித்திரிப்பதுடன், வாழும் முறையை உணர்த்தக்கூடியதாகவும் இருக்கிறது. அதாவது, ஒன்று, எப்படியிருக்கிறது என்பதைக் காட்டுவதுடன் அமைந்துவிடாமல், எப்படியிருக்க வேண்டும் என்பதையும் விளக்குகிறது. உணவில் உள்ள சத்துப் பொருளைப் போன்றது, இலக்கியத்திலுள்ள விஷயம். விஷயம்தான் உள்ளத்தை வளர்க்கிறது. ஏன் ஆத்மாவையே அழியாமல் காக்கிறது என்றும் சொல்லலாம். ஆனால் வெறும் விஷயத்தை மனம் ஏற்றுக்கொள்கிறதா என்ன? ம்...ஹூம்...உணவிற்கு மணமும் ருசியும்போல, இலக்கியத்திற்கு வண்ணமும், அமைதியும் (Rythm & Form) பொருந்தியிருந்தால்தான் விஷயத்தை உள்ளே தள்ள முடிகிறது. மூக்கையும், நாக்கையும்போல மனத்திற்கும் இரண்டு வாயில்காப்போர் உண்டு. அவைதாம் காதும் மூளையும்.

வண்ணம் (Rythm), அமைதி (Form) என்றகட்டணங்கள் செலுத்தாவிட்டால் விஷயத்தை மனத்தினுள்ளே புகுத்தமுடியாது. ஆகவே, இலக்கியம் நல்ல விஷயங்களைத் தன்னுள் கொண்டிருப்பதுடன், அந்த விஷயங்களை ரசபாவத்துடன் வெளியிடவும் வேண்டும். அத்துடன் ரசபாவத்திற்கேற்ற ஓசை நயமும் அதில் வாய்ந்திருக்க வேண்டும். இத்தனை அருமைப்பாடுகளும் இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். மேலும், அவை சிக்கல் எதுவுமின்றித் தெளிவாகப் புரியவைக்கவும் வேண்டும். அதாவது, இலக்கியக்கர்த்தாவின் அனுபவத்தையும், எண்ணத்தையும் கற்பவர்களும் பெறுவது சாத்யமாகவும், எளிதாகவும் இருக்க வேண்டும். இந்தப்பண்புகள் எல்லாம் பெற்றிருந்தால் தான் அது நல்ல இலக்கியமாகும்.

இத்தகைய இலக்கியம் வளரவேண்டும் என்பதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. ஆனால் எதிர்பார்க்கும் அளவுக்கு வளர்ச்சி இல்லை. மக்களுக்கு இலக்கியத்திலே நாம் எதிர்பாக்கும் அளவு ஈடுபாடு கிடையாது. காரணம் என்ன? இலக்கியம் வளரவேண்டு மானால், இலக்கிய உணர்ச்சி நாட்டிலே மல்கியிருக்க வேண்டும். அதற்கு இடையூறாக இருப்பவை பல. அவற்றுள்ளே வெறும் படாடோபம் ஒன்று. ஏன் படாடோபமே மிகப் பெரிய முட்டுக்கட்டை என்றும் சொல்லலாம். இந்தப் படாடோபமே சிலருக்கு அலங்காரமென்றும் தோன்றலாம். ஆனால், அலங்காரம் என்று சொல்லப்படுகிற படாடோபம் தான் உண்மையைக் காணவொட்டாமல் தடைசெய்கிற திரையாக இருக் கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். உலோகத்தை உருக்கிக் கருவில் வார்க்கிறான் ஒரு சிற்பி. அது அழகிய, உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் ஒரு அற்புதச் சிலையாக ஆகிவிடுகிறது. காலிலும் இடையிலும், கைகளிலும் காணப்படுகிற நெளிவுகளும், குழைவுகளும், ஜடைமுடி சிதறுண்டு ஒசிந்து—பரந்து நிற்கின்ற காட்சியும், உத்தரீயமும் மார்பணிகளும் வீசிச் சுழல்கிற தோற்றமும், காண்பவர்களை அந்தச் சிலைக்கே அடிமையாக்கிவிடுகின்றன.

ரசானுபவமுடைய கலைஞர்கள், நடராஜன் என்ற பெயர் சூட்டி, கோவில் கட்டி, அதிலே விக்ரகத்தை வைத்து வணங்குகிறார்கள். வழிபாடெல்லாம் செய்கிறார்கள். எல்லாம் எதற்கு? அந்த வணக்கம் யாருக்கு? தெய்வத்திற்கா? இல்லை; நடராஜனை உருவகப்படுத்தி, வார்த்தும் கொடுத்து, அந்த ஆனந்த நடனத்திலே, தெய்வத்தையும், அதன் இயக்கத்தையும் காட்டிவிட்டானே, அந்த மகா சிற்பியின் அபாரமான,

அற்புதமான அறிவிற்கல்லவா உலகமே முடிசாய்த்து அடிவணங்கி நிற்கிறது! அத்தகைய அற்புதக் கற்பனை வடிவத்தைப், பொன்னாலும், மணியாலும், பூவாலும். துணியாலும் மூடி முகத்தைத் தவிர வேறு எதனையும் காணவொட்டாது தடைசெய்வதையும் அலங்காரம் என்றுதான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம்; வருகிறோம்; அது அலங்காரமா? அல்லது அலங்கோலமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது நம் மனம் எவ்வளவு வருந்துகிறது பார்த்தீர்களா? அதைப்போலவே எத்தனையோ நூலாசிரியர்களும் நடந்துகொள்ளுகிறார்கள். விஷயத்தை விளக்க, வேண்டாத பல படாடோபமான முறைகளைக் கையாளுகிறார்கள். அதன்மூலம் அவர்களின் புலமையை வெளிப்படுத்துகிறார்கள்; அல்லது நம்மை எல்லாம் அண்டவொட்டாமல் அடித்துவிரட்டுகிறார்கள்.

உதாரணத்திற்கு முதலில் ஒரு செய்யுளை எடுத்துக் கொள்ளுவோம். அது, பிற்காலத்தில், பாடும் பக்த மணியாக விளங்கிய, சமரச சன்மார்க்க ஞானியாகப் பிரகாசித்த, ராமலிங்க ஸ்வாமிகளுடைய பாடல்களில் ஒன்றுதான். இலக்கிய விமர்சனம் செய்யும்போது ஆக்கியோர் யார், அவருடைய சிறப்பு, செல்வாக்கு என்ன என்பதை எல்லாம் நாம் கருத்துள் வைக்கப்படாது. விருப்பு வெறுப்பற்ற சமநோக்குடன் நின்று செய்யுளைப்பார்க்கலாம்.

பகுதி, தகுதி, விகுதிஎனும், பாட்டின்
இகலின் இடையை இரட்டித்து—அகலில்
அருச்சித்தால் முன்னாம்; அதுகடையாம்; கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து.*

---

* திருவருட்பா—2724 ஆம் பாடல்—ஊரன் அடிகள் பதிப்பு—1972.

செய்யுளிலே உள்ள சொற்கள் எளியனவே. ஆனால், என்ன சொல்லப்படுகிறது என்பதுதான் புரிய வில்லை.

பகுதி, தகுதி, விகுதி என்ற மூன்று சொற்களின் நடு எழுத்தை இரட்டிக்கச் சொல்லுகிறார். நடு எழுத்து என்ன என்று பார்க்கலாம். பகுதி, தகுதி, விகுதி என்ற மூன்று சொற்களிலும் நடு எழுத்து கு அதை இரட்டிப்ப தென்றால் என்ன? மூன்று சொற்களிலும் உள்ள கு மூன்று. இல்லையா? அந்த எண்ணிக்கையாகிய மூன்றை இரட்டிக்க வேண்டும். மூன்றை இரண்டால் பெருக் கினால் 3×2=ஆறு. ஆறு 'கு' என்றால் என்ன? என்ற மயக்கம் ஏற்படுகிறதா! மயங்கவேண்டாம். ஆறு என்ற எண்ணுப் பெயர் குறுக்கல் விகாரம் பெற்று வரும் பொழுது அறு என்றுதானே வரும். அந்த அறு உடன் கு வைக் கூட்டுங்கள். அறுகு என்ற சொல் கிடைத்து விடுகிறதா? அறுகு கொண்டு திருச்சிற்சபையானை அருச்சித்தால் 'முன்னாம்' என்று சொல்லுகிறார். எது முன்னாம்? அந்த மூன்று வார்த்தைகளின் முன்னெழுத் துக்கள் கிடைக்கும். அவை என்ன? பகுதி, தகுதி, விகுதி என்னும் சொற்களின் முதல் எழுத்துக்கள் யாவை ப—த—வி. இம்மையில் பதவி கிடைக்கும் என்கிறார். அது பின்னர் கடையாம் கடைசி எழுத்துக்கள் ஆகுமாம். கடைசி எழுத்துக்கள் யாவை? பகுதி, தகுதி, விகுதி என்னும் சொற்களின் கடைசி எழுத்துக்கள் தி,தி,தி என்றால். ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணுங்கள். தியையும் கூட்டுங்கள். என்னாகிறது? மூன்று—தி—அதாவது முத்தி. பேஷ். எப்படியாகிறது பார்த்தீர்களா?

"சிற்சபேசனை நம்பிக்கையுடன் அறுகம் புல்லால் அருச்சிப்பவர்க்கு இம்மையில் பதவிகளும், மறுமையில் முத்தியும் சித்திக்கும்" என்பதுதான் விஷயம். இதைப்

புரிந்துகொள்ள முடியாமல் குறுக்கே இடையூறாக நிற்பது இந்தப் படாடோபம்தான், இல்லையா?

இனி வசனத்தில் ஒன்றைப் பார்போம்.

''அக்கீதாமிருதத்தை, வேதராசிகளை நான்காய் பகுத்துப் பைலாதிவாயிலாய் விரிப்பித்தும், அதனது சூக்கும தன்மையால் அதனையறிய வல்லமையில் லாத அதிகாரிகள் தர்மாதி சர்வ புருஷார்த்தங் களையுமடையவேண்டுமென்னும் கருணையினால், சர்வஞ்ஞ சிகாமணியாகிய வியாசபகவான் நூறா யிரம் கிரந்தவடிவ மகாபாரதமெனப் பெயரிய ஒரு சம்மிதையைச்செய்து உடுக்கணத்தூடே உவாமதி ஒளிர்வது ஒப்ப 700 சுலோக வடிவமாக வைத் தனர்.

இது ஸ்ரீ வீர சுப்பைய சுவாமிகள் எழுதிய பகவத்கீதை கூடார்த்த தீபிகை உரையின் முன்னுரையிலுள்ள ஒரு வாக்கியம். நாம் தனித்தமிழ் வாதிகள் அல்ல. அழுத்த மும், பொருள் ஆழமும், உள்ள புரியும் சொற்கள் எம் மொழியிலிருந்து வரினும் அவற்றைக் கையாள் வதில் மனக்கசப்படையமாட்டோம். அப்படிப்பட்ட நம்மையே இந்த வாக்கியம் திணற அடிக்கிறது. புரியும்பல தமிழ்ச் சொற்களை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டுபுரியாத சம்ஸ்கிருதச் சொற்களை வலிந்து பிடித்திழுத்து வந்து திணித்துள்ளார்.

அதைப்போலவே, வழக்கத்திலுள்ள சம்ஸ் கிருதச்சொற்களையும் வேண்டுமென்றே ஒதுக்கி, வழக்கொழிந்த தனித் தமிழ்ச் சொற்களை தேடிப் பிடித்துக்கொண்டுவந்து நிறுத்தியுள்ளார். அதற்கும் மேலாக இந்த வாக்கியம் சுமார் அறுபது வார்த்தை களைக் கொண்டு, கஜக் கணக்கில் நீண்டு நிற்கிறது.

இவற்றால் மக்களுக்கு அலுப்பும், திகைப்பும் மயக்கமுமே ஏற்படும். அவை மக்களுக்கு இலக்கியத்தில் வெறுப்பையே ஊட்டும்.

இலக்கியப் பூஞ்சோலையை நாடிவருவோரைப் பயமுறுத்தி விரட்டி அடிக்கும் வேதாளம் படாடோபம்தான். அந்த வேதாளத்தை நாம் துரத்தியடித்து விடுவோமானால் இலக்கியக் காவணம் எப்படியெல்லாமோ பூவும், காயும், பழமும் குலுங்க வளர்ந்து நம்மையெல்லாம் வாழ்விக்கமாட்டாதா என்ன?*

□ □ □

* வானொலி—திருச்சி—*8.11.1949*

12. மூலநாசம்

கவிச்சக்கரவர்த்தி கம்பனையும், அவன் தமிழர்க்குச் செய்த பேருபகாரத்தையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாம் தமிழரென்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள ஒரு பெரும் காரணமாக இருப்பது, கம்பன் என்ற கவிதைத் தச்சன் கட்டித் தந்த ஒப்பற்ற காவியக் கோவிலே. அதுதான் கம்பராமாயணம். அது ஒரு பாரகாவியம். அங்கே எத்தனை எத்தனையோ பண்புகளுடன் கூடிய நூற்றுக் கணக்கான வர்களை நாம் சந்திக்கமுடியும். அறவோரும்—மறவோரும், நல்லோரும்—தீயோரும், பெரியோரும்—சிறியோரும், வீராதி வீரர்களும்—வெறும் அப்பாவிகளும், அந்தக் காவியக் கோவிலில் வீற்றிருக்கக் காணலாம். அப்படியே, இனியோர் பலரையும், கொடியோர் பலரையும் அங்கே நாம் சந்திக்கலாம். தாடகை, கூனி, சூர்ப்பணகை, மகோதரன், ராவணன், ஹிரணியன், போன்ற பல கொடியவர்கள் அந்தக் காவியப் பூங்கோவிலிலே காணக் கிடைப்பவர்கள். இப்பொழுது நாம் அவர்களில் சூர்ப்பணகையை ஓர் அளவு தெரிந்து கொள்ளுவோம்.

சூர்ப்பணகை யார்? ஒரு பெண். இலங்கேசனான இராவணன் தங்கை. இவ்வளவுதான் நமக்குத் தெரியும். இல்லையா? கம்பனைக் கேட்போமா இவன் யாரென்று. சரி, அவன் சொல்லுவதைக் கேளுங்கள்:

நீல, மா மணி நிற நிருதர் வேந்தனை
மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்.[1]

'பெரிய கருநீல மணியைப் போன்ற நிறத்தோடு விளங்கும் அரக்கர் கோமகனாகிய இராவணனை வேரொடும் தொலைத்துக்கட்டக் கூடிய பேராற்றல் வாய்ந்தவள் இவள்' என்றல்லவா அறிமுகப்படுத்து கிறான். ஆம். அவன் சொன்னதன் உண்மையைப் பாத்திரத்தைத் தொடர்ந்து சென்று நாம் கண்டறி வோம்.

கம்ப ராமாயணம் காண்டங்களாக, அதாவது ஆறு பெரும் பகுதிகளாக உள்ளது. அதில் மூன்றாவதான ஆரணிய காண்டத்தில்தான் சூர்ப்பணகையைச் சந்திக் கும்படிச் செய்கிறான் கம்பன். ராமன், தர்மபத்தினி சீதையுடனும், தருமத் தம்பி லெக்ஷ்மணனுடனும் பஞ்ச வடியிலே தங்கியிருக்கிறான். அப்பொழுதுதான் வரு கிறாள் சூர்ப்பணகை. வந்தவள் அங்கே தனியனாய் ஒரு பேரழகன் அமர்ந்திருப்பதைக் காண்கிறாள். அப்படிக் கண்டவள் யார் எனக் கம்பன் கூறுவதைக் கேளுங்கள்:

கண்டனள் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்.[2]

கண்டவள் யார் தெரியுமா? அவள் தான் தன்னுடைய சுற்றத்தார்கட்கு முடிவு காலத்தைக் காட்டக் கூடியவள் என்று விளங்க வைக்கிறான் கவிஞன். ரெம்பச் சரி. கண்டவள் மற்றவர்க்குக் காட்ட வேண்டுமல்லவா. எப்படி அந்தத் திருப்பணியை இந்த அம்மையார் நிறைவேற்றி வைக்கிறாள் என்பதை கம்பன் எவ்வளவு அழகாக, நாடகாலங்காரத்தோடு சித்தரிக்கிறான் என்பதைப் பார்ப்போம்.

கண்டனள் ராமனை. கண்டதும் காதல் கொண்டு விட்டாள். எப்படியும் இந்தப் பேரழகனை எனது கணவனாக அடைந்தே தீருவேன். இவனை அடையாமல் இந்த ஜன்மம் இருந்தென்ன போயென்ன? என உள்ளம்

உருகுகின்றாள். உடல் வெதும்புகின்றாள். ஆ! இந்தப் பேரழகன், புருஷோத்தமன், என் தோற்றத்தைப் பார்த்தால் கோரப் பற்களுடன் கூடிய இந்த ராக்ஷஸி, சகல விதமான மாமிசங்களையும் புசிப்பவள். ஆகவே நமக்கும் இவளுக்கும் ஒத்து வராது என்று ஒரு கால் மறுக்கவும் கூடும்.

ஆதலால், குயில் போன்ற குரலும், சிவந்த வாயும் மயில் போன்ற சாயலும் பெற்று மீண்டும் இவ்விடத்திற்கு வருவதுதான் புத்திசாலித்தனம். அதுதான் காரியம் கைகூட ஏற்ற உபாயமாகும் என்று எண்ணுகிறாள். அப்படியே செய்வேன் என்று முடிவு கட்டிக்கொண்டு செல்லுகிறாள் ஒரு மறைவிடத்திற்கு. அங்கே போய் அமர்ந்து தனக்கு மிகவும் பழக்கமான மந்திரத்தைச் செபித்து, லெக்ஷ்மி தேவியை நோக்கிப் பிரார்த்தனை செய்கிறாள். பலன் கிட்டி விடுகிறது. மதி முகமும், அதற்கேற்ற பேரழகு தங்கிய உடலுறுப்புகளும் பெற்று தேவ மங்கை போலவருகிறாள். அவள் வருகிற ஒய்யாரத்தைப் பாருங்கள்:

பஞ்சிஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொல்இள மஞ்ஞை என, அன்னம் என மின்னும்
வஞ்சிஎன, நஞ்சம் என, வஞ்சமகள் வந்தாள்[3].

கானின் உயர் கற்பக உயிர்த்தகதிர்வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறிம் வாசத்
தேனின்மொழி உற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின் விழி பெற்றுமயில் வந்ததென.[4]

என்ன படாடோபம் பார்த்தீர்களா! 'தான் வெறி கொண்டு கண்ட, ஆடவனை அடைந்து ஆனந்திக்க இல்லாத சிறப்புகளை எல்லாம் மந்திரம் என்னும்

மேக்கப் (Make up) பூச்சுகளால் ஆக்கிக்கொண்டு வருகிறாள்.

பாதசரம், மேகலாபரணம், மணி வடங்கள் கூந்தலில் உள்ள மலர்களில் மொய்க்கும் வண்டுகள் இவைகள் ஒலிக்கும் மெல்லோசையைக் கேட்ட ராமன் 'என்ன? யாரோ ஒரு பெண் வருவது போலிருக்கிறதே' என்று அத்திசை திரும்பினான். கண்டான், அழகே உருவாய் அமைந்த ஒரு பெண்மகளை. ஆச்சரியம் தாங்க முடியவில்லை. என்ன அழகு! இவள் யார்? இவள் அழகிற்கு ஒப்பும் உண்டோ? என்று எண்ணினான்.

பேஷ். பறவை வலைக்குள் அகப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையுடன் ராமன் திருமுன்னர் வந்து அவனடிகளிலே கரம் சேர்த்து வணங்கி, தனது கண்கள் என்னும் அஸ்திரங்களைப் பிரயோகித்துவிட்டு நாணிக் கோணி ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றாள்.

ராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் தமிழர் பண்பாடு என்று ஒன்று இருக்கிறதல்லவா. அதற்கேற்ப ராமன் முகமன் கூறி வரவேற்கிறான். 'இவ்வளவு பேரழகியாகிய உம் வருகை தீமையற்றதாக அமையட்டும். வெகு தூரத்தில் உள்ளவர்களாகக் காணப் படுகிறீர்கள். உங்களை வரவேற்று உபசரிப்பது எங்கட்கு ஒரு பாக்கியமே. தங்கள் ஊர் எதுவோ? பேர் என்னவோ? எக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்?' எனக் கேட்டான் ராமன். சூர்ப்பணகை அளக்கத் தொடங்கிவிட்டாள் தன்னுடைய பெருமைகளை யெல்லாம்.

''நான் சாக்ஷாத் பிரம்மாவுக்குப் பேரன் மகளாக்கும். சிவபிரானுடைய தோழனான குபேரனுக்கும் எட்டுத்

திசையும் நடுங்க திசையானைகளை எல்லாம் தொலைத்து, வெள்ளியங்கிரியை வேரோடு கெல்லி, திரி லோகமும் ஏகசக்ராதிபத்தியம் நடாத்தும் இராவணேச் வரனுக்கும் தங்கைதான். என் பெயர் காமவல்லி. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை'' என்று அளந்து விட்டாள்.

கேட்டனன் ராமன். சந்தேகப்பட்டான் 'இவள் செயலைப் பார்த்தால் சரியாகப்படவில்லை. இருந்தாலும் உண்மையைக் கண்டறிய வேண்டும்' என்று கருதி ராமன், 'அம்மா! தாங்கள் கூறியபடி தாங்கள் ராவணன் தங்கையானால் உருவம் எப்படி இப்படியாயிற்று? காரணம் தெரிவிப்பீர்கள் என்று நம்புகிறேன்' என்று நாசுக்காக வாயைக் கிண்டினான். பதில் உடனே வெளிப்படுகிறது கேளுங்கள்:

''மகா சூழ்ச்சிக்காரர்களாக உள்ள இந்த அரக்கர்களுடன் வாழப் பிடிக்கவில்லை. ஆகவே தெய்வத்தை நோக்கிச் செய்த பெருந்தவப் பயனால் என் பாவமெல்லாம் போய் இந்த நல்லுடம்பு பெற்றேன் ஐயா!'' என்று எவ்வளவு அழகாகப் புளுகுகிறாள் பார்த்தீர்களா!

இப்படியே ராமன் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் மிக சாமர்த்தியமாகப் பதில் கூறுகிறாள். சீதையின் பேரழகு சூர்ப்பணகையைத் திகைக்க வைத்துவிட்டது. 'என்ன பேரழகு! பெண்ணாகப் பிறந்த என்னையே சீதையின் பேரழகு இவ்வளவு கலக்குக் கலக்கினால் மற்றவர்கள் பாடு என்னாகும்?' என்று ஒரே திகைப்புக் கடலுள் மூழ்கியிருந்தவள், ஒருவாறாய்த் தன் நினைவு பெற்று ராமனைப் பார்த்துப் பேசுவதைக் கேளுங்கள்:

'ஐயா! இவள் ஒரு மாயா ஜாலம் வல்ல பொல்லாத ராக்ஷஸியாவாள். இவள் தாங்கிய இந்த உரு வெறும்

வேஷம். இவள் மாமிச பக்ஷிணி. இவளைக் கண்டால் எனக்கு ஒரே பயமாக இருக்கிறது.

ராமன் பதில் என்ன என்பதையும் தொடர்ந்து கேளுங்கள்:

பேஷ், பேஷ். எண்ணம் நன்றாகப் புரிகிறது. அப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்லும் உன் உள் நோக்கம் நன்றாகத் தெரிகிறது அம்மா! இவள் யாரென்பதை நீ தெரிந்துகொள் என்று சொல்லிச் சிரிக்கும் ராமனின் நகையொலி கேட்கிறதா உங்கட்கு?

இப்படியே வளர்ந்த பேச்சு சூர்ப்பணகை யார் அவள் இங்கே வந்ததன் நோக்கம் என்ன என்பதையெல்லாம் ராமனுக்கு மிக நன்றாய்ப் புலப்படுத்தி விட்டது. சரி. விளையாட்டு வினையாகப் போய்விடுமே எனஅஞ்சிய ராமன் சீதையை அழைத்துக் கொண்டு பன்னக சாலைக்குள் போய்விடுகிறான்.

சரி. இன்று நம் ஜம்பம் சாயாது இவனிடம் என்று திரும்பிவிடுகிறாள். தன் இருப்பிடம் சேர்ந்து ராமனை எப்படி அடைவது என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டே விரகதாபத்தால் வேகின்றாள். கண்டு விட்டாள் ஒரு வழி. சீதை போன்ற ஒரு அழகி ராமன் கூட இருக்கும்வரை ராமன் நம்மைத் திரும்பியும் பார்க்க மாட்டான். ஆகவே அவளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறாள்.

பொழுதும் விடிந்துவிடுகிறது. மறுநாள் வேகமாக வருகிறாள் ராமன் இருப்பிடத்தை நோக்கி. ஆத்திரக் காரிக்குப் புத்தி மட்டுத்தானே. ராமன் ஆற்றங்கரையிலே காலை வழிபாடு செய்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு இதுதான் தக்க சமயம் சீதை

யைப் பற்றி எடுத்துச் செல்வதற்கு என்று பன்னக சாலையை நோக்கித் திடுதிடு என்று ஓடுகிறாள். பக்கத்திலே மரச்சூழல் மத்தியிலே வீரத்தம்பி லெக்ஷ்மணன் இருப்பதைக் கவனிக்கவே இல்லை. கேட்பானேன். லெக்ஷ்மணன் கோபக் கனல் கக்க "நில்லடீஇ—நில்லுடீஇ" என இரைச்சல் போட்டுக் கொண்டே மிக வேகமாகச் சென்று சூர்ப்பணகை கூந்தலைப்பற்றி இழுத்துவந்து மூக்கு முதலியவற்றை அறுத்தெறிந்து விரட்டி விடுகிறான். சூர்ப்பணகை மூக்கறுபட்டதால் மூளியாகக் கதறிக்கொண்டே ஓடு கிறாள். கானகத்தே இருந்த கரன் இவள் கஷ்டம் அனைத் தையும் அறிகிறான். பெரும் படை திரட்டிக் கொண்டு வந்து ராமனுடன் பொருகிறான். பெரும்போர் நடக் கிறது. முடிவில் கரனும் அவனுடன் வந்த தூடணன் முதலிய அனைவரும் பிணமாகிவிடுகின்றனர்.

இதனோடு விட்டாளா சூர்ப்பணகை? ஹுஉம்—ஹுஉம், எப்படி விடுவாள்? நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் திருப்பணிக்கென்றே உருப்பெற்று வந்த வளல்லவா. நேரே செல்கிறாள் இலங்கைக்கு. அண்ணனை ஆம். இராவணனைத்தான் காணுகிறாள். மிகச் சாமர்த் தியமாகக் கயிறு திரிக்கிறாள். நீங்களே கேளுங்கள் அதை:

"அண்ணா காட்டிலே யாரோ இரண்டு மனிசன் கள் வந்திருக்கிறார்கள். அவர்களோடு ஒருத்தி கூட இருக்கிறாள். அவளைப்பற்றி நான் என்னத்தைச் சொல்ல? தாமரை மலரை விட்டு அந்தச் சீதேவி தான் பூமிக்கு வந்திருக்கிறாள் என்று சொல்ல லாமா? சேச்சே. அவள் இவளுக்குச் சேடியாக இருக்கவும் தகுதியில்லாதவள்.

மஞ்சொக்கும் அளக ஒதி; மழை ஒக்கும் வடித்த கூந்தல்;
பஞ்சொக்கும் அடிகள்; செய்ய பவளத்தின் விரல்கள்; ஐயா,
அம்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள். வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும், கடலினும் பெரிய கண்கள்.[5]

''மன்மதன் ஈசனது நெற்றிக் கண்ணால் அழிந்து விட்டான் என்கிறார்களே. அது முட்டாள்தனமான பேச்சு. இவளைப் பார்த்தான். காதல் நோய் கரை கடந்துவிட்டது. ஆற்றமுடியவில்லை.பேச்சு, மூச்சில்லை. அந்த ஆசையே அவனை அரித்துத் தின்று விட்டது. எந்த உலகத்திற்குத்தான் போய்ப் பார். எந்த ஓவியனும் இவள் உடலுறுப்பை எழுதிவிடுகின்றானா என்று பார்க்கலாம். ஐயோ! இவள் அழகிலே மயங்கிய நான், அழகிய அவள்,

தோளையே சொல்லுகேனோ? சுடர்முகத்துலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ? அல்லவை வழுத்துகேனோ?
மீளவும் திகைப்பதல்லால் தனித்தனி விளம்பலாற்றேன்,
நாளையே காண்டியன்றே! நானுனக்கு உரைப்ப தென்னோ?[6]

அவளை உனக்காக நான் தூக்கும்போதுதான் அந்தப் பயல் ராமன் தம்பி என்னை இக்கதிக்கு ஆளாக்கி விட்டான்'' என்றுரைப்பது உங்கள் காதிலே விழுகிறதல்லவா?

இப்படியாக இராவணனுக்கு காமத்தீயை ரொம்ப நன்றாக மூட்டிவிட்டாள். பிறகு கேட்பானேன். இராவணனைக் காமத்தீ மிகநன்றாகப் பற்றிக் கொண்டுவிட்டது. அதன் பலன்தான் நமக்கெல்லாம் நன்றாகத் தெரியுமே. மாய மானாக மாரீசன் உருவெடுக்க, அதைத் துரத்திக்கொண்டு ராமன் போக,

மாரீசனின் மாயக் குரல் கேட்டு சீதையைக் காத்து நின்ற லெக்ஷ்மணனும் பிரிந்துவிட, அந்த சந்தர்ப்பத்தில் இராவணன் கள்ளத்தனமாக அன்னை ஜானகியை அபகரித்துச் சென்று விடுகிறான்.

கதை நமக்குத் தெரிந்ததுதான். ராம—ராவண யுத்தம் பயங்கரமாக நடக்கிறது. அரக்கர் சேனை—ஏன்-அரக்கர் குலமே—அற்றுப் போய் விடுகிறது. இறுதியிலே உயிர் எஞ்சிய மக்களும் கூட நெருப்பிலே விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டுவிடுகிறார்கள். ராவணன் உடலைக் கட்டிக் கொண்டு பிரலாபிக்கும் மண்டோதரி யின் புலம்பலிலே அரக்கர் குலமழியக் காரணம் எவை என்பதைக் கூறுகிறாள். அதைக் கேளுங்கள்:

காந்தையருக்கு அணி அனைய ஜானகியார் பேரழகும்
அவர்தம் கற்பும்,
ஏந்துபுயத்து இராவணனார் காதலும் அச் சூர்ப்பணகை
இழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனார் பணியதனால் வெங்கானில்
விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே புரந்தரனார்ப் பெருந்தவமாய்ப்
போயிற்று அம்மா.[7]

கேட்டீர்களா மண்டோதரியின் பிரலாபத்தை. அந்த மகாபாபி சூர்ப்பணகை காட்டிலே ராமனைக் கண்டு காமவெறி கொள்ளாவிட்டால், அதன் காரணமாக மூக்கறுபடாவிட்டால், இந்தப் படுநாசம் ஏற்பட்டிருக்க மாட்டாதல்லவா. மகா கொடியவர்களின் தன்மை இதுதான். தான் மூக்கறுபட்டால் அதனோடு அமைந்து விட மாட்டார்கள். மற்றவர்களுக்கும் தூபம் போட்டு விட்டு கேடு விளைவிப்பார்கள், இல்லையா? இப்பாவி பொறாமையாலும், பேராசையாலும் பற்ற

வைத்த ஒரு சிறு பொறியல்லவா அரக்கர் குலத்தை அடியோடு சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டது. இல்லையா? இப்படிப்பட்ட கொடியோர் பலரையும் கம்பன் நமக்கு மிக நன்றாகக்காட்டுகிறான், தனது காவிய உலகத்திலே. அவர்களை யெல்லாம் நாம் ஆர அமர இருந்து கற்று இனம் கண்டறிய வேண்டும். சரிதானே?*

□ □ □

அடிக்குறிப்புகள்

1. கம்பராமாயணம்-2739
2. " -2742
3. " -2762
4. " -2764
5. " -3136
6. " -3139
7. " -9942

இவ்வெண்கள் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பின்படி அமைந்தவை.

—பதிப்பாசிரியர்

□

* வானொலிப் பேச்சு—திருச்சி—17-1-1950

13. மெய்ப்பொருள்

(சித்தர்கள் கண்ட வழி)

மெய்ப்பொருள் கண்டு விளங்குமெய்ஞ் ஞானியர்க்கு
கற்பங்கள் ஏதுக்கடி?—குதம்பாய், கற்பங்கள் ஏதுக்கடி[1]

இது தாம் பெற்ற மெய்யான இன்பம் விளங்கும்படி, வெற்றிப் பெருமிதத்துடன் வெளிவரும், குதம்பைச் சித்தரின் பாடலாகும்.

மெய்யிலே பொருளைக் கண்டு, அதாவது, உடம்பிலே பரம்பொருளைப் பிரத்யக்ஷமாகக் கண்டு தெளிந்த, மெய்யறிவு கிட்டியவர்களுக்கு, ஆயுளை நீடிக்கச் செய்வதான, காயகற்ப மருந்துகள் எல்லாம் வேண்டுமா என்ன?

என்று வினா முகத்தாலே விடை யளித்துவிடுகிறார். யாரோ, ஊர் பேர் தெரியாத குதம்பைப் பெண்ணைப் பார்த்தா சொல்லுகிறார்? இல்லை. பூரண ஆயுளோடு வாழ வேண்டும் என்று விரும்புகிற நம்மைப் போன்ற மக்களைப் பார்த்தேதான் அறிவுறுத்துகிறார் அந்தக் குதம்பைச் சித்தர்.

பேர் ஆயிரம் எனினும் பெம்மான் ஒருவனே! உரு ஆயிரம் எனினும் உள் நின்றொளிர்பவன் ஒருவனே. இல்லையா? அங்ஙனமே, பொருள் பல பேசப்படினும் எப் பொருட்கும் உட்பொருளாய், அனைத்தையும் தன்னுள் அடக்கியதாய் விளங்கும், மெய்ப் பொருள் ஒன்றே! ஆயினும், அந்த மெய்ப் பொருளை அறிவதற்

கும், அடைவதற்கும் மெய்ஞ்ஞானிகளால் வகுக்கப்படும் முறைகள் வேறுபடுகின்றன; என்றாலும் லட்சியத்தில் மாறுபடுவதில்லை.

அதனை விளங்கிக்கொள்ளும் பொருட்டு பக்தர் ஒருவரைப் பார்த்துவிட்டுப் பிறகு, சித்தர் குடியிருப்பை நோக்கிப் போலாம்.

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.[2]

என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

"நான்கு மறைகளுக்குள்ளும் மெய்ப்பொருளாக விளங்கி நிற்பது, நாத ஸ்வரூபியான, அனைத்திற்கும் முழுமுதலான பரம்பொருள். அவனை அடையச் செய்யும் நாம மந்திரம், நமச்சிவாய என்னும் திரு ஐந்தெழுத்தே" என்று லட்சியப் பொருளையும், அதை அடையச்செய்யும் மந்திரத்தையும் அருளுகிற ஆளுடைப் பிள்ளையார்,

காதல் ஆகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது[3]

என்று விளக்கம் தருகிறார். அதாவது, "நீங்காப் பெரு நினைப்புடன், உள்ளம் உருகிப், பரவச பக்தி உடைய ராய், கண்ணீர் பெருக்கெடுத்தோட, ஈடுபாட்டுடன் ஜபிப்பவர்களை நமச்சிவாய என்னும் அந்த மந்திரமே நல்ல கதிக்கு இட்டுச்சென்று சேர்க்கும்" என்று புலப் படுத்துகிறார்.

இந்த அனுபவத்துடன் சித்தர்களைப் பார்த்து அவர்கள் கண்ட உண்மையை—காட்டும் மெய்ப் பொருளை—தெரிந்துகொள்வோம். சித்தர் குடி

யிருப்பில் அகப்பேய் சித்தர் ஒருவர். அவர், பேயாய் அலையும் மனத்தைப் பார்த்து, அகப் பேய் என்று விளித்தலால் அவருக்கு அகப் பேய் சித்தர் என்ற பெயர் வழங்கிவருகிறது, என்று தெரிந்து கொள்கிறோம்.

உன்னை அறிந்தக்கால்—அகப் பேய்,
ஒன்றையும் சேராயே
உன்னை அறியும்வகை—அகப்பேய்
உள்ளது சொல்வேனே[4]

"ஏ அகப் பேயே! நீ யார்? என்ற உண்மையைத் தெரிந்து கொண்டுவிட்டால், நீ வேறு எதையும் சேரமாட்டாய். உன்னை நீ அறிவதற்குரிய முறை இருக்கிறது! அதைச் சொல்லக் கேள்!" என்ற பீடிகையுடன் மேலே பேசும் அகப் பேய் சித்தரைக் கேட்போம்:

சரியை ஆகாதே—அகப் பேய்
சாலோகம் கண்டாயோ
கிரியை செய்தாலும்—அகப் பேய்
கிட்டுவது ஒன்றுமில்லை[5]

யோகம் ஆகாதே—அகப் போய்
உள் அது கண்டக்கால்
தேகம் ஞானமடி—அகப் பேய்
தேடாது சொன்னேனே[6]

"சரியை, அதாவது, கோவிலில் விளங்கும் இறைவன் திருவுருவத்தை வழிபடுவதால் அகப் பேயே, காரியசித்தி ஆகாது. அதனாலே நீ சாலோகத்தை, அதாவது, கடவுள் உலகைக் கண்டாயா? இல்லையே; போகட்டும்; கிரியை, அதாவது, மனசாலும் உடலாலும் அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் செய்து சிவ பூஜை செய்தாயே அதனாலாவது ஏதாவது கிட்டியதா? ஒன்றுமில்லையே? அதுவும் கிடக்கட்டும்!

யோகத்தால், அதாவது, அதி சூட்சும வடிவினை உடைய கடவுளை அகத்தால் வழிபடுவதால் அகப் பேயே! உனக்கு என்ன பலனாவது கிடைத்ததா? ஒன்றுமில்லையல்லவா? ஆகவே, உனக்குள்ளேயே நீங்காது உறையும் அந்தப் பொருளை நீ பிரத்தியட்சமாகக் கண்டுவிட்டால், அடி அகப் பேயே! இந்த உடம்புதான் ஞானம் என்பதை நீ அறிவாய். அப்புறம் தன்னுள்ளே தலைவன் இருப்பதைக் கண்டுகொண்ட நீ, புறத்தே சென்று, பொருளைத் தேடி, அலைந்து திரிந்து, அலுத்துப் போகமாட்டாய், என்பதை அழுத்தமாகச் சொல்கிறேன்!" என்று உரைக்கும் அகப் பேய் சித்தர்,

ஆர்அலைந் தாலும்—அகப் பேய்
நீஅலையா தேயடி,
ஊர்அலைந் தாலும்—அகப் பேய்
ஒன்றையும் நாடாதே![7]

என்று அகப்பேய்க்கு மேலும் கட்டளையிடுகிறார்.

"பேயாய் அலையும் என் அகமே, யார் யார் எங்கெங்கு தேடி அலைந்து திரிந்தாலும், நீ, இனி அலையாதே! ஊர் ஊர்தோறும் சென்று அலையவேண்டி வந்தாலும், நீ, வேறு ஒன்றையும் கருதாதே" என்று எவ்வளவு நிச்சய புத்தியுடன் கூறுகிறார் பார்த்தீர்களா? முடிவாக நாதனை, மெய்ப்பொருளைக் காண வழியும் காட்டுகிறார். அதையும் பார்ப்போம்.

நாலுமறை காணா—அகப் பேய்
நாதனை யார் காண்பார்?
நாலுமறை முடிவில்—அகப் பேய்
நற்குரு பாதமடி[8]

"பேயாய் அலையும் மனமே, அந்தப் பொருளை வைத்துப் பாதுகாக்கும் நாலு மறைகளைக் காணாதவர்கள், அதனுள் இருக்கும் நாதனை எப்படிக் காணப் போகிறார்கள்? நான்கு மறை முடிவில் என்ன இருக்கிறது தெரியுமா? அதைக் காண, நல்லதொரு குருவின் திருவடிதான் உனக்குத் துணை" என்று சொல்லும் அகப்பேய் சித்தர் மெய்ப்பொருளைச் சொல்லலாகாது என்றும், சொல்லமுடியாது என்றும் சொல்லுகிறார். குரு அருளையே துணையாகக் கொண்டு, அவன் காட்டக் காணவேண்டுமே யன்றி, சொல்லுவது சாத்தியமில்லை என்ற நிலைமையை நமக்கெல்லாம் உணர்த்த விரும்பும் அவர்,

சொல்லல் ஆகாதே—அகப் பேய்
சொன்னாலும் தோஷ மடி
இல்லை இல்லையடி—அகப் பேய்
ஏகாந்தம் கண்டாயே[9]

என்று மிக்க அருமையாக விளக்கிவிடுகிறார். இந்த இடத்திலே.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையன் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஒரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே[10]

என்ற அப்பர் அருள் வாக்கு எப்படி, சித்தர் உரைக்கு அரண் செய்கிறது என்று பார்த்தீர்களா?

"அந்த அருமையை, மெய்ப்பொருளின் உண்மையை சொல்லால் அடுக்கிச் சொல்லிவிட முடியுமா? ஏதோ ஒருவாறு, துணிந்து சொல்ல முயன்றாலும், அதனால் பிழைதான் ஏற்படும்! ஆனால், காட்டுவான் காட்ட, அந்த மெய்ப்பொருள் தரிசனம் கிட்டிவிட்டால், இல்லையென்னும் வாதமும், அது இல்லையென்னும் பிரதிவாதமும் ஆகிய சர்ச்சைகளெல்லாம் ஒடுங்கிவிடும். பின்னர், சலனமற்ற, முழு நிலையான, பேச்சிறந்த பூரணமாம் - ஏகாந்தந்தான்! தெரிந்து கொண்டாயா?" என்று எவ்வளவு அருமையாக விஷயத் தேட்டத்தை உண்டாக்கி விடுகிறார் என்பது புலப்படுகிறதல்லவா?

இனி, மெய்ப்பொருள் ஞானியாகிய சிவவாக்கியரைக் கேட்போம். இவரைப் பார்த்தால், திருமூலர்தான் வந்து பேசுகிறாரோ என்று தோன்றும். அப்படியிருக்கிறது இருவர் பாடல்களும்.

விண்ணில்உள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்
கண்ணில் ஆணி ஆகவே கலந்துநின்ற எம்பிரான்
மண்ணில்ஆம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணல்ஆகும் எம்முளே அமர்ந்துவாழ்வ துண்மையே[11]

"ஆணவச் செருக்குடைய தேவர்களும் அறிய முடியாமல் தவிக்கும் அந்த மெய்ப்பொருள் கண்ணுக்கு ஆதாரமான மணிபோல, என்னுளே கலந்துநின்ற எம்பிரான்தான்; இனி, இந்த மண்ணுலகத்தில் வந்து பிறவா வழிகாட்ட, என் அகத்தில் திருவடி மலரினைப் பதித்து வைத்த அவன், சாரூபம் என் அகத்தே அகலாமல் என்றும் இருக்கிறான். அது உண்மை." என்று அனுபவசித்தியுடன் இவ்வளவு அழுத்தமாகப் பேசுகிற அவர், அந்த மெய்ப்பொருளை நாமும் கண்டு அந்தப்

பேரானந்தப் பெருங்குடியிருப்பில், வந்து சேர்ந்து வாழ வழியும் காட்டுகிறார்.

ஆடுகின்ற எம்பிரானை, அங்குமிங்கு என்றுநீர்
தேடுகின்ற பாவிகாள்! தெளிந்ததொன்றை ஓர்கிலீர்!
காடுநாடு வீடுவிண் கலந்துநின்ற கள்வனை,
நாடிஓடி உம்முளே நயந்துணர்ந்து பாருமே[12]

''அனைத்தையும் இயக்குதற் பொருட்டு, என்றும் அயராது இயங்கிக்கொண்டேயிருக்கும் எம்பெருமானை, அங்கும் இங்கும் அலைந்து தேடிக் கொண்டேயிருக்கும் பாவிகளே! மெய்ஞ்ஞானிகள் பலர் தெளிவாய் உணர்ந்த அந்த ஒரு பொருளை உணர்கிறீர்கள் இல்லை. காட்டிலும் சரி, நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி, விண்ணிலும் சரி—எங்கும் சர்வ வியாபியாக கலந்து நிற்கிறான் அவன். ஆயினும், உங்களால் காண முடியாதவாறு மறைந்து இருக்கிறான். அந்தக் கள்வனைப் பிடிக்கவேண்டுமானால், முதலிலே அந்தப் பேர்வழியை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

அதற்கு வழி சொல்லுகிறேன் கேளுங்கள்! மனப் பூர்வமாக வேட்கையுற்று நாடி, பிற எதையும் மேற்கொள்ளாமல் விட்டு விலகி யோடி, உறுதியாக நின்று உணர்வேன் என்ற நம்பிக்கையோடு நயந்து நின்றால், உங்களுக்குள்ளேயே மெய்ப்பொருளின் தெரிசனத்தைப் பெறுவீர்கள். அப்பொழுது ஆளையும் இனம் கண்டுகொண்டு விடுவீர்கள். அப்புறம், அந்த மெய்ப்பொருள், பார்க்கும் இடம் எங்கணும், நீக்கமற நிற்பதை நீங்களும் உணர்வீர்கள்'' என்று தெரிவிக்கிறார்.

இனி பட்டினத்தடிகளைப் பார்த்து, அவர் சொல்லுவதைக் கேட்போம். ''திருநீற்றை மாறாது பூசிக்கொண்

டிருப்பதனாலோ, காவிரி கங்கை முதலிய புனித ஆறுகளில் முழுகுவதனலோ ஜன்மம் கடைத்தேறிவிடுமா? ஏழை நெஞ்சமே! இப்பிறப்பிலேயே மறுபிறப்பெடுக்கும் முறை உனக்குத் தெரியவில்லையே! பெருமை மிக்க வேதங்களில் காணப்படும், கோடிக்கணக்கான மந்திரங்களை உருப்போட்டதால் நீ என்ன பலனைக் கண்டாய்? அட பாவி மனமே! நீ ஆற்றுக்குள்ளேயே கிடந்தும், கரையேறும் துறையறியாமல், கலங்கி அலைகிறாயே!" என்ற பேரிரக்கத்துடனும், ஒப்பற்ற பரிவுடனும் வெளிப்படுத்தும் பாடலைக் கேட்போம்:

"நீற்றைப் புனைந்தென்ன; நீராடப் போயென்ன; நீமனமே,
மாற்றிப்பிறக்க வகையறிந் தாய்இல்லை; மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்னகண்டாய்?
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையே[13]

மெய்ப்பொருள் அறிதுறை அறியாமல், அவதிப்படும் மக்களைப் பார்த்து வருந்துகின்ற அவர், தமது நிலை பற்றியும், தாம் பெற்ற பெரும் பயன்பற்றியும், பேசுவதையும் கேட்போம். "உலகக் கவலைகள் அற்றுவிட்டன; பாப புண்ணியம் என்னும் இரு வினையை எண்ணவும் மாட்டேன்! வெட்டிப் பேர்வழிகளின் கூட்டு இனி நமக்கில்லை! அவர் பேச்சு நம் காதிலும் படாது! அழியாத பதத்தைத் தொட்டுவிட்டேன்; இனி நமக்கு இன்பமும் துன்பமும் இல்லை; பழைய, நான்கு மறைகளாலும் கிட்ட முடியாத, அந்தப் பரம்பொருள், என் மெய்யகத்தே வந்து சேர்ந்து விளங்குகிறது" என்று பேசும் பாடலைக் கேட்போம்:

விட்டேன் உலகம், விரும்பேன் இருவினை, வீணருடன்
கிட்டேன், அவருரை கேட்டுமிரேன்; மெய் கெடாதநிலை
தொட்டேன், சுகதுக்கம் அற்றுவிட்டேன், தொல்லைநான் மறைக்கும்
எட்டேன் எனும்பரம், என்னிடத்தே வந்திங்கு எய்தியதே![14]

இந்த நிலை இவருக்கு எப்படிக் கிட்டியது? அதன் தன்மை என்ன? அவர் கண்ட காட்சியை எப்படி எல்லாம் பக்குவிகட்கு எடுத்துக்காட்டுகிறார்? அதையும் பார்ப்போம்;

வெட்டாத சக்கரம்; பேசாத மந்திரம்; வேறொருவர்க்கு
எட்டாத புஷ்பம்; இறையாத தீர்த்தம்; இனிமுடிந்து
கட்டாத லிங்கம்; கருதாத நெஞ்சம்; கருத்தினுள்ளே
முட்டாத பூசையன் றோகுரு நாதன் மொழிந்ததுவே"[15]

"சக்கரமோ உளியால் வெட்டுப்படாதது; மந்திரமோ யாராலும் உச்சரிக்கப்படாதது; மலரோ மற்றெவராலும் பறிக்க முடியாதது; நீரோ இறைக்கப்படாதது; லிங்கமோ பூஜை முடிந்ததென்று பட்டுத் துணியால் கட்டப்பட முடியாதது; மனமோ சிந்திக்க முடியாதது; இப்படியாக ஆசனம், மந்திரம், மலர், நீர், சிவலிங்கம், மனம் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்படுகிற, முடிவில்லாத, சதாகால பூஜையன்றோ என் குருநாதன் எனக்குத் தந்த சிவ பூஜை!" என்று இவ்வளவு அற்புதமாகப் பேசும் பட்டினத்தடிகளை எப்படிப் பாராட்டப் போகிறோம்?

உன்னை மறந்தல்லோ உளுத்த மரமானேன்?
தன்னை மறந்தார்க்குத் தாய்தந்தை இல்லையடி
தன்னை மறக்காமல் தாயாரும் உண்டானால்

உன்னை மறக்காமல்—என் கண்ணம்மா
ஒத்திருந்து வாழேனோ?[16]

என்று அழுகணிச் சித்தருடன் நாமும், பாடி, அரிதின் முயன்று, மெய்ப்பொருள் இன்பம் மேவிட அவாவுவோம்.*

□ □ □

அடிக்குறிப்புகள்

1. குதம்பைச் சித்தர் பாடல்- 2
2. திருமுறை—3. 49.1
3. " — "
4. அகப்பேய் சித்தர் பாடல் 24
5. " 25
6. " 26
7. " 57
8. " 64
9. " 73
10. திருமுறை—6.96.9
11. சிவ வாக்கியர் பாடல் 113
12. " 265
13. பட்டினத்தார் பாடல்கள் 124
14. " 109
15. " 134
16. அழுகணிச் சித்தர் பாடல் 28

□

* வானொலிப் பேச்சு—திருச்சி—18-10-1951

14. அவ்வையார் தந்த அறநெறிகள்

I

செந்தமிழ் நாட்டில் நல்லறம் தந்த செல்வர்கள் பலப்பலர். அவர்களுள் அவ்வைப் பிராட்டியார் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவ்வையார் எனப்பெயர் கொண்ட புலவர் பெருமாட்டியார் மூவர் இருந்திருக் கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த, சங்க காலச் சான்றோர்களில் ஒருவரான புலமைச்செல்வி அவ்வையார் ஒருவர்.

ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னிருந்தவரும் அவ்வை குறள், விநாயகரகவல் ஆகிய நூல்களை இயற்றிய வருமான ஞானச்செல்வி மற்றொருவர்.

இவர்கள் இருவருக்கும் இடைப்பட்ட காலத்தில், கி.பி. 9ஆம் நூற்றாண்டில், அதாவது சுமார் ஆயிரத்து நூறு ஆண்டு கட்கு முன்னர் வாழ்ந்தவரே அரும் பேர் அறம் உரைத்த அவ்வையார். இவரே கல்வித் துறையில் சிறந்த பணியாற்றியவர். 'ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் என்னும் மூதுரை, நல்வழி ஆகிய அடிப்படை அறநூல்களை அருளியவராவர்.

இன்று, இப்பொழுது, ஆத்திசூடியில் மணக்கும் அறத்தை நுகரலாம். நூலின் தொடக்கமே "அறம் செய விரும்பு[1] என்பதாகும். தருமத்தை ஆற்ற நீ ஆசை கொள்! என்கிறது. அறம் என்றால் என்ன? அது வெறும்

கடமையன்று; ஆனால், தவிர்க்கப்பட முடியாத தனிப்பெரும் கடமையே அறம் ஆகும். அதை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்ள வேண்டும். அறம் செய்வதற்கு அடிப்படையே அறம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடிப்பு எழல் வேண்டும். அல்லவா? அறவுணர்வு உள்ளத்தே அரும்புதல்தானே முக்கியம்? அதை எவ்வளவு அழகாகப் புரிய வைத்துவிடுகிறார்.

அறம் செய விரும்பு

என்று.

ஏற்பது இகழ்ச்சி[3]- அதாவது பிறர் இடத்து தன் எவ்வம் உரைத்து தரக் கொள்ளுவது பழிப்புக்கு இடமாகும் என்கிறார். உடனே அடித்து ஐயம் இட்டு உண்[3] அதாவது இல்லார், எளியார்க்கு ஈந்து, அதன் பிறகே நீ உண்டு வாழ் என்பார். ஒன்றுக்கு ஒன்று முரண்போலத் தோன்றினும் முரணல்ல! உடல் வளமும், பிற வசதிகளு முள்ளவர்களை நோக்கிக் கூறியதாகக் கொள்ளவேண்டும். இவை ஏழை எளியோரை நோக்கிக் கூறியவையாகக் கொள்ளப்படலாகா.

ஓதுவது ஒழியேல்[4]-அறநூல்களையும் புனித நூல்களை யும் பக்தி-சிரத்தையுடன் பயில்வதை ஒரு நாளும் கைவிடாதே என்று கூறும் பாட்டியார், அதற்கு அடிப்படையாக இளமையிற் கல்[5], நூல் பல கல்[6] என்றெல்லாம் அறம் உரைப்பதுடன் கேள்வி முயல்[6] என்று கூறியிருப்பதை நன்கு சிந்திக்க வேண்டும். கேள்வி என்றால் அறவோர் பெரியோர்களை அடுத்து அவர் களிடம் உரிய நூல்களைப் பாடம் கேட்டல் என்பது பொருளாகும். தானே சிரமப்பட்டுக் கற்பதைவிட, வழிவழியே பாடம் கேட்டும், சிரதித்தும், ஆய்ந்தும், தெளிந்தும், தேறிய பெரியோர்களிடம் பாடம்

கேட்டல் பெரும் பயன் நல்குவதாகுமல்வா? அதனால் தானே கற்றலின் கேட்டலே நன்று[8] என்ற வாசகம் ஏற்படலாயிற்று?

ஊருடன் கூடிவாழ்![9], நாடொப்பன செய்! [10], தேசத்தோடு ஒத்து வாழ்[11] என்று அருமையாக அறம் கூறுகிறார். இதன் பொருளை உணர வேண்டுமாயின் அக்காலத்து அரசியலை, நாட்டுப் பிரிவை நன்குணர வேண்டும்.

ஊர் என்றால் கிராமம் அல்லது நகரமாகும். ஊருடன் என்றால் ஊர்மக்களுடன்; கூடி என்றால் இணைந்து; வாழ் என்றால் வாழ்க்கை நடத்த வேண்டும். "ஊராருடன் ஒற்றுமையாக வாழ்ந்திரு" என்று தனி நபர்கட்கு அறம் கூறிய மூதாட்டியார் ஊராரை—அதாவது ஊர் மக்களை அல்லது ஊர்ச் சபையை நோக்கிக் கூறுகிறார் நாடொப்பன செய்! என்று. நாடு என்றால் பல ஊர் சேர்ந்தது ஒரு நாடு. ஒரு தனிநபர் ஊர் ஒப்பன செய்யவேண்டுவதைப்போல, ஓர் ஊர் ஒரு நாடு ஏற்கத் தக்கதையே செய்யவேண்டும் என்று அருமையாக எடுத்துக் கூறுகிறார் அறநெறியை!

அப்படியே நாடுகள் பல சேர்ந்தது ஒரு தேசம்; ஒவ்வொரு நாடும் தேச ஆட்சியுடன் இணைந்து செல்ல வேண்டும்; முரணக்கூடாது. அப்பொழுதுதான் தேசம் நலமும், வளமும் உடையதாகும். எனவே, தேசத்தோடு ஒத்து வாழ் என்றார். இங்ஙனம் அருமையாக அறநெறியை இளம் சிறார்களும் மனங்கொள்ளும் வகையில் எளிமையாக எடுத்துரைக்கும் அவ்வையாரை வணங்கி வாழ்வோம்.

II

அறந்தரு தவத்தினருள் அவ்வையார்க்கு நிகர் அவ்வையாரேதான்! அறமுரைத்தற் கென்றேஅவதரித்த பெருமாட்டி அவர். ஆகவேதான் எடுத்த எடுப்பிலேயே அறஞ்செய விரும்பு! என்று இயம்பலானார்.

பலவகை அடக்கங்களுள்ளும் தலைசிறந்த ஒன்று நாவடக்கம். யாகாவா ராயினும் நா காக்க[12] என்று அறைந்து செல்வார் வள்ளுவப் பெருமான். அப்படி, அவ்வளவிற் சொல்லுதல் அக்காலத்திற்குப் போதுமானதாக இருக்கலாம். ஆனால் அவ்வையாரோ அவ்விதம் கூறாமல், நாவடக்கத்தை வகைப்படுத்தி, எளிமையாகப் பன்னிரண்டு சூத்திரங்களாக உரைத்தருளுகின்றார்.

1. 'பொறாமையாக எதையும் சொல்லாதே' என்று நம்மை வழி நடத்த ஔவியம் பேசேல்[13] என்கிறார்.

2. 'உள்ளொன்று கருதிப் புறமொன்று தோன்றும்படியான கபடமொழிகளை உரையாதே!' என்று நமக்கு உரைக்க அவர் கூறிய சொல்தான் வஞ்சகம் பேசேல்[14].

3. வெறும் அலங்காரமாகப் பயனில பேசாதே என நமக்கு உணர்த்தவே சித்திரம் பேசேல்[15] என்றார்.

4. பிறர் மனம் அருவருத்து முகஞ் சுளிக்கும்படியான சொற்களைப் பேசுவது அநாகரிகம் என்பதை எடுத்துரைக்கவே சுளிக்கச் சொல்லேல்[16] என்ற நல்லுரையை அருளியுள்ளார்.

5. பிறர் மனம் நோகும்படி அற்ப உரைகளைப் பேசலாகாது என்ற அறத்தை உணர்த்தவே நொய்ய உரையேல்[17] என்கிறார்.

6, எவரையும் நிந்தை செய்யும்படியான எந்த உரையையும் பேசுதல் கூடாது என்பதை நாம் கடைப் பிடிக்க வேண்டும் என்று உணரச் செய்யவே பழிப்பன பகரேல்[18] என்று விதிக்கிறார்.

7. எதையும் த்ப்பும், தவறும் இல்லாமல் கூற வேண்டும் அல்லவா? அஃதை உணர்த்தவே பிழைபடச் சொல்லேல்[19] என்று கூறிப் போந்தார்.

8. அதுமட்டு மன்று; பிழைபடச் சொல்லக் கூடாது என்பது மட்டுமின்றி தேவைக் கதிகமாகப் பேசுதலும் குற்றம் அல்லது பயனற்றது என்பதைப் புலப் படுத்த மிகைபடச் சொல்லேல்[20] என்றும் உணர்த்துவா ராயினார்.

9. தன்னுடைய கல்வி, செல்வம், ஆற்றல் என்பன பற்றித் தற்புகழ்ச்சியாகப் பீற்றிக் கொள்ளுதல் அறிவு உடைமை அன்று என உணர்த்தவே வல்லமை பேசேல்[21] என்று கூறியருளுகிறார்.

10. எடுத்ததற்கெல்லாம் சபதம் கூறும் மக்களைப் பார்த்து 'வீணே வெறும் பந்தயங் கூற வேண்டா' என்பது தோன்ற வாது முற் கூறேல்[22] என்று அறிவுறுத்து கிறார்.

11. வெட்டிவிட்டதைப் போலத் துண்டித்துப் பேசலாகாதென்று, அதாவது யாருடனும் இசைவாகப் பேசவேண்டுமென்பது தோன்ற வெட்டெனப் பேசேல்[23] என்றிசைக்கின்றார்.

12. நடுநிலையின்றி பாரபட்சமாக ஒருசார்பாக எதையும் பேசலாகாது என்று உணர்த்த ஆத்திசூடியின் இறுதிச் சூத்திரமாக ஓரம் சொல்லேல்[24] என்று அருளிப் போந்தார்.

அறம் கூறும் அவ்வைப் பாட்டியார் இயல்பாகவே எதிர்மறையாய், இப் பன்னிரண்டு இடங்களிலும் கூறினாலும் உடன்பாட்டு நெறியில் ஓரிடத்தில் கூறியதையும் மனம்கொள்ள நலம் பயக்கும்.

ஞயம் பட உரை[25]

என்பதுவே அவ்வாக்கியம்! இனிமை உண்டாகும்படி உரை—நன்மை உண்டாகும்படிப் பேசு—என்று பொருள் தரும் அச்சூத்திரம் ஒன்று போதுமே நல்லறம் பேணுதற்கு. இல்லையா?

III

அறம் உரைத்தார் பலரும் பேரறங்களையே வற்புறுத்திச் செல்வர். அன்றாட வாழ்வில் பல்வேறு துறைகளில் மேற்கொள்ள வேண்டிய சிற்றறங்களைப் பற்றி தனிக் கவனம் செலுத்தியவர்களுள் அவ்வையார் ஒருவர். அவர் இயற்றிய நூல்கள் மாணாக்கர்கட்கென்றே நினைந்து செய்யப்பட்டன ஆனதால் வாழ்வின் எல்லா அம்சங்களையும் விளக்க முயன்றுள்ளார்.

கண்கண்ட—பிரத்யட்சமான—தெய்வங்கள் தாயும் தந்தையுமே என்பார்; ஈன்று புறந்தந்த அன்னையும், சான்றோர் இனத்திருக்கச் செய்யும் பிதாவும், முன் அறி தெய்வம் என்று கூறுவார்.

அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம்![26]

என்றே 'கொன்றை வேந்தன்' தொடங்குகிறது. முன் அறி என்றால் "கண்முன்னே தோன்றும்" என்று பொருள் கொள்ள வேண்டும். "முதன் முதலாக அறியப் படும்" என்று பொருள் கொள்ளினும் தவறில்லை.

மேலும் பேசுவார், தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை[27] - நற்பயன் தருவதில் மந்திரம் பேராற்றல் வாய்ந்தது. அந்த மந்திரங்கள் யாவினும் சிறந்தது பிதாவின் உறுதிமொழியே என்று வற்புறுத்துவது சிந்தித்து மேற்கொள்ளத்தக்கதாகும்.

அங்ஙனமே தாயைப்பற்றியும் கூறுவார்,

தாயின் சிறந்த ஒரு கோயிலும் இல்லை[28] என. கோயில் என்பது கடவுட் படிமம் வீற்றிருந்து அருள்சுரக்குமிடம். புனிதமான—பவித்திரமான ஸ்தலம். ஆகவேதான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று[29] என்பார் அவ்வை யார். "ஆண்டவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பினும் ஆலயத்தில் சென்று வணங்குவது தான் மிகவும் நல்லது" என்று விளக்கியவர் ஆனதால் தாயின் சிறந்த- ஈன்ற தாயை விட மேம்பட்ட; ஒரு கோயிலும் இல்லை- எந்த ஓர் ஆலயமும் கிடையாது. என்று அழுத்தமாய் உரைப்பார்,

மக்கள் நோயற்று வாழ முறையான உறக்கம் இன்றியமையாத தன்றோ? உறக்கம் கெட்டால் உடல் நலன் கெடும்; நலன் கெட்டால் நல்லறம் மேற்கொள் வதுவும் பாதிக்கப் பெறும். ஆகவே கொன்றை வேந்தன் ஆத்திசூடி, ஆகிய இரண்டிலும் ஏழு இடங்களில் உறக்கத்தை வற்புறுத்துகிறார்,

இலவம் பஞ்சில் துயில்[30]
மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு[31]

என்று. இலவம் பஞ்சு அடைத்த மெத்தையில் படுத்து உறங்க வேண்டும் என்று கூறுபவர், கரடு முரடற்ற சமமான தரையில் - அல்லது கட்டிலில் படுத்துறங்க வேண்டுமென்று தெளிவுபடுத்துகிறார்.

தையும், மாசியும் வையகத்து உறங்கு[33]

கடும் பனிக்காலமாகிற தை மாதமும், மாசி மாதமும் பனி இறங்காத, வைக்கோல் வேய்ந்த, கூரை வீட்டில் படுத்து உறங்கவேண்டும் என்று எத்துணைச் சிறந்த அனுபவத்துடன் கூறுகிறார், பார்த்தீர்களா? மேலும் கூறுவார் :

சேமம் புகினும் யாமத்து உறங்கு[33] என்று. சேமம் - இன்பத் துறைகளில்; புகினும் - மூழ்கிக் கிடந்தாலும்; யாமத்து - நள்ளிரவில்; உறங்கு - துயில்க; புலனின்பத்தில் ஈடுபட்டுக் களித்திருப்பினும் நள்ளிரவுக்குமேல் உறங்கிவிடவேண்டும் என்று கூறுவதில் உள்ள பரிவை எத்துணையும் பாராட்டலாமல்லா?

அப்படி எல்லாம் சொல்வதனாலே உறங்கிக் கொண்டே இருந்துவிடலாமா? அனந்தல் ஆடேல்[34]- அதிகாலையில் உறங்கிக் களித்துக் கிடத்தலாகாது என்பார். அனந்தல் - அதிகாலை; ஆடுதல் - தோய்ந்து மகிழ்தல். மேலும் உரைப்பார் வைகறைத் துயில் எழு[35] என்று. வைகறை என்றால் காலை 4 மணி என்பது பொருள். ஏன் காலை 4 மணிக்கே எழ வேண்டும்? பொழுது விடிய $1\frac{1}{2}$ மணிநேரம் முன்—4-30 முதல் 6 மணி வரை வீசும் ஊதைக் காற்று உடல் வளம் பெற உயிர் ஊட்டுவதாகும். அந்தக் காற்றின் பயனை விழித்திருப்பவர்களே பெறமுடியும்.

இந்த வைகறைத் துயில் எழுதற்குக் கம்பன் தரும் விளக்கம் கைகொடுக்கிறது.

ஊதைகள் சொரிவன உயிர் உறும் அமுதம்[36]

ஊதைக் காற்று காலை 4-30 மணிக்கு வீசும். அது-உயிர் ஊட்டம் அளிக்கும் அமுதம் என்கிறான் கம்பன்,

IV

அவ்வையார் அருளிய அறநூல்களுள் வாக்குண்டாம் என்பதும் ஒன்று! அரிய நீதிகளை எளிய முறையில் எடுத்தியம்புவது இது. இதனை மூதுரை என்றும் மொழிவர், சிறப்பினைக் கருதி!

இதில் யாவும் வெண்பாக்களாக விளங்கும். முதல் வெண்பா, உதவி செய்தால் பயன் உண்டா? என்பதைத் தெளிவுபடுத்துகிறது. வெண்பாவைப் பார்க்கலாம்:

> நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந் நன்றி
> 'என்று தரும்கொல்?' என வேண்டா—நின்று
> தளரா வளர்தெங்கு தாள் உண்ட நீரைத்
> தலையாலே தான் தருதலால்.[37]

நிலையாயிருந்து குன்றாமல், வளர்ந்துள்ள தென்னை யானது அடிவேரால் உறிஞ்சிய வெறும் நீரைத் தன் தலையாலே இளநீராகத் தருகின்ற உண்மையால்,

ஒரு நல்லவனுக்கு ஓர் உதவியைச் செய்தால் "அந்த உதவிக்குரிய பயன் என்று கிட்டும்?" என்று ஏங்கி இருத்தல் வேண்டுவதில்லை.

சேற்றோடு கலந்த வெறும் நீரை உண்ட தென்னை மரமே தூய மதுரமான இளநீராகத் தலையில் சுமந்து தரும்பொழுது அறிவறிந்த மக்கட்குச் செய்த உதவிக்குரிய பலன் நிச்சயம் கிட்டாமற் போகாது. ஆகவே நல்லவர்கட்குத் தயக்கமின்றி உதவ வேண்டும் என்று உணர்த்துகிறார் அவ்வைப் பிராட்டியார்.

நல்லவர்களுடன் கொள்ளும் எவ்வகைத்தொடர்பும் நன்மையையே விளைவிக்கும். நல்லவரைக் கண்டாலும், நல்லவர் உரையைக் கேட்டாலும், அவர்களின் இயல்பைப் பேசினாலும், அவர்களுடன் மனமிசைந்து

வாழ்ந்தாலும் எல்லாம் நன்மையையே உண்டாக்கும் என்பார். இக்கருத்துள்ள வெண்பா மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் உள்ளது. அதைப் பார்க்கலாம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே! நலமிக்க,
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே!—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே! அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.[38]

நல்லவர்கள் தொடர்பால் நன்மையே உண்டாகும் என்பதைப்போலவே, கெட்டவர்கள் தொடர்பால் கேடு விளையும் என்பதை அடுத்த வெண்பாவால் அறிவுறுத்து கிறார்: "கெட்டவர்களைக் கண்டாலும் கேடே; கேடுகெட்ட அவர்களின் பேச்சைக் கேட்டலும் கேடே பயக்கும்; கெட்டவர்களின் குண இயல்பைப் பற்றிப் பேசுதலும் தீமையே தரும்; அத்தகையவர்களுடன் கூடிப் பழகுவதும் கேட்டையே விளைவிக்கும்" என்ற கருத்துடைய அந்த நல்ல வெண்பாவைப் பார்க்கலாம்:

தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவுந் தீதே தீயார்;
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கியிருப்பதுவும் தீது![39]

நல்லவர் உறவு வேண்டு மென்பதையும், நல்லொழுக்கம் இல்லாத பொல்லாதவர் உறவு அறவே கூடாதென்பதையும் எவ்வளவு தெளிவாகவும் அழுத்த மாகவும் புலப்படுத்தியுள்ளார், பார்த்தீர்களா?

உடன்பிறந்தோர், மக்கள், பெற்றோர், தாயாதிகள் ஆகியோரே நமக்குச் சுற்றம், பந்துக்கள் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். இவர்களில் எத்துணை பேர் உண்மையாகவே நமக்கு உற்றோர் ஆவார்? இரத்தக் கலப்பு இருந்துவிட்டால் மட்டும் அவர்கள் சுற்றத்தார்

ஆகிவிடுவார்களா? இந்த உறவாளிகள் எல்லாம் வளமாயிருக்கும்போதும், கல்யாணம், கார்த்திகைகளிலும் வந்து உண்டு களித்து ஆர்ப்பாட்டம் செய்யும் அளவோடு சரி. நமக்கு ஒரு சிறு சங்கடம் நேர்ந்தாலும் கை கொடுத்து உதவமாட்டார்கள், உதவாதது மட்டுமல்ல, "எனக்கு அப்பொழுதே தெரியும்! இவன் தன் நிலையறிந்து அடக்கமாக வாழவேண்டாமா? உலகத்தையே இவன்தான் காப்பாற்றப் போவதுபோல ஆட்டம் போட்டான். ஆடிப் பாடி ஓய்ந்துவிட்டான்" என்று கிண்டலும் செய்வார்கள். அவர்கள் நீர் வற்றிய குளத்தைவிட்டுப் பறந்து போகும் கொக்கு, நாரை போன்றவர்கள். ஆனால் உண்மையான உறவினர் எப்படி இருப்பர்? அக்குளத்திலே உள்ள கொட்டிக் கிழங்கையும், அல்லிக்கொடியையும், நீலமலர்க் கொடியையும் போல வறுமைக் காலத்தும் பிரியாதவர்களே உண்மையான உறவு ஆவார்கள் என்கிறார். அந்த அருமையான வெண்பாவைப் பார்க்கலாம்:

அற்ற குளத்தில் அறும் நீர்ப் பறவைபோல்,
உற்றுழித் தீர்வார் உறவல்லர்;—அக்குளத்தில்
கொட்டியும், ஆம்பலும், நெய்தலும், போலவே
ஒட்டி உறுவார் உறவு[40]

V

என்ன, எது, எப்படி என்றெல்லாம் வினவவும், விடை காணவும், வல்லவர்களே மக்களாவர்; ஏன் விலங்குகள், பறவைகட்குக் கூடப் பகுத்தறிவுண்டு; மரங்கள் தாம் நகர முடியாதவை; சிந்திக்க முடியாதவை; புரிந்து கொள்ள முடியாதவை. சுருக்கமாகச் சொன்னால் கேவலம், ஜடம்! இப்படித்தான் நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த

பெருமாட்டியாகிய அவ்வையார் எப்படிக் கணிக்கிறார் என்று பார்ப்போமா?

கிளைகளையுடையனவாயும், கிளையற்று நீண்டுயர்ந்துள்ளனவாய் உள்ள ஆல், அரசு போன்ற பெருமரங்களும், தென்னை, பனை போன்ற நெடுமரங்களும் காடுகளில் காணப்படும்; அவை மரங்கள் தாம். ஆனால் நல்ல மரங்கள் அல்ல; வேறு நல்ல மரங்கள் யாவை என நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா? என்கிறார் அவ்வை மூதாட்டியார்! "ஆம்" என்கிறோம். கூறுகிறார் :

கூட்டத்தில் அமர்ந்திருக்கிற பலர் நடுவில், "நீட்டு" எனப்படும் ஓலையை ஒருவன் முறைப்படி படித்துக் கொண்டிருக்க, அதில் அடங்கியுள்ள உட் பொருளைத் தெரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதவன் எவனோ அவனேதான் சரியான மரம் ஆவான், என்று பொருள் தரும் பாவைப் பார்க்கலாம்:

> கவை ஆகிக், கொம்பு ஆகிக் காட்டகத்தே நிற்கும்
> அவை அல்ல நல்ல மரங்கள்—சவை நடுவே
> "நீட்டு" ஓலை வாசியாநின்றான் குறிப்பு அறிய
> மாட்டாதவன் நல் மரம்[41]

கவையாகி : கவைகளையுடைய ஆல் அரசு போல்வன; கொம்பாகி : நட்ட கொம்புபோன்ற பனை, ஈந்து, மூங்கில் போன்றவை; நல்ல மரங்கள் அல்ல : சரியான மரங்கள் ஆகா; சவை நடுவே : கூட்டத்தின் மத்தியிலே நீட்டு ஓலை : நீட்டு என்று கூறப்படும் சிற்றோலையை; வாசியா(து)நின்றான் : படித்துக் கொண்டிருப்பவன் சொற்களில் உள்ள குறிப்புப் (உட்)பொருளை; அறிய மாட்டாதவன் : புரிந்து கொள்ளத் தகுதியற்றவன்; நல் மரம் : சரியான மரமாவான்; நீட்டு : நீண்ட

உட்பொருளை உடையதும், சங்கேத மொழிகளால் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளதுமான அரச ஓலை - திருமுக ஓலை ஓர் ஊருக்கு வந்ததும் அதை முறைப்படி சகல மரியாதைகளுடன் வரவேற்று யாவரும் கூடியிருக்கும் கோயில் மண்டபம் அல்லது ஊர்ப் பொது மன்றத்தில் வைத்து மாலைசார்த்தி, தீபாராதனை செய்த பின்னர் கூட்டத்தினர் ஆணையிட ஊர்க்கணக்கர் எடுத்து அவ் ஓலையைப் படிப்பார். அதை யாவரும் மன்னன் உரையைக் கேட்பது போலவே மிக்க மரியாதையுடன் செவி மடுப்பர். பகை நாட்டு மன்னனுடன் போர் தொடங்கிவிட்டது. என்பதை "இறைவன் வஞ்சி சூடினன்" அதாவது பகை நாட்டின்மேல் படை எடுத்துவிட்டான் என்றோ, அன்றி "மன்னன் காஞ்சி மிலைந்தான்" அதாவது பகைவர் படையை எதிர்த்துநிற்கிறான் என்றோ படிப்பார். அப்படியானால் மக்கட்கெல்லாம் அரசு அறிவுறுத்துவது யாதெனில் கூறுவேன். போர் முற்றும் வரை வீண் விரயங்கள் கூடாது, காளையர் யாவரும் போர்ப்பயிற்சியில் ஈடுபடுக! கொல்லர்கள் யாவரும் வாள், வேல் முதலிய கருவிகளைச் சீராக்கி வைத்திடுக! எப்பொழுதும் போர்க்களத்திற்கு உணவு படை முதலியன கிடைக்கச் செய்ய நாடும் ஊரும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பன போன்ற பல செய்திகளையும் அந்தச் சிற்றோலை நறுக்கு தன்னுட்கொண்டிருக்கும். நீட்டிப் பொருள் கொள்ளவேண்டிய ஓலை ஆனதால் அதனை "நீட்டு" என்றும், "நீட்டோலை" என்றும் வழங்கினர். இந்த அருமையான செய்தியையும் சொல்லையும் சமகாலத்தவரான அவ்வைப்பிராட்டியும் கம்பனுமே நமக்குத் தந்துதவுகின்றனர்.

ஒரு மரமானது தன்னை வெட்டி வீழ்த்தும் ஒருவனுக்குத் தன் கிளைகளை எல்லாம் வெட்டிச் சாய்க்கும்

வரையிலும் எப்படி சூரிய வெப்பத்திலிருந்து அவனைக் காக்கக் குளிர்ச்சியான நிழலைத் தந்து உதவுகிறதோ, அப்படியே, மெய்யறிவுள்ள பெரியோர், ஒருவன் தமக்குத் தீமையையே புரிந்து வந்தாலும், முடிந்தவரை அவனுக்குப் பாதுகாப்பையே அருளிக்களிப் பார்கள். என்று கூறுகிறார். தன்னை வெட்டிச் சிதைப்பானுக்கும் குளிர் நிழலைத் தந்து மகிழ்வித்துக் களிக்கும் மரம் நல்லதோர் அருமையான உபமானம் மட்டுமல்ல நாளும் நாம் காணும் காட்சி மரம் வெட்டு வோன் உடம்பில் வேர்த்து வெதும்பி நிற்பதும் அவன் மேல் மரத்தின் நிழல் தழுவிக் காப்பதும் நாம் காணும் காட்சி. அங்ஙனமே பெரியோர்கள், உயர்ந்தோர் கள், அறவோர்கள், அறிவுடையோர்கள் தமக்குத் தீமை செய்தோருக்கும் நன்மையே செய்து ஆத்மத் திருப்தி யடைவர். கிறிஸ்து பெருமான், இராமலிங்கர், காந்தியடி கள் முதலிய பெரியோர் பலரின் வரலாறு இவ்வுண்மை யை நமக்கெல்லாம் நன்குணர்த்துவனவாம்: அவ் வெண்பாவுடன் மூதுரை முடிகிறது. அதைப்பார்க்கலாம்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆம்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்[42]

VI

அவ்வையார் அருளிய அறநெறி நூல்களுள் நல்வழி ஒன்று. அதன் காப்புச் செய்யுளுக்கு அடுத்துள்ள வெண்பா கூறும் அறஉரையை முதலில் செவிமடுப்போம்.

முற்பிறப்பில் செய்த பாப புண்ணியங்கட்கு ஏற்பவே இப் பிறப்பில் இன்ப துன்பங்கள் நம்மை வந்தடைகின்றன,

எனவே பாபம் செய்யாமல் புண்ணியமே செய்ய வேண்டும். எல்லா மதங்களும் கூறும் உறுதிமொழி இது தான். அதாவது : தீமையை அகற்றி நன்மையே செய்ய வேண்டும், என்பதுதான். இக்கருத்தைக் கூறும் வெண் பாவைக் காணலாம்.

புண்ணியம் ஆம்; பாபம் போம் போனநாள் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்—எண்ணுங்கால்
ஈது ஒழிய வேறில்லை; எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.[43]

புண்ணியம் ஆம் : அறச் செயல்களே எல்லா நன்மைகளையும் ஆக்கும்; பாபம் போம் : பாவச் செயல்கள் உள்ள நன்மைகளையும் போக்கும்; போன நாள் செய்த அவை : முற்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்களே; மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் : இப்பொழுது பூவுலகில் பிறந்தவர்கட்கு முதலீடாக வைத்ததாகும். ஆதலால் தீதொழிய நன்மை செயல் : தீமையற்று நன்மையை ஆற்றுதலே வழியாகும்; எச் சமயத்தோர் சொல்லும் : எந்த மதத்தினருடைய உறுதிமொழியும்; ஈதொழிய வேறில்லை : இஃதன்றி வேறு இல்லை.

வினைப்பயன் அல்லது கர்மபலன் என்பதை மேலும் அவ்வையார் பல்வேறிடங்களிலும் வற்புறுத்திச் செல்லக் காண்கிறோம். விரை ஒன்று போடச் சுரை வேறா முளைக்கும்? முன்னே நாம் செய்த வினை இருக்க அதற்கேற்ற பயன்தானே நம்மை வந்தடையும்? அந்த நியதியை மறந்துவிட்டுத் தெய்வத்தைப் பழிப்பதை நாம் அறிவோம். ‘கடவுளுக்குக் கண்ணில்லையா? அட கடவுளே! ஏன் தான் என்னை இப்படிப் படுத்து கிறாயோ?’ என்றெல்லாம் பலர் அங்கலாயப்பதை

வரையிலும் எப்படி சூரிய வெப்பத்திலிருந்து அவனைக் காக்கக் குளிர்ச்சியான நிழலைத் தந்து உதவுகிறதோ, அப்படியே, மெய்யறிவுள்ள பெரியோர், ஒருவன் தமக்குத் தீமையையே புரிந்து வந்தாலும், முடிந்தவரை அவனுக்குப் பாதுகாப்பையே அருளிக்களிப் பார்கள். என்று கூறுகிறார். தன்னை வெட்டிச் சிதைப்பானுக்கும் குளிர் நிழலைத் தந்து மகிழ்வித்துக் களிக்கும் மரம் நல்லதோர் அருமையான உபமானம் மட்டுமல்ல நாளும் நாம் காணும் காட்சி மரம் வெட்டு வோன் உடம்பில் வேர்த்து வெதும்பி நிற்பதும் அவன் மேல் மரத்தின் நிழல் தழுவிக் காப்பதும் நாம் காணும் காட்சி. அங்ஙனமே பெரியோர்கள், உயர்ந்தோர் கள், அறவோர்கள், அறிவுடையோர்கள் தமக்குத் தீமை செய்தோருக்கும் நன்மையே செய்து ஆத்மத் திருப்தி யடைவர். கிறிஸ்து பெருமான், இராமலிங்கர், காந்தியடி கள் முதலிய பெரியோர் பலரின் வரலாறு இவ்வுண்மை யை நமக்கெல்லாம் நன்குணர்த்துவனவாம்: அவ் வெண்பாவுடன் மூதுரை முடிகிறது. அதைப்பார்க்கலாம்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆம்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்[42]

VI

அவ்வையார் அருளிய அறநெறி நூல்களுள் நல்வழி ஒன்று. அதன் காப்புச் செய்யுளுக்கு அடுத்துள்ள வெண்பா கூறும் அறஉரையை முதலில் செவிமடுப்போம்.

முற்பிறப்பில் செய்த பாப புண்ணியங்கட்கு ஏற்பவே இப் பிறப்பில் இன்ப துன்பங்கள் நம்மை வந்தடைகின்றன,

எனவே பாபம் செய்யாமல் புண்ணியமே செய்ய வேண்டும். எல்லா மதங்களும் கூறும் உறுதிமொழி இது தான். அதாவது : தீமையை அகற்றி நன்மையே செய்ய வேண்டும், என்பதுதான். இக்கருத்தைக் கூறும் வெண் பாவைக் காணலாம்.

புண்ணியம் ஆம்; பாபம் போம் போனநாள் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்—எண்ணுங்கால்
ஈது ஒழிய வேறில்லை; எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.[43]

புண்ணியம் ஆம் : அறச் செயல்களே எல்லா நன்மைகளையும் ஆக்கும்; பாபம் போம் : பாவச் செயல்கள் உள்ள நன்மைகளையும் போக்கும்; போன நாள் செய்த அவை : முற்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்களே; மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் : இப்பொழுது பூவுலகில் பிறந்தவர்கட்கு முதலீடாக வைத்ததாகும். ஆதலால் தீதொழிய நன்மை செயல் : தீமையற்று நன்மையை ஆற்றுதலே வழியாகும்; எச் சமயத்தோர் சொல்லும் : எந்த மதத்தினருடைய உறுதிமொழியும்; ஈதொழிய வேறில்லை : இஃதன்றி வேறு இல்லை.

வினைப்பயன் அல்லது கர்மபலன் என்பதை மேலும் அவ்வையார் பல்வேறிடங்களிலும் வற்புறுத்திச் செல்லக் காண்கிறோம். விரை ஒன்று போடச் சுரை வேறா முளைக்கும்? முன்னே நாம் செய்த வினை இருக்க அதற்கேற்ற பயன்தானே நம்மை வந்தடையும்? அந்த நியதியை மறந்துவிட்டுத் தெய்வத்தைப் பழிப்பதை நாம் அறிவோம். ‘கடவுளுக்குக் கண்ணில்லையா? அட கடவுளே! ஏன்தான் என்னை இப்படிப் படுத்து கிறாயோ?’ என்றெல்லாம் பலர் அங்கலாயப்பதை

யாவரும் அறிவோம். நீர், அரிசி முதலியவற்றை இடாமல் உள்ள வெறும்பானையை அடுப்பின்மேல் ஏற்றிவிட்டால் சோறு பொங்கிவழியுமா? மாட்டா தன்றோ? அங்ஙனமே தீவினைப் பயனாகிய துன்பம் நீங்கும் என்று உணர்ந்து முற்பிறப்பில் அறம் புரியாதவர் கட்கு—பழம் பாப மூட்டை இருக்க—இறைவனைப் பழிப்பதால் யெருஞ் செல்வம் வந்து சேரக்கூடுமா! இதை உணர்ந்து பின்னைப் பிறவிகளிலாவது இன்பம் அடைய இப் பிறப்பில் அறம் புரிதல் வேண்டும் என்பதை ஒரு வெண்பாவால் மனங்கொள்ளச் செய் கிறார். அவ்வெண்பாவைக் காண்போம் இனி :

செய்தநீ வினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்?—'வையத்து
அறும் பாபம்' என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்?[44]

வினைப்பயனை மாற்ற வழியே இல்லை; ஆனால் எண்ணம் எல்லாம் இறைவன் அடியில் பதித்துவிட்டால் அவ்வினைப் பயன் நம்மை வந்து சாடாது. ஆம் மார்க்கண்டன் கதை நமக்கெல்லாம் தெரிந்தது தானே?

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
எனைத்தாய நூலகத்தும் இல்லை;-நினைப்பு அது என
கண்ணுறுவது அல்லால் கவலைப்படேல்; நெஞ்சே!
விண்ணுறுவார்க்கு இல்லை விதி.''[45] [மெய்

வினைப்பயனை : புண்ணியம், பாவம் ஆகிய இரு வினைகளின் பயன்களை; வெல்வதற்கு : அனுபவிக் காமல் தப்பிக்கொள்ளுவதற்கு; வேதம் முதலாம் : நான் மறை முதலான; எனைத்தாய நூலகத்தும் : எவ்வகைப் பட்ட அறநூல்களிலும்; இல்லை : வழி இல்லை;

நெஞ்சே : ஏ மனமே; நினைப்பு : எண்ணம் முழுதும்; அது என : பரம்பொருளே என்று சொல்லும்படி; கண் : நல்லறிவை; உறுவதலால் : அடைவதை அன்றி; கவலைப்படேல் : சஞ்சலம் அடையாதே! (ஏன் என்றால்) விண்உறுவார்க்கு : வீடு பேற்றை அடைபவர் கட்கு; விதி இல்லை : ஊழ்வினைத் தாக்குதல் இல்லை. மெய் : இது கண்கண்டது.

விதியை வெல்ல வழியே இல்லை; ஆனாலும் இறைவனை எண்ணி பிறகவலைகளை விட்டுவிட்டு முத்தியில் மனம் ஒன்றியவர்கட்கு விதியின் எவ்விதத் தாக்குதலும் உண்டாகாது என்று தெளிவிக்கின்ற அவ்வைப் பிராட்டியாரின் நான்கு நூல்களையும் பழுதறக் கற்றுப் பயனடைவோமாக!

□ □ □

அடிக்குறிப்புகள்

1.	ஆத்திசூடி	1
2.	”	8
3.	”	9
4.	”	11
5.	”	29
6.	”	71
7.	”	39
8.	பழமொழி	6
9.	ஆத்திசூடி	104
10.	”	67
11.	ஆத்திசூடி	62
12.	திருக்குறள்	127
13.	ஆத்திசூடி	12
14.	ஆத்திசூடி	27

15.	ஆத்திசூடி	46
16.	,,	48
17.	,,	75
18.	,,	77
19.	,,	79
20.		90
21.	,,	99
22.	,,	100
23.	,,	105
24.	,,	109
25.	,,	17
26.	கொன்றை வேந்தன்	1
27.	,,	37
28.	,,	38
29.	,,	2
30.	ஆத்திசூடி	26
31.	கொன்றை வேந்தன்	76
32.	,,	45
33.	கொன்றை வேந்தன்	33
34.	ஆத்திசூடி	31
35.	,,	107
36.	கம்பராமாயணம்	82
37.	வாக்குண்டாம்	1
38.	,,	8
39.	,,	9
40.	,,	17
41.	,,	13
42.	,,	30
43.	நல்வழி	1
44.	,,	17
45.	,,	37

15. காந்திய வழி

பாரத நாடு பழம்பெரும் நாடு. பல்லாயிரம் ஆண்டுகளாக மனித குலத்திற்குத் தர்மத்தை உபதேசித்து வருகிறது. வேதம், உபநிஷதம், போன்ற காலங்கடந்த பெருநூல்களை உலகத்திற்கு அளித்த பெருமை இந்தியாவிற்கே உரியது. இல்லாவிட்டால் புத்தன், வள்ளுவன் போன்ற மெய்யறிவு இன்பம் மேவிய அறவோர்கள் இம்மண்ணிலே தோன்றியிருத்தல் கூடுமா?

அன்பு, அறம் என்ற இருநெறியிலும் கருத்தூன்றி அவற்றை உலகிற்கு உபதேசித்த அருளாளர் எத்தனையோ! அன்பின் அவதாரம் கௌதம புத்தன்; அறத்தின் திருவுரு அருள்மிகு வள்ளுவன். அந்த இருவரின் கூட்டென்று எண்ணும்படி இன்று நம்மிடையில் வாழ்ந்து வருபவர் மகாத்மா காந்தியடிகள். உலகமே இதுவரை கண்டறியாத அற்புதன் என அடிகளை அறிவுலகம் பாடிப் பரவிக் கொண்டாடுகிறது. ஏன்? தெளிவான அறிவு; ஒளிவிலாச் சிந்தை; உறுதியான சொல்; சொல்வதற்கேற்ற செயல், இவைதான் அடிகளின் சிறப்பியல்பு.

அறம் உரைக்கும் அறவோர் பலரை உலகம் கண்டது. ஆனால் அவ்வறத்தை, ஒழுகி உலகிற்கு உணர்த்திய சான்றோனை இப்பொழுதுதான் உலகம் முதன்முதலாகக் கண்டு கொள்கிறது. அன்று தச சீலத்தை உலகிற்கு உபதேசித்த புத்தன் அஹிம்ஸையின் மேன்மையை உணர்த்தினான். இன்று ஏகாதச சீலத்தை வழங்கிய மகாத்மா அஹிம்ஸையின் ஆற்றலை உலகிற்கு

நிருபித்துக் காட்டிவிட்டார். இந்தியா பெற்ற விடுதலை அஹிம்ஸையின் வெற்றி! இல்லையா?

அஹிம்ஸை, சத்தியத்தின் பிணைப்போடிருக்கும் பொழுதுதான் மணமுள மலராகிறது என்பார் எம்மான் காந்தியடிகள். சத்தியத்தைக் கடைப்பிடித்த அஹிம்ஸையினால்தான் பகைமை இலாப் போர்செய்து வன்மமிலா வெற்றிபெறமுடியும். இந்த அற்புதத்தை உணர்த்திய மேதை காந்தியடிகள்தான் என்பதில் இரண்டுவித அபிப்பிராயம் எங்கும் இல்லை.

உலகம் போற்றும் அவ்வுத்தமர் நாம் எல்லாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நெடுநாளாக எழுதினார்; பேசினார்; நடந்தும் காட்டினார். அவற்றை எல்லாம் வடித்தெடுத்துப் பதினொரு பொருளாய்த் தொகுத்து அஹிம்ஸா சத்யம் எனத் தொடங்கும் ஒரு சம்ஸ்கிருத விருத்தமாக அமைத்தார் ஸ்ரீ வினோபா பாவே.

அதில் புலப்படுத்தப் பெறும் கருத்துக்களை முதலில் அறிந்துகொள்வோம்.

1. சத்யம் : எப்பொழுதும், எவ்விடத்தும் உண்மையோடிருத்தல்.

2. அஹிம்ஸை : யாருக்கும் எப்பொழுதும் ஹிம்ஸை புரியாதிருத்தல்.

3. திருடாமை : தன்னது அல்லாத எதையும் உரியவர் அறியாமல் எடுத்துக்கொள்ளாதிருத்தல்.

4. நாவடக்கம் : ருசிக்கு அடிமைப்படாமலும், தீயபுயனில் சொற்களைப் பேசாமலும் இருத்தல்.

5. சமய சமரசம் : எல்லா மதங்களும் இறைவனை நோக்கி இட்டுச் செல்லுகிற பாதைகளே என்பதை உணர்ந்து மத துவேஷமில்லாமல் வாழ்தல்.

6. நித்தியம் உடல் உழைப்பு : தினப்படி சரீரப் பிரயாசை கொள்ளாமல் உண்பது பாபம், திருட்டு என்ற உணர்வு கொண்டு உழைப்பின் மேன்மையை அறிந்து தினப்படி தீமையிலாத் தொழில் ஒன்றில் ஈடுபட்டிருத்தல்.

7. அஞ்சாமை : கோழைத்தனத்திற்கு வித்து அச்சமே என்பதை அறிந்து, தீமைக்கும், தீயோர்க்கும் பயப்படா திருத்தல்.

8. நிலையாப் பொருள் சேமியாமை : ஸ்திரமில்லாத பொருள் பணம். அதைத் தேடுவோம், ஈட்டுவோம்; ஆனால் குவித்துவைத்துக் கொண்டிருக்கமாட்டோம்; தேடிய பொருளைத் தக்க வழியில் செலவிடுவோம்; அதைச் சேமித்துவைத்துக் கொண்டிருப்பதே தெய்வ நம்பிக்கை இல்லை என்பதன் அறிகுறி என்பதை எல்லாம் அறிந்திருத்தல்.

9. எத்தானும் கீழ்மேல் இல்லாமை : ஜாதி, மதம், கல்வி தொழில், முதலிய எவற்றினாலும் மக்களில் எவரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று கருதாதிருத்தல்.

10. புலனடக்கம் : ஐம்புலன் அடக்கம், அதில் முக்கிய மாக, பிரமச்சரியமனுஷ்டித்தல். மக்களைப் பெறு தற்கே அன்றி கேவலம் புலனின்பம் கருதி ஒழுகா திருத்தல்.

11. சுதேசி : முடிந்த அளவு அவரவர் தம் நாட்டுப் பொருளையே உபயோகித்தல். பிறநாட்டை எதிர் பார்த்து வாழ்தல் ஒரு நாட்டின் உயர்வுக்கு இழுக்கு என்பதை அறிந்து வாழ்தல்.

இவைதாம் மகாத்மா சொல்லுகிற ஏகாதச சீலம். அதாவது பதினொரு வித ஒழுக்கக் கோட்பாடு. இவற்றை ஒரு விருத்தமாக அலிபுரம் சிறையில் இருந்த காலத்தில் ஆக்கினார் ஸ்ரீ வினோபா. அவ்விருத்தத்தின் கடைசி அடியில் 'இந்தப் பதினொரு சீலத்தையும் எண்ணம், சொல், செயல் என்ற திரிகரண சுத்தியாகக் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்வோம்' என்று முடித்தார்.

இந்த உன்னத நெறிநின்று நம்மையும் நம்நாட்டையும் உயர்த்த எல்லாம் வல்லான் நமக்கு அருள் புரிவானாக; இனி அந்தச் செய்யுளின் முழு உருவத்தையும் பார்ப்போம் :

சத்தியம், அஹிம்ஸை, திருடாமை
 நாவடக்கம், சமய சமரசம்,
நித்தியம் உடல் உழைப்(பு), அஞ்சாமை,
 நிலையாப் பொருள்சேமியாமை,
எத்தானும் கீழ்மேல் இல்லாமை,
 புலன்அடக்கம், சுதேசி என்னும்
பத்தினோ(டு)ஒன்றாம் சீலம்இவை
 திரிகரணம் பற்றி வாழ்வாம்*

□ □ □

* ஸ்ரீ வினோபாஜி அவர்கள் யாத்த பாடலின் தமிழாக்கம்: திரு கம்பன் அடிப்பொடி

16. உலகச் சிறுகதை

இலக்கிய வகைகளுள் சிறுகதையும் ஒன்று. ஒன்று என்பதுமட்டுமன்று; ஆற்றல் மிக்கதுமாகும். என் கருத்துப்படி கவிதைக்கு அடுத்தபடியாக ஆற்றல் வாய்ந்தது சிறுகதையேயாகும். அச் சிறுகதை தமிழ் நாட்டிற்குப் புதிதன்று என்றாலும் இலக்கிய வகைகளுள் ஒன்றாகக் கருதி மதிக்கப்படத் தொடங்கியது இந்த நூற்றாண்டில்தான். இல்லாவிட்டால் "அத்தைப் பாட்டி கதை" என்ற சொற்றொடர் தோன்றியிருக்க முடியுமா என்ன? இன்றோ சிறுகதை இல்லாமல் செய்தித் தாள்கூட வெளிவர முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அத்தகைய செல்வாக்கு இன்று சிறுகதைக்கு.

சிறுகதை என்ற பெயரைக் கொண்டு சிறுகதைக்கு இலக்கணம் சொல்லிவிட முடியாது. அமைப்பு, அருமை களைக் கொண்டும் இவை இவை இவ்வாறெல்லாம் பொருந்தியிருந்தால் தாம் சிறுகதை என்றும் முடிவுகட்டி விடவும் முடியாது.

ஆனால் சிறுகதை என்பதுதான் என்ன?

ஏதாவது ஒரு குறிப்பட்ட நிகழ்ச்சி அல்லது உள்ளத் தில் தோன்றும் உணர்ச்சி, போன்றவற்றை அடிப்படை யாகக் கொண்டு விளங்குவதுதான் சிறுகதை. மனித வாழ்க்கையின் ஒரு பகுதியைப் பலகணியின் வழியாகப் பார்க்கும்படி, உட்பொருள் ஏதும் சுரப்பதாய் அல்லது உட்பொருள் ஏதும் இல்லதாய், ஆனால் அதுவே அதன் முழு நோக்கமாய் இலங்குவதாய் அமைக்கப் பெறும்

ஒரு கட்டுக்கோப்பே சிறுகதையாகும். வார்த்தைகளின் எண்ணிக்கையின் குறைவு அல்லது மிகுதியைக் கொண்டு ஒன்றை சிறுகதை என்றும், அன்று என்றும்,சொல்லிவிட முடியாது. வங்கக் கவி ரவீந்திரநாத் தாகுர் எழுதிய குமுதினி 300 பக்க அளவுடையதாயினும் ஒரு சிறு கதையே. ஒரே பக்கத்தில் முடியும் சிறுகதைகளும் உண்டு.

சிறுகதைக்கு வரம்பும் நெறியும் வகுத்து, வகைகள் பல கூறி, அவை வளர வகைசெய்தவர்கள் மேலை நாட்டுத் திறனாய்வாளர்களே! அவர்களுக்குள் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டாலும் ஒன்றில் யாவரும் கருத்தொருமித்தவர்களாய் இருக்கிறார்கள். கதை ஆசிரியன் எடுத்துரைக்காமலே படிப்போர் உள்ளத்தில் அவன் குறிப்பு ஒலிக்கும்படிச் செய்வது சிறுகதைக்கு ஏற்றம் தரும் ஒன்று என்பதுதான் அது.

இவ்விதமான கருத்துக்களை எல்லாம் மனத்துட் கொண்டு உலகத்திலேயே மிகச் சிறந்த சின்னஞ் சிறு கதை "சமத்துவம்" என்ற ருஷியக் கதைதான் என்பார்கள். அதை 12 ஆண்டுகட்கு முன்னரேயே புதுமைப் பித்தன் மொழிபெயர்த்துள்ளார். அதை அப்படியே அடியிற் காண்போம்.

சமத்துவம்

[ஒரு ருஷிய ஆசிரியர்]

நீலக் கடலின் அடிமட்டத்திலே, பிரம்மாண்டமான மீன் ஒன்று, இரை தேடிக்கொண்டு, உல்லாசமாக நீந்திவருகிறது.

எதிரே ஒரு சின்ன மீன்-அதன் உணவு.

பெரிய மீன், அதை விழுங்குவதற்காக, தன் வாயை அகலத் திறக்கிறது. சின்னது இதைக் கண்டு பயந்து கீச்சிட்டுக் கத்துகிறது. ''ஐயா! என்னை விழுங்காதே. நீ என்னைத் தின்பது நியாயமில்லை. இந்த உலகத்தில் வாழ, உன்னைப் போல, எனக்கும் உரிமை உண்டு. தர்மத்தின் எதிரில் எல்லா மீன்களும் சமம்.''

இதைக் கேட்ட பெரிய மீன் கர்ஜிக்கிறது............ ''அதற்கென்ன இப்பொழுது? உன்னிடம் சமத்துவத்தைப் பற்றி விவகாரம் பண்ணவரவில்லை. நான் உன்னைத் தின்னவேண்டாம் என்றால், நீயே என்னை விழுங்கி விடு. எங்கே பார்ப்போம்! பயப்படாதே! உம்!''

சின்ன மீன், தன் வாயை முடிந்தவரை அகலத் திறந்துகொண்டு, அதை விழுங்குவதற்காகச் சுற்றிச் சுற்றிவந்து, முயல்கிறது.

பிறகு, கடைசியாக, ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு சொல்லுகிறது: ''நீதான் செய்—என்னை விழுங்கி விடு!...........''

மேலே காணப்பெறும் ருஷியக் கதைதானா உலகிலேயே சின்னஞ் சிறுகதை? இல்லை என்கிறது என் மனம்.

அப்படியானால் வேறெது?........அது எந்நாட்டில் எம்மொழியில் இருக்கிறது?

இந்திய நாட்டில், தமிழ் மொழியில்தான். அதைப் பார்க்கலாம் இனி.

தன் நாட்டின் மேல் மாற்றான் படை எடுத்து வந்திருக்கிறான். நாட்டின் வீரர்கள் யாவரும் கொதித்

தெழுந்து போர்க்களம்புகுகின்றனர், நாட்டைக் காப்பதற்காக. அவர்களுள் ஒருவன் கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன். அவன் செருக்களத்தே திரிந்தும் பறந்தும் தன்னெதிர்ப்பட்ட ஒன்னாரையெல்லாம் உயிரிழக்குமாறு அல்லது வலியிழக்குமாறு மறம் மணக்கச் செய்துகொண்டிருக்கிறான். அப்பொழுது கருமலையனைய களிற்றின் பிடரியில் அமர்ந்தான் ஒருவன், இவனை நோக்கி வருகின்றான் கடுஞ்சினம் தோன்ற. வருவோன் நிலையும் மனமும் அறிந்த இவன், தன் கையில் எஞ்சியிருந்த கூரிய வடிவேலை அந்த யானையின் நெற்றியைக் குறிவைத்து வீசுகின்றான் முழுவலியுடன். இன்றையப் போரில் "டாங்க்" வகிக்கும் இடத்தை அக்காலப் போரில் யானை பெற்றிருந்தது. மேலும் அந்த யானையைக் கொல்லாமல் அதற்குப் பெரும்புண் ஏற்படச் செய்தால் வலிதாங்காத களிறு, வெறிபிடித்துத் திரும்பித் தன் படைக்குள் நுழைந்து கலக்கி மாற்றோர்க்குப் பெரும் சேதத்தை விளைவிக்கும் என்பதை எல்லாம் இவ்வீரன் நன்குணர்வான். எனவேதான் யானை மீதிருந்த வீரனைக் கருதாமல் யானையை இலக்குவைத்து வேல் விடுத்தான். இவன் எண்ணம் பழுதாகவில்லை. எண்ணியபடியே வேலை வாங்கிக்கொண்ட களிறு பெருந்துயரிழந்து வெறிபிடித்து மேலமர்ந்த வீரனுக்கும் அடங்காமல் அவனையும் வலியிழக்கச்செய்து மிரண்டு பிளிறிக் கொண்டு தன் படைப்பக்கமாகத் திரும்பிவிட்டது.

அந்த மகிழ்ச்சியிலே வெற்றிப் பெருமிதத்தோடு ஒய்யாரமாய் நடந்து வருகின்றான் இந்த வீரன். கையிற் படை ஏதுமின்றித் தனித்து வருகின்ற இவன் நிலை கண்ட மாற்றான் ஒருவன் இவனால் தங்கட்கு விளைந்த பேரிழப்புகளை எல்லாம் மனத்துட்கொண்டு

இவனைத் தாக்கக் கடிது வருகின்றான். அது கண்ட இவ்வீரன் "ஐயோ கையில் வில், வாள், வேல் ஏதும் இல்லையே இவனையும் ஒரு கை பார்க்க" என்று ஒரு கணம் திகைத்து நிற்கிறான். ஆனால் மறுகணமே மாற்றான் விட்ட வேலொன்று தன் மார்பில் பதிந்திருப் பதைக் காண்கின்றான். நம்பிக்கையில் ஏற்படும் பெருமகிழ்வுடன் அதை வெடுக்கெனப் பறிக்கின்றான். பறிக்கும்பொழுதே "மூடர்கள்! தாம் எறிந்த வேலே தமக்குக் காலனாய், புது வலியுடன் திரும்பும் என்பதை உணர்ந்தார்களில்லையே எதிரிகள்" என்ற குறிப்புத் தோன்றச் சிரிக்கின்றான்.

அவ்வளவுதான்; கதை முடிந்தது. அதன் பின் என்னாயிற்று, திரும்பிப்போன களிறு என்ன இடிசாமங் களை எல்லாம் எதிரிகட்கு உண்டாக்கிற்று? என்பதை எல்லாம் விரிக்கவில்லை ஆசிரியன்.

சிறுகதைக்கே அற்புதமான ஒரு எடுத்துக்காட்டானது இது. ஒன்பதே சொற்களால் அமைந்து விளங்குகிறது.

ஆசிரியன் சொற்களாலேயே கதையைக் காண் போம்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். -திருக்குறள்-774

தன்னையே உலகினுக்களித்து வான்புகழ் கொண்ட வள்ளுவன்தான் இச்சிறுகதையின் ஆசிரியன் என்பதைச் சொல்லவா வேண்டும்?*

□ □ □

* இத்தகைய சிறுகதைகள், சிறுகதைக் கூறுகள் சங்கத்துப் பாடல்கள் பலவற்றுள்ளும் உள.

17. மணி விழா

(வைதிக நெறி)

அறுபதாண்டு நிறைந்து அடுத்துவரும் முதல் நாளே அறுபதாண்டு நிறைவு விழா என்றும், ஷஷ்டியப்த பூர்த்திச் சாந்தி என்றும் சொல்லப்பெறும் மணி விழா ஆகும்.

காலத்தை நம்மவர் மிகத் துல்லியமாகக் கணித்து வந்திருக்கின்றனர். நொடி, விநாடி, நாழிகை, யாமம், பொழுது, நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம் ஆண்டு என்று பகுத்துக் கணக்கிடுதல் நமது முறை. இம்முறை பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் தொடர்ந்து இருந்துவருகிறது.

இக் கணிப்புமுறை சூரியன், சந்திரன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞான நெறியில் நிர்ணயிக்கப்பெற்றது. இம்முறையே சில நூற்றாண்டுக்கு முன்வரை அகில உலகமும் ஏற்றுப் போற்றிவரப்பெற்ற தாகும். ஆண்டுக்குச் சூரியன்; மாதத்திற்குச் சந்திரன் வாரத்திற்குச் சூரியன் முதல் சனிவரையுள்ள ஏழுகிரகங் கள், அதிதேவதைகள்.

உலகம் 360 பாகை(Degree)களாக வகுக்கப் பெற்றுள்ளது. சூரியன் இந்த 360 பாகைகளையும் முழுக்க ஒரு சுற்றுச் சுற்றும் கால அளவை ஒரு வருடமாகக் கொள்வோம். 360 பாகைகளையும் பன்னிரண்டு ராசிவீடுகள் (Sign of the Zodiac) என

வகுத்து ஒவ்வொரு ராசிவீட்டிற்கும் 30 பாகைகளாகக் கணக்கிட்டுள்ளனர்.

அப்படிக் கணக்கிட்ட அந்தக் காலத்தில் ஆண்டிற்கு 360 நாட்களாகவே அமைந்தன. இது பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட கணிப்பு. பூமியின் கோள்வழி (Orbit) சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வருகிறது. அதாவது பூமியானது ஆண்டு ஒன்றுக்கு 11 இஞ்சு வீதம் கோள் வழியைவிட்டு விலகிக்கொண்டிருக் கிறது. அதனால் ஆண்டு ஒன்றுக்கு 360 நாட்களாக இருந்தநிலை சிறிது சிறிதாக மாற்றம் பெற்றுத் தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 365 நாள், 6 மணி, 1 ௳ நிமிஷம், 53 விநாடியாகக் கூடியிருக்கிறது.

எனவே ஆதிகாலத்தில் 60 ஆண்டுக்கு (60×360) 21, 600 நாட்களாக இருந்த நிலை மாறித் தற்காலத்தில் $(60 + 365\frac{1}{4})$ = 21, 915 நாட்களாகிவிட்டன. முந்திய கணக்குப்படி பார்த்தால் 60 ஆண்டும், 10 மாதமும், 15 நாளும் ஆகின்றன. ஆதலால் ராசிவீடுகளில் கிரகங்கள் அமையும் கால அளவுகளிலும் ஏற்றத் தாழ்வு கள் ஏற்படுகின்றன. என்றாலும் பெருத்த மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை.

குத்து மதிப்பாகப் பார்க்கும்பொழுது பன்னிரண்டு ராசிவீடுகளிலும்—அதாவது, 360 பாகைகளிலும்— தங்கியிருந்து ஒரு முழுவட்டம் சுற்றுவதற்கு,

> சூரியனுக்கு ஓர் ஆண்டும், சந்திரனுக்கு ஒரு மாதமும், செவ்வாய்க்கு ஒன்றரை ஆண்டுகளும், புதனுக்கு ஓராண்டும், வியாழனுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளும், வெள்ளிக்கு ஓராண்டும், சனிக்கு முப்பது ஆண்டுகளும், ராகு கேதுகளுக்கு ஒன்றரை ஆண்டுகளும் ஆகின்றன.

இந்த முறையில் நோக்கும்போது ஆதிநாட்களில் ஒருவர் பிறந்த காலத்தில் அமைந்த ஆண்டு, மாதம், நட்சத்திரம்,கிரகநிலை யாவும் அறுபது ஆண்டு நிறைந்த மறுநாளில் அப்படியே அமைந்திருக்கும். ஆனால் பூமியின் கோள்வழியில் மாற்றம் ஏற்பட்டுள்ள இந்நாட்களிலும் ஆண்டு, மாதம், நட்சத்திரம், பெரும் பாலான கிரகங்களின் நிலை யாவும் பிறந்த நாளில் அமைந்ததைப் போலவே இருக்கக் காண்போம்.

ஆதலால் ஏனைய பிறந்த நாட்களைவிட அறுபதாவதாண்டு நிறைந்து அடுத்துவரும் பிறந்த நாளே சிறப்புடையதாகும். எனவே இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவது நமது மரபு. தெய்வ நம்பிக்கையுடன் அறவோர் வகுத்த, நூல் விதித்த சிஷ்டாசாரம் என்னும் முந்தையோர் வழிமுறையைப் பின்பற்றி ஷஷ்டியப்த பூர்த்திச் சாந்திக் கல்யாணம் என்னும் அறுபதாண்டு நிறைவு மணிவிழாவைக் கொண்டாடி வருகிறோம். இவ்வாறு கொண்டாடுவதி லும், முறைகள் வேறுபடுகின்றன. ஆம், நோக்கத்தில் மாறுபாடு இல்லை. ஆனால் செயல்முறையில் வேறுபாடு கள் உள்ளன. குறிப்பாக, வைதிகமுறை என்றும் ஆகமமுறை என்றும், இருபெரும் பிரிவுகள் உள்ளன. சைவர், வைணவர்கட்கு ஆகமமுறையே ஏற்றது.

அதிலும் சிவன், விஷ்ணு ஆகிய இருபெரும் கடவுளையும் நேர்ந்துகொண்டு காலகாலனாகிய அமிருதமிருத்யுஞ்ஜேச்வரனை வழிபட்டு ஹோமங்கள் செய்யும் ஆகமமுறையே சாலச் சிறந்தது என்பது என் கருத்து. இந்த முறையில் 11 பகுதிகள் உண்டு. அவை முறையே,

1. மகா சங்கல்பம்	2. அனுக்ஞை
3. விக்னேச்வர பூஜை	4. கணபதி ஹோமம்
5. நவக்கிரக ஹோமம்	6. நாந்தி சோபனம்,
7. லட்சுமி பூஜை	8. மிருத்தியுஞ்ஜெய ஹோமம்
9. மந்திரதீர்த்த அபிஷேகம்	10. தம்பதி பூஜை

11. திருமாங்கல்ய தாரணம்.

என்பன.

இந்த ஆகமமுறைப்படி மூன்று வேதிகைகள் அமைத்து மூன்றிலும் மொத்தம் 28 குடங்களில் திருமஞ்சன தீர்த்தம் நிரப்பி முறைப்படி வேதிகைகளில் அலங்காரம் செய்து தானியங்கள் பரப்பிக் கும்ப ஸ்தாபனம் செய்யப்பெறும். கங்கை முதலான புண்ணிய நதிகளின் தீர்த்தமும், திருமஞ்சன திரவியங்களும் கலந்து திருமஞ்சன தீர்த்தம் தயாரிக்கவேண்டும். மூன்று வேதிகைகளும் தெற்கு வடக்கான நேர் வரிசையில் கிழக்கு நோக்கியதாய் அமைக்கப்பெறும்.

1. தெற்குப் பக்க வேதிகையில், 11 குடங்கள் இருக்கும். சூரியன்முதலான ஒன்பது கிரகங்கட்கு 9ம், ராசிதேவதைக்கு 1ம், காலாதி தேவதைக்கு 1ம் ஆக 11 குடங்கள்.

2. பிரதானம் அல்லது நடு வேதிகையில் 15 குடங்கள் இருக்கும். அமிருத மிருத்யுஞ்ஜெயச் வரர்க்கு 1 குடம்; அம்ருத மிருத்யுஞ் ஜெயேச்வரிக்கு 1 குடம்; மார்க்கண்டேயருக்கு 1 குடம்; கணபதிக்கு 1குடம்; இந்திராதி அஷ்டதிக் பாலர்க்கு 8 குடம்; துர்க்கைக்கு 1 குடம்; நந்திக்கு 1 குடம்; பைரவருக்கு 1 குடம் ஆக 15 குடங்கள்.

3. வடக்குப் பக்க வேதிகையில் 2 குடங்கள். பிரபவமுதல் அட்சய வரையுள்ள அறுபது ஆண்டு களான ஷஷ்டிதேவிக்கு 1 குடம், கசயபா, அஸ்வத்தாமா, அத்திரி, மகாபலி, பரத்வாசர், வியாசர், விச்வாமித்திரர், அனுமார், கௌதமர், விபீஷணர், ஜமதக்கினி, கிருபாச்சாரி, வசிஷ்டர், அருந்ததி, பரசுராமர், திஷணா, விருத்தமாதா, கௌரி, சரசுவதி, தனலட்சுமி, தானியலட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்யலட்சுமி, தைரிய லட்சுமி, வித்தியாலட்சுமி, வீரலட்சுமி, விஜய லட்சுமி, ஆகிய 27 பெயருக்கும், அஸ்வதி முதல் ரேவதி வரையுள்ள 27 நட்சத்திரங்களுக்கும் 1 குடம். ஆக 2 குடங்கள்.

இனி இந்த மணிவிழாப் பூஜா காலங்களில் நடை பெறவேண்டிய பாராயணங்களைக் காண்போம்.

கணபதி வழிபாடு :

1. மகாகணபதி பஞ்சகம்
2. கணபதி உபநிஷதம்
3. கணபதி சகஸ்திர நாமம்
4. கணபதி ஸ்தோத்திரங்கள்.

சிவ வழிபாடு :

1. இந்திராக்ஷி—சிவகவசம்
2. மிருத்யுஞ் ஜெய ஸ்தோத்திரங்கள்.

விஷ்ணு வழிபாடு :

1. மகாவிஷ்ணு சகஸ்திரநாமம்
2. வேங்கடேச அஷ்டோத்திரம்.

லட்சுமி வழிபாடு :

1. மகாலட்சுமி அஷ்டோத்திரம்
2. மகாலட்சுமி ஸ்தோத்திரங்கள்

உமை வழிபாடு :

1. லலிதா சகஸ்திரநாமம்
2. பார்வதி ஸ்தோத்திரங்கள்.

சரஸ்வதி வழிபாடு :

1. சாரதா அஷ்டோத்திரம்
2. சரஸ்வதி ஸ்தோத்திரங்கள்.

மார்க்கண்டேய வழிபாடு :

மார்க்கண்டேய ஸ்தோத்திரங்கள்.

நவக்கிரக வழிபாடு :

நவக்கிரக ஸ்தோத்திரங்கள்,
நாமத்ரய ஸ்தோத்திரங்கள் அன்றியும்,

சதுர்வேத பாராயணம்
ஆகம பாராயணம்
தேவார, திருமுறைப் பாராயணம்
நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாராயணம்

முதலியவை இருநாட்களிலும் தொடர்ந்து முறைப்படி நடைபெறும்.

இங்ஙனம் நிகழும் இந்த மங்கல நிகழ்ச்சியின் நடைமுறை வரிசையை இனிக் காணலாம்.

முந்திய நாள் காலையில்

6-30 ஸ்நான சங்கல்பம்
தம்பதி ஸ்நானம்.

7-30 விநாயகர் வழிபாடு, (விநாயகர் கோயிலில்)
மகாசங்கல்பம், அனுக்ஞை.

8-30 கணபதி ஹோமம்
நவக்கிரக ஹோமம்
நாந்தி சோபனம்

12-30 காலை நிகழ்ச்சிகள் நிறைவு.

முந்தியநாள் மாலையில்

6-10 லட்சுமி பூஜை,
ஆசார்ய வர்ணம்,
யாக பூஜை தொடக்கம்.

9-00 பூர்ணாகுதி
சோடசோபசார தீபாராதனை
மாலை நிகழ்ச்சிகள் நிறைவு.

மணிவிழா நாளில் காலை :

6-30 யாக பூஜை தொடக்கம்.

11-00 மகா பூர்ணாகுதி
சோடசோபசார தீபாராதனை
யாகபூஜை நிறைவு.

12-00 மந்திர கலசாபிஷேகம்,

12-00 மூத்தோர், பெரியோரிடம் ஆசி பெறல்
இளையோர்க்கு ஆசி வழங்கல்
தேவாலய தரிசனம்.

இவ்வண்ணம் கொண்டாடுவதால் இறைவன் அருளும் பெரியோர் ஆசியும், மனச் சாந்தியும், பந்து மித்திரர் கள் இணக்கமும் நிரம்பி உள்ளத்தில் புதிய உணர்ச்சியும் உடம்பில் புதிய தெம்பும் வளரும். தத்துவ நெறியாலும் விஞ்ஞான அடிப்படையாலும், சமுதாயக் கண்ணோட் டத்தாலும் இவ்விழா பொருள் நிரம்பிய ஒன்றாகும்.*

□ □ □

* இக்கட்டுரை கோவை திரு. G. K. சுந்தரனார் தம் மணிவிழா மலரில் வெளிவந்தது.

18. நான் ஒரு கம்பன் அடிமை

எங்கள் குடும்பத்தில், என் தந்தையார் காலத்தில் புரட்டாசி மாதந்தோறும் கம்பராமாயணம் படித்தல் வழக்கம். பக்கத்தில் உள்ளவர்கள் பலரும் கதை கேட்க வருவார்கள். பட்டகசாலையில் உள்ள மாடத்தில் இராமர் பட்டாபிஷேகப் படம் கொலுவிருக்கும். அதற்குப் பலவகை அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கும். அதன் எதிரில் மரத்தாலான சிக்குப்பலகையில் கம்பராமாயண வசனப் புத்தகம் மஞ்சள் - குங்குமம் - மாலை சார்த்தப் பெற்று மங்கலமாக அமர்ந்திருக்கும். இராமர் படத்திற்கு வழிபாடு நடந்து தீபாராதனை காட்டப்பெறும்; அதன் பிறகு கம்பராமாயணப் புத்தகத்திற்கும் அப்படியே நடைபெறும்.

எல்லாம் ஆனபின் என் தந்தையார் அல்லது என் சிறிய தந்தையார் இறை வணக்கம், பல சுருதி முதலிய பாடல் களைப் படித்தபின், இராம கதையை முதல் நாள் விட்ட இடத்திலிருந்து படிப்பார்கள். இருவருக்கும் இயலாத வேளைகளில் என்னைப் படிக்கச் சொல்வார்கள்.

கம்பன் கவிகளில் சில ஆங்காங்கே காணப்படினும், கதை முழுவதும் வசனமாகவே இருக்கும். பெரியவர்கள் படிக்கக் கேட்கும் பொழுதும், நானே படிக்கும் பொழுதும் பலவித ஐயப்பாடுகளும், குழப்பங்களும் ஏற்படும். அவற்றை யெல்லாம் பெரியவர்களிடம் கேட்பதற்கு அச்சம். முறையாக ஆசிரியரை அடுத்து, இலக்கிய இலக்கணப் பாடம் கேட்காத குறை வேறு. இளமைத் துடிப்பும் எதையும் கிண்டல் செய்யும் இயல்பும் சேர்ந்துகொண் டிருந்த காலம். ஆனாலும் தமிழ் படிக்கவேண்டும் என்ற

ஆர்வத்தை எந்தை பிரான் கம்பன் எப்படியோ தூண்டி விட்டுவிட்டான்.

என் பன்னிரண்டாம் ஆண்டில் எங்கள் குடும்ப ஆதரவு பெற்று வாழ்ந்த பண்டிதர். சு. சிதம்பரம் ஐயர் அவர் களிடம் தமிழ்ப் பாடம் கேட்கத் தொடங்கினேன். ஆறுமுக நாவலர் பால பாடங்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, இலக்கணச் சுருக்கம் முதலியவற்றைப் பாடங் கேட்டேன். பதினாலாவது ஆண்டில் தந்தையா ருடன் பர்மாவுக்குப் புறப்பட்டுவிட்டேன்.

பர்மாவில் இரங்கூனில் மூன்றாண்டுகள் வசித்தேன். அப்பொழுது சில தோழர்களின் உதவியுடன் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கத்தைத் தொடங்கினேன், அதில் ஞாயிறுதோறும் ஏதாவது சொற்பொழிவு நடைபெற ஏற்பாடு செய்தேன். பெரியவர் ஒருவரைத் தலைமைப் பேச்சுக்கும் மற்றப்படி நாங்கள் இரண்டு மூன்று பேச்சுக்கும் தயார் செய்வோம். கட்டுரைக் கோவை அல்லது ஆனந்தபோதினி போன்ற பத்திரிகை களில் காணப்பெறும் சிறு கட்டுரைகளை மனப்பாடம் செய்து அதைச் சொற்பொழிவாகச் செய்துவந்தோம். ஓராண்டுக்குப் பிறகு நாமே ஏன் நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்துக்கொண்டு பேசலாகாது என எண்ணினேன். நூல்கள் வேண்டுமே. அதற்கு வழி?

இரங்கூனில் ‘நவீன கதா புத்தகசாலை’ என்ற பெயரில் ஒரு நல்ல புத்தகக் கடை இருந்தது. தேசபக்தி மிக்க காந்தியடியாரான, வலங்கைமான் இஸ்லாமியர் ஒருவர் அதை நடத்திவந்தார். அங்கு நல்ல தமிழ் நூல்கள் கிடைக்கும். அவரிடம் எனக்கு வேண்டிய புத்தகங்களை யெல்லாம் தவணை முறையில் வாங்கிச் சேர்த்தேன். அந்நாளில் நல்ல புத்தகங்களே வெளிவந்தன; விலையும் மலிவு. எனவே மூன்றாண்டுகளில் சுமார் 800 புத்தகங்கள் சேர்ந்தன. இவ்வளவுக்கும் பணம் வேண்டுமே?

எனக்கு காலை மாலைப் பலகாரம், காபிக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று தருவார்கள். காலை மாலைப் பலகாரங்களைத் துறந்து அந்த ரூபாய்க்குப் புத்தகங்களே வாங்கினேன். அப்படி வாங்கிய நூல்களை நானாகவே முயன்று கற்றேன்.

என் இளமைக் காலத்தில் காரைக்குடியில் ஒரு சிறந்த கம்பன் அறிஞர் இருந்தார். அவர் தன வைசிய ஊழியன் பத்திரிகையில் உதவி ஆசிரியர் ஆகப் பணியாற்றி வந்தார். நல்ல தமிழ்ப் புலமையுடையவர். ஆஜானுபாகுவான உடம்பு. நீண்ட முகம்; பரந்துயர்ந்த நெற்றியில் பட்டை நாமம் பளிச்சிடும். மிக்க ஆசார சீலர். கம்பனை நன்கு தோய்ந்து கற்று ஆய்ந்து அருமையாக உரையாற்றுவார். அக்காலத்துக் கம்ப ராமாயணப் பிரசங்கிகளில் தலையானவர் அவர் என்பது என் கருத்து. கம்ப நாடர் என்றொரு மாத இதழ் வெளியிட்டு வந்தார். அதில் கம்பனைப் பற்றிய கட்டுரைகளும், ஆராய்ச்சிகளும் அவரே எழுதி வெளியிட்டுவந்தார். வான்மீகத்துடன் ஒப்பிட்டுக் கம்பனின் மேம்பாட்டினை மனமாரப் பாராட்டுவார். அவர்தான் எனக்குக் கம்பனை இனம் காட்டியவர் என்பேன். அவருடைய நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு: ஏதோ ஒரு கட்டத்தை வான்மீகத்துடன் ஒப்பிட்டுக் கம்பனின் மேன்மையை உயர்த்திப் பாராட்டினார். அப்பொழுது அச்சபையிலிருந்த வடமொழி வல்ல அந்தணர் ஒருவர் எழுந்து,

"கம்பனை வான்மீகியினும் உயர்ந்தவர் என்று ஒரு பிராமணர் கூறலாமா?" என்று ஒருவகை ஆவேசத்துடன் கேட்டார். அதற்கு அவர் விடுத்த பதில் என்னைப் பெரிதும் ஆட்கொண்டுவிட்டது.

"கம்பனின் உண்மையான உயர்வைக் கூற என் பிராமண நிலை தடையாக இருப்பின், ஸ்வாமி! என் பூணூலை இப்பொழுதே அறுத்தெறிந்துவிடுகிறேன்" என்பதுதான் அவர் கூறிய பதில்.

அதன் பிறகு வ. வெ. சு. ஐயர்; பல மொழி கற்றவர்; சிறந்த தேச பக்தர்; திறனாய்வுத் துறையின் முன்னோடி; கம்பனை உலகறியச் செய்த உத்தமர். அவர் காரைக்குடிக்குப் பலமுறை வந்துள்ளார். அப்பொழுதெல்லாம் கம்பன் பெருமையை எப்படியெல்லாமோ கூறி என்னை ஆட்கொண்டவர்.

"கம்பன் காப்பியத்திற்கு வான்மீகம்தான் மூலம்; ஆனால் கம்பன் வான்மீகத்தை மொழிபெயர்க்கவில்லை. முனிவன் படைத்த இறவாக் கதையை மட்டுமே அவன் எடுத்துக்கொண்டான். ஆனால் அந்தக் கதைப்போக்கை மிக நுட்பமாகப் பின்பற்றிக்கொண்டான் என்றாலும் கம்பராமாயணம் முற்றிலும் ஒரு மூலக் காப்பியமே ஆம்; அது வான்மீகியின் ராமாயணம் அல்ல; ஆனால் அஃதொரு மகோன்னதமான கவிதை;

கம்பனுடைய சந்நிதானத்திலே உலக மகா கவிகளான மில்டன், ஷேக்ஸ்பியர், தாந்தே, விர்ஜில், ஹோமர், பைரன், ஷெல்லி முதலியவர்கள் மட்டுமின்றி ஆதி கவியான வான்மீகியும் முடிசாய்த்து அடிவணங்கி நிற்கவேண்டியவர்களே!" என்றெல்லாம் அளந்து கணித்து அறுதியிட்டு வ.வெ.சு. ஐயர் கூறும்பொழுதுதான் கம்பன் வான்முட்டும் பெரும் புகழை அடியேனால் அறிய முடிந்தது.

அதன் பிறகு திருவாளர் பி.ஸ்ரீ. குமரன் பத்திரிகையின் துணை ஆசிரியராய் வந்து காரைக்குடியில் பல ஆண்டுகள் வசித்துவந்தார். அக்காலத்தில் அவர் பெரும்பாலும் எங்கள் குழுவிலேயே இருந்துவந்தார். பேச்செல்லாம் தமிழ்; நாடு; இலக்கியம்; காந்தி! இப்படியே போய்க்கொண்டிருக்கும். கவிதைகளை, சிறப்பாகக் கம்பன் கவிதைகளை உள்ளம் கொள்ளுமாறு எடுத்துரைப்பார். சுவையாகவும், நகைமுகத்துடனும் உரையாடல் நடைபெறும். குமரனில் கம்பன் கட்டுரை வாரம் தவறாமல் வரும்.

பி. ஸ்ரீ யின் கையெழுத்து நன்றாக இருக்காது. அதனால் அவர் சொல்லப் பிறர் எழுதுவது பெரும்பாலான வழக்கம். அப்படி நான் எழுதிய நிலையும் உண்டு. அதனால் கம்பன் கருத்தாழம் எனக்குப் புலப்படலாயிற்று.

அந்நாளில் பி. ஸ்ரீ யிடம் பேசிக்கொண்டிருந்த காலங்களில் "திருநெல்வேலியில் டி.கே.சி. என்றொரு பெரியவர் இருக்கிறார். கவிதை நயத்தைச் சுண்டிப்பார்த்து அதன் அருமைப்பாடுகளை விளக்கிக்காட்டி, கேட்போர் உள்ளத்தில் ரசனை ஊட்டுவதில் அவர் ஒரு ரசவாதி" என்று அடிக்கடி கூறுவார். அதன் பயனாக எனக்கு டி.கே.சி.யிடம் காணாமலே காதல் அரும்பிற்று.

இந்த நிலையில் மீண்டும் பர்மா சென்றேன். இப்பொழுது இரங்கூனுக்கடுத்த தோங்குவா என்ற ஊரில் வாழ்த்துவந்தேன். எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் சிவகங்கையைச் சேர்ந்த சேதுப்பிள்ளை என்பவர் ஒரு செட்டியார் கடை மேலவராக இருந்துவந்தார். அவர் ஒரு பெரும் புலவர் என்பதைப் பின்னர்தான் அறிந்தேன். அவரிடம் ஏதாவது பாடம் கேட்கலாமே என்று எண்ணி அவரை அணுகினேன். மிக்க அன்புடன் இசைந்தார்கள். தினமும் காலை பாடம் கேட்பது என்று ஏற்பாடாயிற்று. எடுத்த எடுப்பிலேயே நூலைத் தொடங்கிவிட்டார். ஆம்; பாடம் கேட்க நான் கொண்டுசென்ற நூல் கம்பராமாயணம. "தருகை நீண்ட, அஞ்சிலே ஒன்று பெற்றான் என்பன கம்பன் பாடலாகா; உலகம் யாவையும் என்று தொடங்கும் பாடலே அவன் பாடிய முழுமுதல் வணக்கம்" என்றார். இப்படியொரு பட்டிக்காட்டுக் கர்நாடக உருவத்துக்குள் எப்படிப்பட்ட அறிவின் தெளிவு; திறனாய்வுச் செறிவெல்லாம் பதுங்கிக் கிடக்கின்றன என்று வியந்து நின்றேன்.

சுமார் ஏழெட்டு மாதங்களே அப்பெருமான் அடிக்கீழ் இருந்து பாடம் கேட்டேன். என்ன அறிவு; அப்பப்பா! துணைநூல் இன்றி விளக்க நூல் ஏதுமின்றி இலக்கணச்

சூத்திரங்கள் உள்பட எல்லாவற்றையும் மனப் பெட்ட கத்தில் அடுக்கிவைத்துக் காத்துவந்திருக்கிறார்.

'தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், வீர சோழியம் போன்ற நூல்கள் மட்டுமின்றி உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள் சூத்திரங்களையுமன்றோ மனத்தகத்து அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்' என்று பல முறை வியந்து மலைத்து நின்றிருக்கிறேன். அந்த சில மாதங்கள் என் வாழ்வுக்கு வழிகாட்டி, தொண்டுக்குக் கைகொடுத்த காலம் என்று என்றென்றும் அவரை வழிபட்டுக் கொண்டிருக் கிறேன்.

அவர் என்னைவிட்டுப் பிரிந்து தாய்நாடு திரும்பியபின் சுமார் மூன்றாண்டு கழித்து யானும் தாய்நாடு வந்து அவரைச் சிலமுறை தரிசித்தேன். கம்பன் திருநாள் தொடங்குவதற்கு முன்னமேயே அவர் அமரராகிவிட்டார்.

தாய்நாடு திரும்பியதும் அரசியல் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுவிட்டேன். அரசியல் மேடைகளிலும் கம்பனைப் பற்றிப் பேசுவது இயல்பாகிவிட்டது. 1938 இறுதியில் ரசிகமணி டி.கே.சி. அவர்களைச் சந்திக்கும் பேறு கிட்டிற்று. கம்பன் திருநாளைக் காரைக்குடியில் நடத்த ஏற்பாடுகள் செய்தேன் அப்பொழுது கம்பன் திருநாளைக்கு மிகச் சிலரே ஒத்துழைப்பு நல்கினர். அவர்களுள் திரு. சொ. முருகப்பா, அரு. சோமசுந்தரம், VR. M. செட்டியார், நீலாவதி-ராம சுப்பிரமணியம் தம்பதிகள் ஆகியோரே ஒத்துழைப்பு நல்கினார்கள். ரசிகமணி டி.கே.சி. அவர்களே நான்கு நாளும் தலைமை தாங்கினார்கள். சொ. முருகப்பா, அரு. சோமசுந்தரம், VR. M. செட்டியார், நீலாவதி அம்மையார், M.S. பூர்ணலிங்கம் பிள்ளை, ப. ராமசாமி முதலியோருடன் யானும் பேசினேன். இப்படியாக முதல் ஆண்டுக் கம்பன் திருநாள் 1939-ல் நிகழ்ந்தது.

அதன் காரணமாக திரு. டி. கே. சி. அவர்களின் தொடர்பு செட்டிமார் நாட்டிற்கே வலுவாக ஏற்பட்டது.

காரைக்குடிக்கு அடிக்கடி வரத் தொடங்கினார்கள். பல சொற்பொழிவுகளை நடத்தினார்கள். வகுப்புகளும் நடத்தினார்கள். கம்பன் பித்தும், கவிதை வெறியும் பெருகத் தொடங்கின. கம்பனுக்குள்ள பெருமைகளை என்னைப் போன்றே ஏராளமானவர்கள் அறியச் செய்த தனிப் பெருமை ரசிகமணி டி.கே.சி. அவர்கட்கே உண்டு.

"காரைக்குடியில் கம்பன் பணி தொடங்கிவிட்டது. இனி அது உலகெங்கும் பரவிவிடும்" என்று மனமாரப் பாராட்டி அவர்கள் கூறிய ஆசியும் வாழ்த்துமே கம்பன் கழகத்துக்கு நீரும், உரமுமாய் அமைந்து வளர்த்து வருகிறது. சான்றோர் வாக்குப் பொய்க்காதன்றோ?

இங்ஙனம் வளர்ந்து எளியேனின் கம்பன் பக்தி ஆராய்ச்சிப் பேரறிஞர். பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை அவர்களால் மேலும் வளம்பெற்றது. அவர்களுடன் கம்பன் பதிப்புப் பற்றிச் செய்த சர்ச்சைகள் எல்லாம் நல்ல பாடங்களைத் தேர்ந்தெடுக்கவும், கம்பனின் பல்துறைப் புலமைகளையெல்லாம் அறியவும் எனக்குச் சுடர்விளக்காய் நின்று உதவுகின்றன.

கம்பனுக்கு ஒரு நல்ல பதிப்பு மலிவு விலையில் கிடைக்கச் செய்யப் பெருமுயற்சி செய்தவர் மர்ரே கம்பெனி அதிபர் திரு. எஸ். ராஜம். பாடாந்தரம் கண்டு நல்ல பாடம் தேர்ந்தெடுப்பது உள்படப் பதிப்பு வேலையில் என்னை ஆட்படுத்தியவர் அவரே! கல்விக் கடல் இராமராசன் முதலான நல்ல புலவர்கள் பலருடைய துணையுடன் அப்பணியில் ஈடுபட்டேன். எண்ணற்ற ஏட்டுச் சுவடிகளும் அச்சுப் பிரதிகளும் ஒப்புநோக்கப்பட்டன. ஏற்கனவே எடுத்த பாடக் குறிப்புகளையும், புதிதாக நாங்கள் எடுத்த பாடக் குறிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். பல்வேறு காரணங்களைக்கொண்டு சரியான பாடத்தை ஒருவாறாக நிர்ணயித்தோம். பொருத்தமில்லாத பாடல்களை அடைப்புக் குறிக்குள் அடக்கியோ அன்றிப் பிற்சேர்க்கையிலோ வெளியிட்டோம். இப்படிப் பணியாற்ற அடியேற்குக் கிடைத்த

வாய்ப்பு ஒரு பெரும் பேறாகும். அதனாற் கிட்டியஅனுபவமும் தெளிவும் எழுதிக்காட்ட முடியாத ஒன்றாகும். எந்தை பிரான் கம்பன் அருள்தான் என்னை எப்படியெல்லாமோ ஈடுபடுத்தி என் பணிக்கு ஆக்கம் அளித்துவருகிறது.

இங்ஙனம் பல பெரும் அறிஞர்களின் கூட்டுறவும், கம்பன் அடியார்களின் அன்பும் ஏழையேனைக் கம்பன் அடிப்பொடி ஆக்கின. இவர்களிட்ட பிச்சையாலேயே கம்பனின் மேதா விலாசத்தையும் கவிதாசன்னதத்தையும், படைப்பாற்றலையும், பல்துறைப் பலமொழிப் புலமையையும் அடியேனும்கூடக் கண்டு மகிழமுடிகின்றது. இப்பொழுதெல்லாம் எளியேன் கம்பனை அணுகும்போது அவன் பெருமைக்கு முன் என் சிறுமையும் தோன்றுவதால் ஒருவித பயமே, பத்தியால் ஏற்பட்ட ஓர் அச்சமே (Reverential fear) என்னை ஆட்கொண்டு விடுகின்றது. எனவே இன்று நான் ஒரு கம்பன் அடிமை!

கம்பனெனும் கார்முகில்பெய்
கவிமழைநீர் திரண்டோடி
ஐம்புலனாம் நிலம்திருத்தி
அன்பறமாம் பயிர்வளர்த்துத்
தம்பொருவில் 'இராமவ
தாரம்' எனும் தனியாறாய்ப்
பம்புதமிழ் எனும்கடலில்
பரந்துநலம் சுரந்திடுமால்!

□ □ □

* இக் கட்டுரை புதுச்சேரி கம்பன் கழக மலரில் (1977) வெளிவந்தது.

கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்